
# மனதைக் கழுவும் மகா சமர்த்தர்கள்

## சீர்மியச் சிறுகதைகள்

கோகிலா மகேந்திரன்



# மனதைக் கழுவும் மகா சமர்த்தர்கள்

*சீர்மியச் சிறுகதைகள்*

தொகுப்பாசிரியர்

## கோகிலா மகேந்திரன்

**மணிமேகலைப் பிரசுரம்**

தபால் பெட்டி எண் : 1447
7 (ப.எண்.4), தணிகாசலம் சாலை,
தியாகராய நகர், சென்னை – 600 017.
தொலைபேசி : 2434 2926, 2434 6082
மின் அஞ்சல் : manimekalai1@dataone.in
இணைய தளம் : www.tamilvanan.com

## நூல் விவரம்


| | | |
|---|---|---|
| நூல் தலைப்பு | ➢ | மனதைக் கழுவும் மகா சமர்த்தர்கள்! |
| தொகுப்பாசிரியர் | ➢ | கோகிலா மகேந்திரன் |
| மொழி | ➢ | தமிழ் |
| பதிப்பு ஆண்டு | ➢ | 2008 |
| பதிப்பு விவரம் | ➢ | முதல் பதிப்பு |
| உரிமை | ➢ | தொகுப்பாசிரியருக்கே |
| தாளின் தன்மை | ➢ | 11.6 கி.கி |
| நூலின் அளவு | ➢ | கிரெளன் சைஸ் (12 ½ X 18 ½ செ.மீ.) |
| அச்சு எழுத்து அளவு | ➢ | 11 புள்ளி |
| மொத்த பக்கங்கள் | ➢ | 164 + viii = 172 |
| நூலின் விலை | ➢ | ரூ.50.00 |
| அட்டைப்பட ஓவியம் | ➢ | மோகன் கிராபிக்ஸ் |
| லேசர் வடிவமைப்பு | ➢ | எக்ஸ்பிரஸ் கம்ப்யூட்டர் |
| அச்சிட்டோர் | ➢ | பி.வி.ஆர். பிரிண்டர்ஸ், சென்னை-14. |
| நூல் கட்டுமானம் | ➢ | தையல் |

# முன்னுரை....

கலை என்பது ஓர் உணர்வினை அல்லது பெறுமானத்தினை வெளிப்படுத்துவதிலும் தொடர் புறுத்துவதிலும் மனிதத்திறன் வெளிப்படும் முறை. சிறுகதை எழுதுவது ஒரு கலை. நெஞ்சின் அவலத்தைக் குறி வைத்து ஓடி அடைந்து காட்டுதல் சிறுகதை என்று புதுமைப்பித்தன் கூறுவார். சமூக விதிகளைப் போலவே கலை வடிவங்களும் காலத்தோடு மாறுவன. அதீதத் தன்மை, இலட்சியத் தன்மை என்று தொடங்கிய சிறுகதை வரலாறு இயல்பான தன்மை என்ற தளத்தில் நீண்ட காலம் நிலை பெற்று இப்போது யதார்த்த விரோதத் தன்மைக்குள் குடி புகுந்து விட்டது. எது எப்படி இருந்தாலும் இலக்கிய ஆக்கம் என்பது ஒரு பொறுப்புள்ள சமுதாயப் பணி என்பதை யாரும் மறுக்க முடியாது. சிறுகதை எழுதும் எழுத்தாளரின் ஆழ் மனதில் சமுதாயப் பணி, சமூகச் சீர் திருத்தம், சமூக முன்னேற்றம், சமூக மேம்பாடு, சமூக அபிவிருத்தி என்ற ஏதோ ஒரு விடயம் இருக்கத்தான் வேண்டும்.

இந்தத் தொகுதியில் உள்ள கதைகள் அனைத்தும் 'சீர்மியம்' என்ற கருப் பொருளைக்

கொண்டவை. இக்கதைகள் உருவான பின்னணியைக் குறிப்பிட வேண்டும். எமது நாடு அனர்த்தங் களுக்குப் பெயர் போனது. கடந்த இரு தசாப்தங் களுக்கு மேலாகத் தொடரும் உள் நாட்டு யுத்தமும் மற்றும் சுனாமி, சூறாவளி, வெள்ளம், மண் சரிவு போன்ற இயற்கை அனர்த்தங்களும் மனங்களைப் பாதிக்கிற போது பாடசாலை மாணவர்களின் கற்றல் அடைவு மட்டம் வீழ்ச்சி காண்பது அவதானிக்கப் பட்டது. இந்த வகையிலும் மற்றும் பொதுவான நெருக்கீடுகளை எதிர் கொள்ளும் திறனைப் பெறும் வகையிலும் பாடசாலைகளில் சீர்மிய ஆசிரியர்களை நியமிக்கும் செயற்றிட்டம் கல்வி அமைச்சு மட்டத்தில் தொடங்கப்பட்டது.

நான் வலயமட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளராக இருந்த காலத்தில் ஏறத்தாழ 150 சீர்மிய ஆசிரியர்களையும் 1500 நட்புதவி ஆசிரியர் களையும் பயிற்றுவிக்கும் திட்டத்தில் இணைப் பாளராகப் பணிபுரிய நேர்ந்தது. ஏற்கனவே சாந்திகத்தில் சீர்மியர் பயிற்சி நெறியை முடித்து சாந்திகத்தினால் பயிற்றுவிக்கப்படும் இளம் சீர்மியர்களுக்கு வளவாளராகப் பணிபுரிந்து வந்த அனுபவத்தோடும் மனநல வைத்திய நிபுணர் பேராசிரியர் தயா சோம சுந்தரம் அவர்களின் மேலான வழிகாட்டலோடும் இப்பணியை மிகுந்த மகிழ்வுடன் செய்தேன்.

பயிற்சி பெறும் ஆசிரியர்கள் பயிற்சிக் காலத்தில் பாதிக்கப்பட்ட மாணவர்களுடன் கலந்துரையாடுவர். வதிவிடப் பயிற்சி என்பதால் முன்னிரவு வேளைகளில், விரிவுரைகள் முடிந்த பின், பல்வேறு சிகிச்சை முறைகளையும் அவர்கள் செயல் முறையில் கற்பர். குறிப்பாக வெளிப் பாட்டுச் சிகிச்சை பற்றிய கற்றலுக்காக ஆசிரியர்கள் படம் கீறுவர், பாடுவர், ஆடுவர், நாடகம் செய்வர், சிறுகதை, கவிதைகளும் எழுதுவர். இப்படியாகச் சிறுகதை எழுதும் திறன் கற்பிக்கப்படும் போது தமது சொந்த உணர்வுகளை நல்ல முறையில் வெளிக் கொணரவும், தாம் உதவிய மாணவர் பற்றிய உணர்வுகளை வெளிக் கொணரவும் எப்படி இதனை ஒரு பொருத்தமான வெளிப்பாட்டுக் கலையாகக் கொள்ள முடியும் என்பது கற்பிக்கப் பட்டது. பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா கவிஞர் சோ.பத்மநாதன் போன்ற சிறந்த வளவாளர் களோடு சேர்ந்து நாமும் அவர்களை எழுத வைத்தோம். அப்போது அருமையான பல சிறுகதைகள் வந்தன.

அவற்றின் கருப் பொருள், யதார்த்தமானது. அப்பிரச்சனை கையாளப்பட்ட முறை விஞ்ஞான பூர்வமானது. எமது கலாசாரத் திற்குக் கொஞ்சம் புதிதாக இருக்கின்ற உளவியல் சீர்மியம் பற்றிய தெளிவான விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்தக்

கூடியவை இக்கதைகள். இவை உரிப் பொருளால் சிறக்கும் கதைகள் என்பதில் அபிப்பிராய பேதம் இருக்க முடியாது.

அந்த வகையில் எனது சில கதைகளோடு மயூரன், புவிராஜா, சி.கதிர்காமநாதன், செல்வி, பகீரதி, தமயந்தி ஆகிய சிறுமியர்களின் கதைகளும் இத் தொகுதியை அலங்கரிக்கின்றன. இப்படி ஒரு தொகுதியை வெளியிட வேண்டும் என்ற எண்ணக்கருவைக் கொண்டிருந்தார் பேராசிரியர் தயா சோமசுந்தரம் அவர்கள். அவர் இப்போது அவுஸ்திரேலியாவில் வாழ்ந்து கொண்டிருந்தாலும் எனது இந்த முயற்சிக்கு ஆசி வழங்குவார். இந்த நூலை அழகாக வெளிக்கொணரும் மணிமேகலைப் பிரசுரத்தாருக்கு இந்தச் சிறுமியர்கள் அனைவரதும் சார்பில் தொகுப்பாசிரியராகிய யான் எமது ஆழ்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பெற்றோர்களே, நீங்கள் கட்டாயம் படிக்க வேண்டிய ஒரு வித்தியாசமான சிறுகதைத் தொகுதி இது.

அன்புடன்

**கோகிலா மகேந்திரன்**

70, பசல்ஸ் ஒழுங்கை
கொழும்பு - 06

# பொருளடக்கம்


1. மனதையே கழுவி..... -------------------------- 1

2. ஸ்கொலர்சிப்... ------------------------------ 15

3. அவளால முடியும் ---------------------------- 24

4. உங்களுடன் இருக்கிறேன்..... ----------------- 33

5. வருத்தம் அவளுக்கல்ல ------------------------ 46

6. மானுடம் செத்துப்போன.... ------------------- 56

7. பூவொன்று புயலாகிறது... --------------------- 63

8. அப்பா மாறுவாரா? -------------------------- 73

9. உலகங்கள் மாறும் ---------------------------- 83

10. பிரிவு ---------------------------------------- 99

11. கண்கள் விரியட்டும் -------------------------- 105

12. வலி ------------------------------------------ 124

13. எனக்குள் ஒருவன் ---------------------------- 132

14. கருகிக் (கருக்கப்பட்டுக்) கொண்டிருக்கும் பூக்களில் ஒன்று -------- 138

15. பிறழும் நெறிகள் ----------------------------- 142

16. பிறழ்வின் தோற்றம் --------------------------- 157

# மனதையே கழுவி...

சூரியன் சீறிச் சினந்தபடி சிவப்புப் பந்தென எழுந்துவிட்ட ஒரு காலைப் பொழுதில், நான் அந்தப் பிரபல கல்லூரியின் அதிபர் அறையினுள் (குளிர்ந்த வாடை போல் - மன்னிக்கவும் தவறுதான்) நுழைந்தேன். எனக்கும் கொஞ்சம் மதிப்பு இருக்கத் தான் செய்தது. அதிபர் கதிரையைக் காட்டிச் சிரிக்க நானும் பெருமையுடன் அமர்ந்து கொண்டேன்.

"என்ன விஷயம்?"

"இல்லை.... ஒரு சின்ன விஷயந்தான்... மாவிட்ட புரத்திலை இருந்து இடம் பெயர்ந்த ஒரு பிள்ளை... சரியான கஷ்டம். நான் ஒரு கவுன்சிலர் எண்டு என்னை நம்பிச் சொன்ன விஷயங்களை உங்களிட்டைச் சொல்லப் பிடாது... எண்டாலும் சொல்லிறன்..."

"சொல்லுங்கோ!"

தன்னைச் சுற்றி ஒரு வட்டம் வரைந்து கொண்டு எதிலும் ஒட்டாமல் நடப்பது போல் நடந்து வந்து அவள் எனக்கு முன் அமர்ந்தாள். அவளின் கழுத்து வளைவில் மட்டும் தான் இளமை நெடி அடித்தது.

முகத்தைப் பார்த்தேன். தனிமை, ஆதங்கம், அவமானம், ஏக்கம், சோர்வு, வெறுப்பு, விரக்தி இவற்றில் ஒன்று அல்லது இவற்றில் பலவற்றின் சேர்வை! அந்த முகத்தின் மொழியற்ற செய்தியை என்னால் சரியாக வாசிக்க முடியவில்லை. மூலகங்களில் அடர்த்தி கூடியது எது? ஒஸ்மியமா? பாதரசமா? இரசாயனவியல் எல்லாம் ஒழுகிப்போய் நீண்ட காலம்! ஓ.... மனித மனத்தின் கூறுகள் மிகப் பயங்கரமான அடர்த்தி கொண்டவை!

"தங்கச்சி சொல்லுங்கோ" வட்ட விழிகள். வரம்பாய் இரு புருவம், கண்ணுக்குள் அம்பு மாதிரித் துளைக்கும் பார்வை. இவை அவளுடையவை!

"என்ரை பிள்ளை எப்பிடி எண்டாலும் படிக்க வேணும். என்னைப் போலை படிக்காமல் இருந்திட்டுப் பிறகு கஷ்டப்படப்பிடாது."

அவளிடமே ஒரு குழந்தை மனம் நிறைந்து வழிந்தது. அவளுக்கும் ஒரு குழந்தையா?

அதைச் சொல்லும் போதே அழுகை வெடித்துப் பொங்கிச் சரிந்தது. என்னைப் பார்த்தபடி இருந்த முகத்தை எதிர்ப் பக்கம் திரும்பி வழிந்த கண்ணீரைத் துடைத்தாள். முள் நிறைந்த வாழ்வுப் பாதையில் முதல் சுவட்டைக் கண்டிருப்பாள்!

ஸ்ரூலில் இருந்த கைலேஞ்சியை எடுத்துக் கொடுத்து அந்த அழுகைக்கு நேரம் கொடுத்த நான், கொஞ்சம் அருகில் சென்று அவளின் தோளைத் தொட்டு எனது ஒத்துணர்வைக் காட்ட முயன்றேன். பிறரின் தொடல் களுக்கு அருகதை அற்ற பிறவி தான் என்பது போல் நான் தொட்ட தோளைச் சற்று இழுத்து...

"என்ரை சகோதரங்கள் ஒருத்தரும் எனக்குக் கிட்டவும் வாறதில்லை...." என்றாள். இதயத்தில் வெகு நாளாய் எரிந்த நெருப்புத் தரைமீது வைக்கப் படுகிறதோ?

சிறிது தயங்கினாள். நான் தன்னுடன் வருகிறேனா என்று 'செக்' பண்ணவோ!

"உங்கடை பிள்ளையைப் படிப்பிக்க வேணும். ஒருத்தரும் உதவி செய்யாத படியால் அது உங்களுக்குக் கஷ்டமா இருக்கு."

நான் அவளின் உணர்வுகளையும் மீள எடுத்துக் கூறி அவளுடன் அருகே நடந்து கொண்டிருப்பதை உறுதி செய்தேன்.

எங்களைச் சுற்றி இருந்த பச்சை வண்ணம் பூசப்பட்ட சுவர்களை வெறித்தபடி சிறிது நேரத்தைச் செலவழித்தாள். சுவரில் தொங்கிய அழகான பூக்கள் கொண்ட கலண்டரைத் தாண்டி அறைக்கு வெளியே நின்ற பட்ட மரம் ஒன்றில் அவள் பார்வை நிலைத்தது.

"அந்த மரம் ஒரு விதவை மாதிரி நிக்குது. அதுக்கு மேலை இருக்கிற வெள்ளைக் குருவி அதுக்கு ஆறுதல் சொல்லுது" என்று சொல்லும் போது அவளின் கண்ணிமை மயிரில் புல்லின் மேல் பனித்துளி போல் நீர்!

"நீங்கள் படிக்கேல்லை எண்டு சொல்றீங்கள். ஆனால் ஒரு கவிஞனைப் போலை நல்ல வடிவாக் கதைக்கிறீங்கள். ஒரு வேளை நான் அந்த வெள்ளைக் குருவி மாதிரி இருப்பன்."

அவளுடைய குறியீட்டை நான் புரிந்து கொண்டதை உணர்த்தினேன்.

மெதுவாகச் சிரித்தாள். விரக்தி கலந்த புன்னகை தான், என்றாலும் அழகாக இருந்தது. அப்போது தான் அவளது உடையைக் கவனித்தேன். மெல்லிய மஞ்சளும் பச்சையும் சேர்ந்த எளிமையான சட்டை என்றாலும் அந்தத் தெரிவில் ஒரு கலைத்துவம் இருந்தது.

"நான் விதவையோ இல்லையோ எண்டு எனக்குத் தெரியாது. அவரும் நானும் விரும்பித்தான் கல்யாணம் செய்தனாங்கள்.... அதுதான் என்ரை சகோதரர்களுக்குக் கோபம்... தொண்ணூறாம் ஆண்டு சண்டை தொடங்கேக்கை வவுனியாவுக்குப் போனார்... திரும்பி வரேல்லை. சிலபேர் சொல்லிச்சினம் வவுனியாவிலை அவரைக் கண்டதெண்டு. நானும் செஞ்சிலுவைச் சங்கம் எண்டும் அதெண்டும் இதெண்டும் அலையாத இடம் இல்லை. காலும் ஓய்ஞ்சு போச்சு. நாலு வரியம் முடிஞ்சுது. இனிக் காவல்

இருக்கேலாது... சீலை உடுத்தாத்தானே வெள்ளைச் சீலைக்கு மாற வேணும்... எனக்குச் சீலை உடுக்க வழியில்லை."

கத்தியால் கீறிய ரத்தக்கட்டி போல் ஒவ்வொரு சொல்லும் வெளிவந்தது.

நான் இன்னும் சற்று அவளை நோக்கிச் சரிந்து எனது நெருக்கத்தை வெளிப்படுத்த முயன்றேன்.

"உங்கடை அவர் இருக்கிறாரோ இல்லையோ எண்டு தெரியாத நிலைதான் உங்களை ஆகவும் வேதனைப் படுத்துது."

என்னைத் தொடர்ந்து அவள் அந்த நிச்சயமற்ற உணர்வுக்குள் வந்தாள்.

"ஆமி பிடிச்சு எங்கையும் அடைச்சு வைச்சிருக்கிறானோ அல்லது ஆள் இல்லையோ... அல்லாட்டில்..."

"அல்லாட்டில்?"

"எங்கையும் வேற கலியாணம் செய்து என்னையும் பிள்ளையையும் மறந்து விட்டாரோ?"

வானத்தை நோக்கி மிகத் தீனமாய் அவலமாய் ஒரு பெருமூச்சு விட்டாள், தொடர்ந்தாள்.

"திரும்பத் திரும்ப இதை யோசிக்க எப்பிடித் தலையிடி வராமல் இருக்கும்? எனக்கு ஒரே தலையிடி. காலமையும் சமைக்கேல்லை. அரை றாத்தல் பாண் வாங்கி நானும் பிள்ளையும் சாப்பிட்டது. எனக்கு இருபத்தேழு

வயதாகுது.... நான் சாப்பிடாமல் கிடப்பன். அது ஐஞ்சு வயசுப் பாலன்... வயித்தைச் சுருட்டிக் கொண்டு கிடவெண்டால் கிடக்குமோ? நீங்கள் சொல்லுங்கோ அம்மா?"

"சின்னப்பிள்ளை பசி இருக்க மாட்டுது."

எனது பதிலின் பின் நெரிந்த புருவங்களைச் சற்றுத் தளர விட்டாள்.

"பெரியாஸ்பத்திரி டாக்குத்தர் ஐயாட்டைப் போனனான். அவர் மருந்து தரேல்லை. வருத்தம் ஒன்றும் இல்லையாம். மனக் கவலைதானாம். அவர் தான் சொன்னார். உங்களிட்டைப் போகச் சொல்லி."

"ஓ..."

நிச்சயமற்ற தன்மை. இழப்பு. கணவரின் இழப்பை இவள் மனம் இன்னும் முற்றாக ஏற்றுக் கொள்ளவில்லை. இழப்பின் துயரத்தை வெல்லும் படிகளுக்கூடாக இவளை மெதுவாக அழைத்துச் செல்ல வேண்டும் என்று நான் மனதில் எழுதிக் கொண்டேன்.

"இந்தப் பிள்ளைக்கு இரண்டு இடியப்பம் அவிச்சுக் குடுப்பம் எண்டு நேற்று அக்கா வீட்டிலை ஒரு விறகுத் துண்டு எடுத்துப் போட்டன் எண்டு அவ என்னவெல்லாம் பேசினா தெரியுமே? நான் அறுதலியாம்... மூதேசியாம்... நானும் பிள்ளையும் பட்டினி கிடக்க அவைக்குச் சாப்பிடுற சாப்பாடு என்னெண்டு செமிக்கும்? மாவிட்ட புரத்திலை எங்கடை வீட்டிலை இருந்த காவோலை

காணும் சமைக்க. ஆமிக்காறன் வந்தான். அம்மாவையும் விட்டிட்டு உடுத்த துணியோடை ஓடி வந்தம்..."

வார்த்தைகள் காற்றில் தொற்றிக் காற்றையும் பெருமூச்சாக்கின.

"உங்கடை அம்மா, வீடு, வளவு, காணி எல்லாத்தையும் இழந்து வந்திருக்கிற நேரத்திலை அவரும் இல்லாமல் போனதை உங்களாலை தாங்க ஏலாமல் கிடக்கு..."

ஒருவகை நிர்க்கதியான உணர்ச்சியுடன் மீண்டும் அவள் கண்கள் நீரைச் சுரந்தன. இப்போது சற்று நீண்ட நேரமாய் அழுதபடி இருந்தாள். நான் தடுக்காமல் பார்த்துக் கொண்டிருந்தேன். அழுது முடிந்து மீண்டும் அந்த மரத்தை வெறித்துப் பார்த்தபடி யோசனையில் ஆழ்ந்தாள்.

அந்த நாளை அந்த ஏதோ ஒரு நிகழ்வை ஒரு சித்திரத் தொகுதியைப் புரட்டுவது போல மனத்திரையில் காட்சி காட்சியாய்க் கண்டு கொண்டிருக்கிறாளோ?

"நீங்கள் மனதிலை காணுற அந்தக் காட்சியைப் பற்றி எனக்கும் சொல்லுறியளா....?"

இமைகளை ஒரு முறை அழுத்தி மூடித் திறந்தாள்.

"அண்டைக்கு விடிய ஐந்தரை இருக்கும். தூரத்தில் பொம்பர் ஒண்டு பதிஞ்சு குண்டு போட்டுது. ஆறு

மணிக்குப் படபடவெண்டு சூடு கேட்டுது. பிள்ளைக்கு அப்ப ஒரு வயது. பிள்ளை படுத்திருந்த இடத்துக்குப் பக்கத்திலை ஒரு சன்னம் வந்து விழுந்திது. கோயிலடிக்குப் போன இவர் ஓடி வந்தார். ஆமிக்காரன் கோயிலடிக்கு வந்திட்டான் எண்டார். 'பிள்ளையைத் தூக்கு' எண்டார். அவர் சைக்கிளை எடுக்க நான் பிள்ளையோடை சைக்கிளிலை ஏறினேன். அம்மா மாட்டடியிலை சாணகம் அள்ளிக் கொண்டு நிண்டது, 'அம்மா ஓடிவாணை' எண்டு கத்திக் கொண்டுதான் சைக்கிளில் ஏறினேன். எங்களுக்கு முன்னாலையும் பின்னாலையும் சன்னங்கள் விழுது. எப்படி வந்தனாங்கள் எதாலை வந்தனாங்கள் எண்டு தெரியாது. அம்மா வரவில்லை. வெத்திலைத் தோட்டத்துக்குள்ளே நிக்கிறா எண்டு பின்னாலை வந்த ஆக்கள் சொன்னவை. கொஞ்ச நேரத்திலை அவ்விடத்தில் பொம்பர் அடிச்சுது..."

"அம்மா..."

"அம்மா இருந்தா இப்படி என்னை அழுது கொண்டு திரியவிடாது."

"அதை எல்லாம் திரும்ப நினைச்சுப் பாக்கேக்கை...?"

"நெஞ்சை ஏதோ இறுக்கிற மாதிரிக் கிடக்கு. தலை எல்லாம் விறுவிறுக்குது. அங்கை இருந்த வெத்திலைத் தோட்டம் காணும் எங்கடை சீவியத்துக்கு, கமுகும், தென்னையும், வெத்திலைத் தோட்டமும் சுத்தி இருக்க எவ்வளவு செல்வமாய் இருந்தது எங்கடை வீடு!

"பிறகு?"

"பிறகு கொஞ்ச நாள் பிள்ளையார் கோயிலடியில் தான் படுத்தனாங்கள். ஒருநாள் இவர் சொன்னார், இனி இப்பிடி இருந்து என்ன செய்யிறது? வெங்காயம் கட்டிக் கொண்டு வவுனியாவுக்குப் போட்டுவாறன் எண்டு. நானும் பிள்ளைக்குச் சாப்பாடு குடுக்கத்தானே வேணு மெண்டு ஓமெண்டன். பிள்ளையக் கவனமாய் பாத்துக் கொள் வாறன் எண்டு சொல்லிட்டுப் போனார். வரேல்லை."

இலக்கும் பாதையும் இல்லாமல் சுழலுவதே இந்த மனதுக்கு வழக்கமாகிப் போய்விட்ட ஒன்று!

"அவர் இனிமேல் வரமாட்டார் எண்டு நினைக்க எப்படி இருக்கு உங்களுக்கு?"

உடைந்து நொருங்கி உருக்குலைந்து போய் இருந்த அவளின் கைகளைப் பற்றியபடி கேட்டேன்.

"எனக்கு அவரிலை சரியான கோபம் வருது..." சறுக்கென்று வாழை இலை கிழிப்பது போல் பதில் சொன்னாள்.

"என்ன கோபம்?"

"என்னையும் பிள்ளையையும் தனிய விட்டிட்டு ஏன் போவான் எண்டு!"

"அவர் ஒரு வேளை இந்த உலகத்திலையே இல்லை எண்டால்..."

"அப்பவும் கோவம் தான்."

"எப்பிடி?"

"ஏன் என்னை இப்பிடி விட்டிட்டுச் செத்துப் போனாயெண்டு?"

"ஆ...."

தன் உணர்வுகளைச் சரியாக அடையாளம் கண்டு கொண்ட அவளின் கண்கள் இப்போது சிவப்பு அடைந்தன.

இந்தக் கோபத்தையும் நான் கையாள வேண்டி இருக்கும் என்று சிந்தித்துக் கொண்டேன்.

"உங்களுக்கு அவரிலை சரியான கோபம்... ஆனால் இல்லாத ஒருவரிலை கோபப்பட்டு என்ன செய்வீங்கள்?" அவள் பேசுவது போன்ற பொதுவான நடையில் கேட்டேன்.

"ஓ... அப்பிடி நினைக்கேக்கை ஏதோ குற்றம் செய்யிற மாதிரி இருக்கு!"

இந்தக் குற்றப்பழி உணர்வையும் பார்க்க வேண்டும். மன டயரியில் குறித்துக் கொண்டேன்.

"எனக்குக் கொஞ்சம் தண்ணி தாறீங்களா குடிக்க?" நான் கொடுத்த ஒரு கப் நீரை ஒரே மூச்சில் குடித்து முடித்தாள்.

இழப்பு, கோபம், குற்றப்பழி உணர்வு, நம்பிக்கை இன்மை... இன்னும், இன்னும்! மனம் என்பது பெரிய பள்ளத்தாக்கு!

"உங்களுக்கு அவர், வீடு, காணி எல்லாம் ஒரே காலத்திலை இல்லாமல் போனது தாங்க முடியாததாலை அவர் உங்களை விட்டிட்டுப் போனது கோவம். இல்லாத ஒருவரோடை கோபிக்கிறன் எண்டு ஒரு குற்றப்பழி உணர்வு, பிள்ளையை எப்பிடிப் படிப்பிக்கிறது எண்டு ஒரு நிச்சயமில்லாத நிலை... இதுகளிலை எது உங்களைக் கூடப் பாதிக்குது?"

"ஓம் அம்மா, எல்லாம் சேர்ந்து ஒரே தலையிடி. இந்தப் பிறவியிலை இந்தத் தலையிடி மாறாது, செத்தால் என்ன எண்டிருக்குச் சிலவேளை."

கனியாத நாவல் பழம் தின்றதுபோல் தொண்டை அடைத்திருந்தது. ஓகோ... தற்கொலை எண்ணம் வேறு இருக்கிறதா? காற்றின் ஒவ்வொரு அசைவிலும் கூடக் காலன் வந்து கொண்டிருக்கிறானா இவளுக்கு?

"அப்படி எண்டால் உங்கடை பிள்ளை?"

"அதை நினைச்சுத்தான் இன்னும் சாகாமல் இருக்கிறன். அந்தப் பிள்ளையை ஐயோ நான் என்னெண்டு வளர்க்கப் போறன்? என்னண்டு படிப்பிக்கப் போறன்.... அது எங்கை எண்டாலும் நல்ல பள்ளிக் கூடத்திலை படிக்க வேணும்... ஆனால் என்னட்டை இப்ப மிஞ்சியிருக்கிறது கவலையும், வறுமையுந்தான்... இதுதான் என்னை அதிகம் பாதிக்குது..."

"நீங்கள் சொல்லுறதெல்லாம் எனக்கு விளங்குது. நாங்கள் அடிக்கடி சந்திப்பம், கதைப்பம். இரண்டு பேருமாச் சேர்ந்து மெல்ல மெல்ல உங்கடை பிரச்சினை களைத் தீர்க்கப் பாப்பம்."

"அம்மா, உங்களோடை கதைச்சது எனக்கு நல்ல ஆறுதலாக இருக்கு. என்ரை பிள்ளையை ஒரு நல்ல பள்ளிக் கூடத்திலை சேர்க்க உதவி செய்து விடுங்கோ..."

நான் தலையசைக்க, சோகப் பாசி பூத்த அந்த முகத்தில் புன்னகை அரும்பு கட்டுகிறது?

செப்டெம்பர், ஒக்டோபர், நவம்பர் மாதங்கள். தேதிகள் அலங்கோலமாயின.

இழப்பின் படிகளுக்கூடாக இவளை அழைத்துச் செல்லல், கோப உணர்வை வெளியேற்றல், குற்றப்பழி உணர்வில்இருந்து விடுவித்தல், தானே குடும்பத் தலைவியாக அமர்ந்து பிள்ளையை வழி நடத்தலாம் என்று உணரச் செய்தல், இறுதியாகப் பிள்ளை ஒரு நல்ல பாட சாலையில் சேர உதவுதல், எனக்குள் பல காட்சிகள் படமாய் விரிந்தன.

**வ**ரண்ட காற்று மண் புழுதியையும் சருகுகளையும் வாரி இறைத்தபடி சுழன்று வந்து கொண்டிருந்தது.

"உங்கடை பள்ளிக் கூடத்திலை இந்தப் பிள்ளையைச் சேத்தால் உதவியா இருக்கும். அவ எப்பிடியும் கஷ்டப்பட்டுப் படிப்பிச்சிடுவா."

நான் நிமிர்ந்தேன்.

"ஓ....... அதுக்கென்ன? உங்களுக்குச் செய்யாத உதவியா?" எனக்குக் 'கொலர்' இல்லை. இருந்திருந்தால் உயர்ந்திருப்பேன். ஆனால் எனக்கு எவ்வளவு மதிப்பு! மதிப்பையும் மரியாதையையும் கட்டாயப்படுத்தினால் அவை, அவை அல்ல!

"சேர்க்கலாம், இப்படியான பிள்ளைகளைச் சேர்க்கத்தானே வேணும்."

"ஓ...." எனது முகம் ரோஜாப் போல விரிந்தது.... "அதுவும் எங்கடை அயல் கிராமம் மாவிட்டபுரம்.... கட்டாயம் செய்ய வேணும்...."

"ஆ...." எனக்குள் ஐஸ்கட்டிகள் பல இறங்கி...

"ஆனால்!"

"ஆனால்?"

"ஒரு ஐயாயிரம் ரூபா தந்தியளெண்டால் எங்கடை பாடசாலை அபிவிருத்திச் சபைக்கு உதவியாக இருக்கும். நான் மற்றவை சிலரிட்டைக் கூடவும் வாங்கி இருக்கிறன். நீங்கள் ஒரு ஐஞ்சு தாங்கோவன்...."

'களாம் புளாம்' எண்டு எனக்குள் ஒரே வெப்பியாரம்.

"சிதறுவான்!"

நெஞ்சுக் கூட்டில் கொதிநீர் கொட்டுகிறது. மனத் தடாகத்தில் பெரும் புயல் வீசுகின்றது. கண்ணீர்ப் பிசின் இதய அறைகளை இறுக்குகிறது.

ஒரு 'கவுன்சிலர்' செய்யத் தேவையில்லாத வேலைக்குப் போனதற்கு எனக்கு நல்ல தண்டனை!

மனிதர்கள் எவ்வளவு அழகாக மனிதர்களைப் புரிந்து கொள்கிறார்கள் தெரியுமா?

மனதையே கழுவி வெளியே தள்ளி விடுவதிலும் இந்த மனிதர்கள் மகா சமர்த்தர்கள் தெரியுமா?

ஆனாலும் நாங்கள் முயன்றுகொண்டே இருப்....ப்....ப்.....

# ஸ்கொலர்சிப்...

பரந்தவயல் வெளிநடுவில் அம்மன்கோயில். அதற்கு முன்னால் வெண்தாமரை, செந்தாமரைக் குளங்கள். குளங்களிற்கு இருகரையிலும் ஆலும் அரசும் மதாளித்துப் பச்சைப் பசேலென்றிருந்தது. கோவிலில் பூசை முடிந்து பூசகரும் வீடு சென்றுவிட்டார்.

குளத்தங்கரையில் விளையாடிக்கொண்டிருந்த இரண்டொரு பையன்களும் எங்கோ சென்று விட்டனர்.

ஆலமரத்தின் விழுதுகளையே ஊஞ்சலாகக்கட்டி அதில் மெதுவாக ஆடிக்கொண்டிருந்தான் தவம். அந்த ஊஞ்சலைப்போலவே அவன் மனமும் ஊசலாடிக் கொண்டிருந்தது.

"என்னெண்டு நான் 'ஸ்கொலர்சிப் பாஸ்" பண்ணப் போறன்?"

**செல்வி**

"அந்தப்புத்தகத்தைப் பார்த்தாலே நடுங்குது. அதில ஒன்டும் விளங்குதும் இல்ல.....ம்." என்றொரு பெருமூச்சை விட,

"டேய் தவம், இஞ்ச என்னடா செய்யிற? கெதியா வீட்டபோய் படி. சோதினக்கு இன்னும் கொஞ்ச நாள்தான் இருக்கு. ஓடு ஓடு..." என அவனை வீட்டுக்குத் துரத்திய அவன் தந்தை பாலன் தனக்குள்ளாகவே,

"அங்கால அவன் சோமன்ர பெடி, இங்கால தனத்தின்ர பெட்ட எல்லாம் விழுந்து விழுந்து படிக்குதுகள், இவன் என்னடா என்டா ஆலமரத்தக் கட்டிப்பிடிச்சுக் கொண்டு. நாளைக்கு அதுகள் பாஸ் பண்ணீருங்கள். இது என்ர மானத்தை வாங்கிப் போட்டு நிக்கும்'' என்று புறுபுறுத்துக் கொண்டு சென்றார். ஆலம் ஊஞ்சலை விட்டிறங்கிய தவத்தின் மனம் கவலையால் மூழ்கியது. வீடு என்றாலே வெறுப்பாக இருந்தது. நண்பர்களோடை சேர்ந்து பட்டம் ஏத்துவம் என்றா உடன.

"சோதின கிட்டீற்றுப் படி"

கொஞ்ச நேரம் 'ரீவியில' 'கார்டூன்' பாப்பம் என்றா,

"சோதின கிட்டீற்றுப் படி"

கொஞ்ச நேரம் கோயிலடியில ஆலம் ஊஞ்சல்ல இருப்பம் என்றா,

''சோதின கிட்டீற்றுப் படி'' என்பதே திரும்பத் திரும்பச் சொல்லப்பட்டது. சோதின கிட்டீற்றுப்படி படி என்று சொல்லிச் சொல்லியே படிப்பில் வெறுப்பை ஏற்றி

விட்டிருந்தனர் வீட்டினர். வயதுக்கு மிஞ்சிய கவலை மனதை அழுத்த வீட்டிற்கு வந்த தவம் வேண்டா வெறுப்புடன் படிப்பதற்காக உட்கார்ந்தான். சிறிது நேரத்தில் பரவியிருந்த புத்தகங்களுக்கு மத்தியிலேயே உறங்கி விட்டான். உறக்கத்திலும் 'ஸ்கொலர்சிப்' பற்றிய கனவு அவனைப் பயமுறுத்தியது?

'ஸ்கொலர்சிப்' முடிவுகள் வந்துவிட்டது என்றறிந்த பெற்றார்கள் தங்கள் பிள்ளைகளுக்கு முன்பாகவே பாடசாலைக்குச் சென்றுவிட்டனர். தவம் பாடசாலைக்குச் செல்வதற்கு முன்பே தந்தை பாலன், கண்கள் அனலைக் கக்கச் சாரத்தை ஒரு கையால் தூக்கிப் பிடித்துக் கொண்டு, மறுகையில் நீளமான துவரங்கம்புடன் நாலுகால் பாய்ச்சலில் வந்தார். அவரைக்கண்டதும் தவத்திற்கு விளங்கிவிட்டது சோதனையில் தனது நிலை என்ன வென்று. கிடுகிடுவென்று நடுங்கிக் கொண்டிருந்தவனின் கையைப்பிடித்து கொறகொறவென்று இழுத்துச்சென்று முற்றத்து மாமரத்தில் கட்டிவிட்டு துவரங்கம்பால் விளாசுவிளாசென்று விளாசித்தள்ளினார்.

"ஐயோ ஐயோ அம்மா அம்மா"

"என்ன? என்ன? என்டா தவம்"

திடுக்கிட்டு எழுந்தவன் வியர்வை ஆற்றில் தெப்பமாய் நனைந்திருந்தான். இருதயம் மிகவேகமாய்த் துடித்துக்கொண்டிருந்தது. தவத்தின் தாயார்.

"பொழுது பட்ட நேரம் ஆலமரத்தடியில இருந்து போட்டு வந்தது. பிள்ளைக்கு ஏதோ காத்துப் பட்டிட்டுது போல. நாளைக்கு அம்மன் கோயில் குருக்களைக் கொண்டு நூல் கட்டுவிக்கோணும்." என்று சொல்லிக் கொண்டு தவத்தின் நெற்றியில் திருநீறு இட்டுவிட்டார். அடுத்த நாள் காலை தவத்தின் தந்தை பாலன், தவத்தின் வகுப்பாசிரியரைச் சந்திப்பதற்காகச் சென்றார்.

"வணக்கம் ரீச்சரம்மா"

"வணக்கம் வாங்க"

"என்னெண்டா ரீச்சர் இவன் தவம் இப்ப கொஞ்ச நாளா இரவில நித்திரையில திடுக்கிட்டெழும்பிக் கத்திறான். கேட்டா ஒன்டும் சொல்லுறானில்லை. முந்தி மாதிரி இப்ப படிக்கிறானும் இல்ல. சிலவேளை வகுப்பில தான் பெடியள் ஆரோடயும் சண்டைகிண்டை பிடிச்சானோ இல்லாட்டி..." என்று இழுத்தவரை,

"ம்... சொல்லுங்க ஐயா..."

"அது வந்து நீ....ங்....க...ஏதும் வகுப்பில அடிச்சீங்க...ளோ?"

புன்னகை புரிந்த ஆசிரியர் தனது கயல் கண்களை அகல விரித்துக் கொண்டே,

"என்ன... தவத்திற்கு நான் அடிச்சனா? அவன் என்ன குழப்படியா? அல்லது படிக்கமாட்டானா? ஏன் நான் அவனை அடிக்கப்போறன்!" என்ற பதிலில் ஓரளவு ஆறுதலடைந்த பாலன்,

"அப்ப எனனென்டு நீங்கதான் கதைச்சுப்பாருங்க. அப்ப சரி, நான் வாறன் ரீச்சர். எப்பிடியும் என்ர பெடியன் 'பாஸ்' பண்ணிப்போட வேணும்; உங்கட கையில தான் இருக்கு" பதிலை எதிர்பாராமலே சென்றுவிட்டார் பாலன்.

"தவம் இங்க வாங்கோ, இதில இருந்து ரீச்சரோட கொஞ்ச நேரம் கதைக்கிறீங்களா...?" ஆம் என்று தலையசைத்தான் தவம். அவன் தான் என்றைக்குமே ஆசிரியர்களுடன் கதைப்பதற்குத் தயங்கியதில்லையே.

"காலம சாப்பிடேல்லேயா? முகம் வாடிப் போயிருக்கு?"

"சாப்பிட்டனான். இடியப்பமும் முட்டைச் சொதியும்."

"அப்ப நித்திரை கொள்ளேல்லயா? முகம் ஏன் இப்பிடியிருக்கு?"

நித்திரைபற்றிக் கேட்டவுடன் தவத்தின் முகத்தில் கலவரம். நெற்றியில் முத்து முத்தான வியர்வை. பதற்றத்துடன் இருக்கையில் அமைதியின்றிச் சங்கடப் பட்டான்.

"ஏன் அப்பன் பிள்ளைக்கு என்ன செய்யுது? பயப்பிடாதேங்கோ, ரீச்சர் இருக்கிறன் தான. என்னென்டாலும் பயப்பிடாமச் சொல்லுங்கோ. நான் பிள்ளக்கு எப்பவும் உதவி செய்வன்"

தவத்தின் கலங்கிய விழிகளுக்குள் ஒரு கலங்கரை வெளிச்சம் தெரிந்தது.

புதுத்தெம்புடன் சொல்லத் தொடங்கினான்.

"ஸ்கொலர்சிப்புச் சோதினைக்கு படி படி என்று ஒரே ஆக்கின. பள்ளிக்கூடத்தில ரியூசனில பத்தாததிற்கு வீட்டிலயும் ஒரே படி படியென்டா என்ன செய்யிறது ரீச்சர்? பென்னம் பெரிய புத்தகம் ஒன்று வாங்கியந்தவர் அப்பா. அதில இருக்கிற ஒன்டும் விளங்குதில்ல. அம்மாட்டக் கேட்டா "சோதின உனக்கா? எனக்கா?" எண்றா. அப்பா "ஏன் ரீச்சர் சொல்லித்தாறேல்லயா?" என்றிறார். அக்கா "போஅங்கால இஞ்ச எனக்கு ரீச்சர் தந்த வீட்டு வேலை செய்யவே நேரமில்ல" என்று கலைக்கிறா. அப்ப என்னென்டு படிக்கிறது ரீச்சர்...? எனக்கென்டா பள்ளிக்கூடத்தால வீட்ட போய் சாப்பிட்டிட்டு கோயிலடிக் குளத்தங்கரை ஆலமரத்தில ஊஞ்சலாடத்தான் விருப்பம். அங்க போனதக் கண்டாலே அப்பா துலைச்சுப்போடுவார். அக்காவும் நல்லா அண்டிவிட்டிடுவா. பின்னேரம் 'ரீவியில' நல்ல "கார்டூன்' போடுறது. அது பாக்கிறது என்டா எனக்கு நல்ல விருப்பம். ஆனாப் பார்க்கேலாது. கோழிக் குஞ்சுகளைத் தூக்கி விளையாட எவ்வளவு ஆசை. அதுக்கும் விடமாட்டினம். பள்ளிக்கூடத்தால வீட்ட வந்த களைப்போடயே 'ரியூசனுக்கு' போ என்று துரத்திப் போடுவினம். நெடுகப் படிக்கிறது என்டா என்னென்டு படிக்கிறது?

அண்டைக்கு ஒருக்கா நல்ல 'கார்டூன்' போய்க் கொண்டிருந்தது. பாத்துக் கொண்டிருக்கேக்க அம்மா

வந்து 'ரீவியை' நிப்பாட்டிப் போட்டா. பிறகொருநாள் கோழிக்குஞ்சுகளைத் தூக்கி வைச்சு விளையாடிக் கொண்டு இருக்கேக்குள்ளயும் அம்மா அடிச்சவா.

அம்மன் கோயிலடி ஆலமரத்து ஊஞ்சலில ஆடிக் கொண்டு தாமரைக் குளத்தைப் பார்த்துக் கொண்டே இருக்க வேணும் போல இருக்கும். குளத்தடியில இருந்து அந்தக் காத்து முகத்தில படேக்க எவ்வளவு ஆசையா இருக்கும். ஆனா படிக்காம அங்க போய் இருக்கிறதைக் கண்டாலே அப்பா கத்துவார். எனக்கு விருப்பமான ஒண்டும் நான் செய்யேலாது. எந்த நேரமும் படிச்சுக் கொண்டிருந்தன் என்டாச் சந்தோசம். பக்கத்து வீட்டு பிள்ளையளிலயும் பார்க்க நான் கூட 'மார்க்ஸ்' எடுக்க வேணுமாம். அப்பிடி நான் எடுக்காட்டித் தங்களுக்கு வெட்கமாம் எண்டு சொல்லுவினம். சோதின 'பாஸ்' பண்ணினா சைக்கிள் வேண்டித்தாற என்றவர் அப்பா. சைக்கிள் நல்லம் தான் என்டாலும் எனக்கு றேடியோ தான் விருப்பம். பாட்டுக்கேட்டுக்கொண்டே வடிவாப் படிக்கலாம். அதச் சொன்னா அம்மா சொல்லிறா ஆரைப் பேய்க் காட்டிற? படிக்கிறன் என்று சாக்குச் சொல்லிக் கொண்டு பாட்டுக்கேக்கப்போறியோ எண்டு. அந்தப் புத்தகத்தப் பாத்தா பூதத்தைப்பாக்கிற மாதிரியிருக்கு. கனவில கூட நான்பெயில் பண்ணினதுக்கு அப்பா மரத்தில கட்டி வைச்சு அடிக்கிறமாதிரி வருகுது. அதால எனக்கு நித்திரை கொள்ளவும் பயமாக்கிடக்கு. நான் பெயிலென்டாச் சொல்லி வேலையில்ல. என்ன எல்லாரும் துலைச்சுப் போடுவினம். நான் என்ன செய்யிறது?

அக்காவை அப்பிடி அவ பேசிறேல்ல. அவள் பொம்பிளப் பிள்ளதான எண்டினம். நானும் பொம்பிளப்பிள்ளயாப் பிறந்திருந்தா எனக்கும் இந்தக் கரைச்சல் இல்லாம இருந்திருக்கும். எனக்கென்டா நான் பெயில் பண்ணிப் போடுவன் போலதான் கிடக்கு" என்று கூறியவனின் கருவிழிகள் நீரில் மிதந்தன.

"ஏன் அப்பன் நீங்கதான வகுப்பில முதலாம் பிள்ளயா வாறனீங்க. பிறகேன் பயப்பிடுறீங்க?"

"அது ரீச்சர் நீங்க சொல்லித் தாறதிலதான சோதின வைக்கிறீங்க. இந்தப் புத்தகத்தில இருக்கிறத ஆர்சொல்லித்தாறது?"

இப்பொது ஆசிரியர் முகத்தில் பிரகாசம்.

"அந்தப் புத்தகத்தக் கொண்டு வாங்க அப்பன், ரீச்சர் சொல்லித்தாறன். இப்ப போய்ற்று வாற வெள்ளிக்கிழமை வாங்கோ நாங்க கதைப்பம்"

"ஓம் ரீச்சர் போய்ற்று வாறன்"

"வாங்கோ தவம். இப்ப அந்தப் புத்தகத்தைப் படிக்க எப்படியிருக்கு"

"இப்ப எல்லாம் வடிவா விளங்குது ரீச்சர்"

"அப்ப இந்த முறை 'ஸ்கொலர்சிப்' சோதினையில..."

"'பாஸ்' பண்ணீருவன் ரீச்சர்"

"'பாஸ்' பண்ணின உடன அப்பா சைக்கிள் வாங்கித்தருவார் என்ன?"

"........."

"என்ன தவம் பேசாமல் இருக்கிறீங்க?"

"எனக்கு சைக்கிளவிட றேடியோதான் விருப்பம். அப்பதான் நான் நல்லா படிப்பன்."

"சரி, நான் அப்பாட்ட சொல்லுறன். பிள்ளயக் கரைச்சல் குடுக்காம, அவற்ற விருப்பப்படி படிக்கவிடச் சொல்லி. அதோட 'பாஸ்' பண்ணினதும் நீங்க விரும்பிறத வேண்டிக் குடுக்கச் சொல்லியும் சொல்லுறன்."

தவத்தின் முகம் அன்றலர்ந்த றோஜாப்பூப்போல விகசித்து மலர்ந்தது.

# அவளால முடியும்

**வா**ய்க்காலில் நீர் சலசலத்து ஓடிக் கொண்டிருந்தது. வாய்க்காலின் இருமருங்கிலும் சடைத்து வளர்ந்திருந்த மரங்களில் மந்திகள் தாவி விளையாடின. நீரில் மிதந்து வரும் சிறு மீன்களைக் கொத்திப் பிடிப்பதற்காக மீன் கொத்திகளும் நாரைகளும் வாய்க்கால் கரைகளில் கருமமே கண்ணாயிருந்தன. பெரியவர்கள் நீரைக் கண்ட புளுகத்தில் குளிப்பதும் துவைப்பதுமாக இருந்தனர். சிறுவர்கள் நீரிற்குள் துள்ளிக் குதித்து நீரை ஒருவர்மீதொருவர் எற்றி விளையாடிக் கொண்டிருந்தனர். இந்தக் காட்சிகள் ஒன்றுமே சைலாவின் கண்களுக்குப் புலனாகவில்லை. வாய்க்காலைக் கடப்பதற்காகக் குறுக்காகப் போடப்பட்டிருந்த மரக்குற்றியில் உட்கார்ந்து கால்களை நீரிற்குள் விட்டு அளைந்து கொண்டு ஏதோ ஆழ்ந்த யோசனையி லிருந்தாள்.

**செல்வி**

தன்னை மறந்திருந்தவளின் கண்களைப் பொத்தியது இரு கரங்கள். அப்போதும் சைலா எந்தவித ஆர்வமும் இன்றியே இருந்தாள். கண்களைப் பொத்தியகரங்களை விலக்கிவிட்டு அவள் அருகிலேயே அமர்ந்தாள் அவள் உயிர்த்தோழி கவிதா.

"என்னடி சைலா கடுமையா யோசிச்சுக் கொண்டிருக்கிற? வாய்க்காலில தண்ணிவருது எண்டு உன்னோட விளையாடுவம் எண்டு வந்தன். நீ என்னத்தையோ துலைச்சிட்டமாதிரி முழிச்சிக்கொண்டிருக்கிற!"

சிரித்தபடியே கேட்ட கவிதாவிற்கு இப்பொழுது தான் புத்தியில் உறைத்தது உண்மையிலேயே சைலா கவலையாய்த்தானிருக்கிறாள் என்று. சைலாவின் கரங்களை ஆதரவாகப் பற்றிக்கொண்டு குனிந்திருந்த அவளது முகத்தை நிமிர்த்தி, "என்னடி சைலா நடந்தது? நீ சும்மா பகிடிக்கு இப்பிடியிருக்கிற எண்டு நினைச்சிற்றன். ஏனடி ஒரு மாதிரியிருக்கிற? வீட்டில ஆரும் பேசிப் போட்டினமே?"

இந்தக் கேள்வியைக் கேட்பதற்காகவே காத்திருந்ததைப் போல் கலகலவெனக் கண்ணீர் அருவி பொழிந்தாள் சைலா. பதறிப்போன கவிதா இன்னும் சைலாவை நெருங்கி ஆதரவாக அணைத்தபடியே,

"சைலு என்னம்மா நடந்தது எனக்குச் சொல்லன்!"

"அத்தான் பேசிப்போட்டார். அக்காவும் சேர்ந்து தான் பேசினவா. அம்மா ஆரோடயோ ஓடிப்

போய்ற்றாவாம். ஏன் எங்கள விட்டிட்டு ஓடிப்போனவா? எனக்கு அம்மா என்டா சரியான விருப்பம். எனக்கு எல்லாம் அம்மா தான் செய்து விடுறவா. காலமை குளிக்க வாத்துத் தலை இழுத்துக் கட்டிவிடுவா. சாப்பாடு குழைச்சுத் தந்து புத்தகப் பையைப் படலை மட்டும் கொண்டு வந்து தந்திற்று நான் போய் முடியுமட்டும் பாத்துக் கொண்டு நிப்பா. மத்தியானம் நான் பள்ளிக் கூடத்தால வந்து கால் முகம் கழுவிக் கொண்டு குசினிக்கு வந்தா சாப்பாடு போட்டு வைச்சுக் கொண்டு இருப்பா. நான் வந்தோடன குழைச்சுக் குழைச்சுத் தருவா. சாப்பிட்டது காணும் என்றாலும் இன்னும் கொஞ்சம் இன்னும் கொஞ்சம் எண்டு தந்து கொண்டே இருப்பா. பிறகு நான் கொஞ்ச நேரம் நித்திரை கொண்டிட்டு எழும்பிப் பக்கத்து வீட்டுப் பிள்ளையளோட விளையாடீற்று வந்தாத் தேத்தண்ணி யோட ஏதாவது சாப்பிடவும் வைச்சிருப்பா. அப்படி யெல்லாம் என்னிலை விருப்பமா இருந்தவா இப்ப ஏன் எங்கள விட்டிட்டுப் போய்ற்றா?' கவிதாவால் பேசமுடிய வில்லை - தெரியவில்லை. அவளுக்கும் அப்படித்தான் வீட்டில் கூறினார்கள். சைலாவின் அம்மா அவையள விட்டிட்டு ஏன் ஓடிப்போனவா? அவளுக்கும் அது புரியாத புதிராகவே இருந்தது என்றாலும் தனது தோழிபடும் வேதனையைப் பார்க்க அவளுக்கும் பொறுக்க முடிய வில்லை. அதனால் சைலாவின் கேள்விக்கு, "ஆரிட்டயாவது கேட்டுப்பார்ப்பம் உன்ர அம்மா எங்க என்டு. அது தெரிஞ்சோடன அவாட்டப் போய்க்கேப்பம் ஏன் விட்டிட்டுப் போனவா என்டு. அவாவை எங்களோட கூட்டீற்று வருவம்".

எனப்பதிலளித்தாள். பதின்மூன்று வயதுச் சிறுமிகளின் மனதில் விடைதெரியாத வினாவாக நின்று உறுத்தியது அந்தச் சம்பவம்.

♦ ♦ ♦

"சைலா என்ன யோசிச்சுக்கொண்டிருக்கிறீர்? 'இன்ரவல்' விட்டுப் பிள்ளயள் வெளியால போய்ற்றீனம். நீர்மட்டும் தனிய இருந்து யோசிக்கிறீர்?" என்று அனுஷா 'ரீச்சர்' கேட்டதும் தன் நினைவிற்கு வந்த சைலா, "இ....இ....ல்.....ல்....லை..... 'ரீச்சர்' .... ஒ.....ன்....று....ம்... இல்லை....சு.....ம்....மா....தா....ன்" என்று திக்கித்திணறினாள். கடந்த சில நாட்களாகவே சைலா அசாதாரணமாக நடந்து கொண்டாள். பாடம் நடக்கும் பொழுது, பாடத்தைக் கவனிக்காது இருந்தாள். ஏனைய பிள்ளைகள் விளையாடச் சென்றபிறகு, தனிமையில் இருந்து எங்கோ வெறித்துப் பார்த்துக் கொண்டிருப்பாள். பாடத்தில் கேள்வி கேட்டால் சம்பந்தமில்லாத பதில் சொன்னாள். அவளின் நடத்தையில் இத்தகைய பல மாற்றங்களை அவதானித்திருந்த ஆசிரியர், அவளுடன் தனியே கதைக்க வேண்டும் எனத் தீர்மானித்தார். அவளின் சம்மதத்துடன் அவளது கரங்களைப் பற்றியபடி தனி அறை ஒன்றிற்குள் அழைத்துச் சென்றார்.

♦ ♦ ♦

"கொஞ்ச நாளா ஒரு மாதிரிக் கவலையா இருக்கிறீர்? என்ன பிரச்சினை? பிள்ளைக்கு என்ன பிரச்சினை என்றாலும் என்னட்டப் பயப்பிடாமச் சொல்லலாம். அத

ரீச்சர் ஒருத்தருக்கும் சொல்ல மாட்டன். எப்பவும் நான் உமக்குத் துணையா இருப்பன்".

"..........."

"பாடங்கள் ஏதாவது விளங்கிறதிலை கஷ்டமா இருக்கா? அப்பிடி இருந்தாச் சொல்லும் நான் சொல்லித் தாறன் இல்லாட்டி வகுப்பில பிள்ளையள் ஆரும் பிள்ளக்குப் பிரச்சினை தரீனமோ? என்னென்டாலும் என்னட்டப் பயமில்லாமச் சொல்லும்? நான் உமக்கு உதவியா இருப்பன்."

"ரீச்சர் அது..." என்று சொல்லத் தொடங்கியவளின் மனதில், அம்மா ஓடிப் போய்ற்றா என்டதை ரீச்சரிட்டச் சொன்னா என்ன நினைக்கிறாவோ? எல்லாரும் என்ன ஒரு மாதிரிப் பார்க்கிற மாதிரி ரீச்சரும் பார்ப்பாவோ? என்ற சிந்தனைகள் ஓடத் தொடங்கியதும் வார்த்தைகள் தடைப்பட்டன.

"பிள்ளைக்கு எப்பிடிச் சொல்லுறது எண்டு கஸ்ரமா இருக்குது. அது எனக்கு விளங்குது"

"ரீச்சர் எங்கட அ........ம்......மா..... ஆரோடயோ ஓடிப் போய்ற்றா எண்டு சொல்லீனம். அவ ஏன் அப்படி ஓடினவா எண்டு எனக்குத் தெரியா. என்ன எல்லாரும் ஒரு மாதிரிப் பாக்கீனம். அக்காவும் அத்தானும் பேசீனம். எனக்கெண்டா அம்மா இல்லாம இருக்கேலாது. இவை எல்லாரும் அம்மாவைப் பேசுறது எனக்குக் கோபமா இருக்கு."

"பிள்ளேன்ர அம்மாவை அக்காவும் அத்தானும் ஏசுறது உமக்குக் கோபமா இருக்கு"

"அக்கான்ர அம்மா இல்லத்தான எங்கட அம்மா. அப்ப அவ நெடுகிலும் அம்மா ஓடினதப் பற்றிப் பேசுறா. அக்காவுக்கு அம்மாவையும் அப்பாவையும் பிடிக்காது. அவைக்கும் அவவைப் பிடிக்காது"

"அம்மா அக்கான்ர அம்மா இல்லாததால அக்கா அம்மாவ ஏசுறா, அக்காவுக்கும் அவையப் பிடிக்காது அவைக்கும் அவவைப் பிடிக்காது"

"அப்பாக்கு முன்னால ஒண்டும் சொல்ல மாட்டா. அவர் இல்லாத நேரத்தில கிழவனுக்குக் காணாது. எங்கட அம்மா செத்தோடன இன்னொருத்தியக் கூட்டியந்து அவவிட்ட நாங்க பட்ட பாட்டிற்கு இவருக்குக் காணாது என்று சொல்லுவா. அம்மா என்ன சமைச்சாலும் எங்களுக்கு மட்டும் தான் தருவா, அப்பாவும் அப்படித் தான் என்னென்டாலும் எங்களுக்குத்தான் வாங்கிக் கொண்டு வருவார். அது அவவுக்குச் சரியான கோபம்."

"உம்மட நிலை எனக்கு விளங்குது பிள்ள. உம்மட... அப்பாவைப் பற்றிக் கொஞ்சம் சொல்லுறீரா?"

"அப்பா கமம் செய்யிறவர். விடியப்பிறம் போனார் என்டா நாங்க படுத்தாப் பிறகு தான் வீட்ட வாறவர். அவருக்குச் சாப்பாடு எல்லாம் அம்மா கொண்டு போய்த் தான்.... குடுக்கிறவா. அம்மா காணாமப் போறதுக்கு முதல் நாள் நாங்க பள்ளிக் கூடத்தால வீட்ட போக முந்தியே அப்பா வீட்ட வந்திட்டார். கோபமாகக் கத்திக்

கொண்டிருந்தவர். அம்மா குசினிக்க சமைச்சுக் கொண்டிருந்தவா. நாங்க பயத்தில அம்மாவோடயே இருந்தநாங்க. கொஞ்ச நேரத்தால அப்பாட சத்தத்தைக் காணேல்ல என்டு பார்த்தா அவர் போய்ற்றார். பிறகு நாங்க சாப்பிடேக்க அம்மா தன்ர உடுப்புக்கள பையில மடிச்சு வைச்சு தன்ர சாமான்களையும் ஒரு பையில போட்டுக் கட்டினவா. ஏன் அம்மா எல்லாத்தையும் பையில எடுத்து வைக்கிறீங்க? எண்டு கேட்டதுக்கு வவுனியாவிற்குப் போக எண்டு சொன்னா. நான் நினைச்சன் நாங்க எல்லாரும் தான் போறதெண்டு. பிறகு நாங்க விளையாடப் போய்ற்று வந்து பார்த்தா அம்மாவையும் காணேல்ல. அவ எடுத்து வைச்ச சாமான்களையும் காணேல்ல."

தேம்பித் தேம்பி அழுதாள் சைலா. அவளது அழுகை ஓயுமட்டும் காத்திருந்த அனுஷா ரீச்சர் அவளது முதுகை ஆதரவாக வருடிக் கொடுத்தார். தலையைக் குனிந்து அழுது கொண்டிருந்தவள்,

"அம்மாவும் அப்பாவும் சில நேரங்களில சண்டை பிடிக்கிறவை. பிறகு கொஞ்ச நேரத்திலேயே கதைச்சிருவீனம். சில நேரங்களில் ஐஞ்சாறு நாளைக்குக் கதைக்காம இருந்திருக்கீனம், ஒரு நாளும் இப்படி எங்கள விட்டிட்டுப் போகேல்ல."

"பிள்ளேன்ர நிலமை எனக்கு விளங்குது, நாங்க இது பற்றி வாற வியாழக்கிழமையும் சந்திச்சுக் கதைப்பம், நீர் ஒன்றுக்கும் கவலைப் படாமப் போய்ற்று வாரும்"

◆ ◆ ◆

"வாரும் சைலா"

"....................."

"பிள்ளைக்குக் கதைக்கக் கஸ்டமாயிருக்குப் போல"

"ரீச்சர் எனக்குச் சாகவேணும் போல இருக்கு. அம்மா இல்லாம இனி எத்தின பேரிட்ட குட்டுப்பட்டுக் கொண்டிருக்கோணும்."

"செத்துப் போறது நல்லது என்று நினைக்கிறீர். அந்த அளவுக்கு உம்மட மனம் தாக்குப்பட்டுப் போச்சு என்டு எனக்கு விளங்குது."

"தம்பி தங்கச்சிய நினைக்கத்தான் கவலையா இருக்கு. தம்பி குழந்தப்பிள்ள. அம்மான்ர மடியிலேயே இருந்தவன். இப்ப ஒரே அழுகை. நான் தூக்கினாத்தான் அழாம இருப்பான்."

"நீர் செத்துப் போய்ற்றா தம்பி தங்கச்சியப் பார்க்க ஆர் இருக்கீனம்?"

"ஒருத்தரும் இல்ல ரீச்சர். அக்காவும் அத்தானும் என்னையே பேசீனம். அடிக்கீனம். அந்தச் சின்னனுகளச் சும்மா விடுவினமோ? அப்பா விடியப் போனா பொழுது படத்தான் வருவர். அவரும் இப்ப முந்தி மாதிரி இல்லை. முந்தி என்டாப் பின்னேரம் வரேக்க ஏதாவது சாப்பாட்டுச் சாமான் வாங்கிக் கொண்டு வாறவர். இப்ப ஒன்டும் கொண்டாறதில்லை. அதோட அவர் இப்ப குடிக்கத் தொடங்கீற்றார். குடிச்சிற்று வந்தா அக்காவோட சண்டை தான்."

"இப்ப நீர் என்ன செய்யலாம் என்று நினைக்கிறீர்?"

"நான் சாகக் கூடாது. அப்பாவாவது எங்களைப் பார்ப்பார் என்டா அவர் தன்னையே பாக்காம விட்டிட்டார், எப்படியும் தம்பி தங்கச்சியப் பார்த்துக் கொண்டு நானும் நல்லாப் படிச்சு வேலைக்குப் போக வேணும். அப்பதான் தம்பி தங்கச்சி படிக்கலாம்."

"நல்லது. நல்ல முடிவு எடுத்திருக்கிறீர். இப்பிடி நாங்க கனதரம் கதைச்சிற்றம்தானே, இன்டையோட இந்தச் சந்திப்பை நிறைவு செய்வம், இனிமேலும் உமக்கு உதவி தேவைப்படுற பொழுது இப்படிச் சந்தித்துக் கதைப்பம்"

"ஓம் ரீச்சர் நான் போய்ற்று வாறன்."

சைலா எழுந்து நடப்பதை வைத்த கண் வாங்காது பார்த்தபடி இருந்தார் ஆசிரியர். அவளது முகத்தில் தன்னம்பிக்கையும் நடையில் உறுதியும் தெரிந்தன.

# உங்களுடன் இருக்கிறேன்.....

ஓ.... சாந்தன் எதற்காக என்னைக் கண்டதும் ஓடி ஒளிய வேண்டும்? போதாக் குறைக்கு ஷேர்ட்டைக் கழற்றி முதுகையெல்லாம் மூடிக் கொண்டு ஏன் ஓட வேண்டும்? எனக்கு எதுவுமே புரியவில்லை. பாவம்... அவனது வாழ்க்கையே ஒரு கேள்விக்குறிதான்.... ம்....

மிகவும் பின் தங்கிய இந்தக் கிராமத்துப் பாடசாலைக்கு நான் மாற்றலாகி வந்த புதிதில் எனக்கு ஐந்தாம் வகுப்பைப் பொறுப்பாகத் தந்திருந்தார்கள். அது புலமைப் பரிசில் வகுப்பு. இருபது மாணவர்கள் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தயாராகிக்கொண்டு இருந்தார்கள். ஐந்து மாணவர்கள் புலமைப் பரில் பரீட்சைக்குத் தெரிவாகாதவர்கள். எனினும் மாலை நேர வகுப்புகளுக்கு அவர்களும் வருவார்கள். அந்த ஐந்து

**பகீரதி**

மாணவர்களில் சாந்தனும் ஒருவன். மிகுந்த பொறுப்புணர்ச்சியும் நல்ல தலைமைத்துவப் பண்புகளும் கொண்ட நல்ல மாணவனாகத்தான் இருந்தான். ஒரு மாத காலம் அவன் ஒரு சாதாரண சராசரிச் சிறுவனாகவே இருந்தான். ஆனால் தொடர்ந்து அவனது நடத்தைகளில் மெல்ல மெல்ல மாறுதல்கள் நிகழத் தொடங்கின. அடிக்கடி அமைதியாகத் தனித்திருந்தான். அடிக்கடி பாடசாலைக்கு வராமல் இருந்தான். பாடசாலைக்கு வராத நாட்களில் பாடசாலைக்கு வெளியே நின்று வகுப்பறையை வேலிக்கு ஊடாக ஒட்டிநின்று ஏக்கத்துடன் பார்ப்பான்.

ஒரு நாள் அவனை அப்படி ஒட்டி நின்று பார்த்த அந்த நிலையில் கண்டு அழைத்தபோது அவன் ஓடி மறைந்து விட்டான். அதன்பின்பு ஒரு வாரம் அவன் வரவுமில்லை. தெருவில் நின்று பார்க்கவுமில்லை. ஒருவாறு அந்த வாரக் கடைசியில் வயற்கரைக் கோயில் மண்டபத்தில் காற்றாட அமர்ந்திருந்தபோது அவனாக என்னைத் தேடி வந்து எதிரே மெல்ல அமர்ந்து முழங்கால் களைக் கட்டிக் கொண்டு என்னை ஊடுருவிப் பார்த்துக் கொண்டிருந்தான். நானும் அவனை உன்னிப்பாகப் பார்த்தேன். அவனது உதடுகள் துடித்தன.

"பைத்தியம் வந்தால்... மாறவே மாட்டுதா?"

"செத்துப் போடுவினமா?"

"கொலையும் செய்வினமா?"

"பைத்தியம் தொற்று நோயா?"

வேக வேகமாகக் கேள்விக் கணைகள் இடைவெளி இல்லாமல் என்னை நோக்கி வந்தபோது உண்மையில் நான் திக்கு முக்காடிப் போய் விட்டேன்.

"இல்லை சாந்தன். மனநோய் வந்தால் சரியான முறையில் சிகிச்சை செய்து ஒழுங்கா மருந்தெடுத்தால் கட்டுப்பாட்டுக்குக் கொண்டு வரலாம். மாற்றலாம். நல்ல ஆரோக்கியமான அன்பான ஆக்களுக்கு மத்தியிலை இருந்தால் அவர்கள் கெதியா சரியாயிடுவினம். அவை தங்கடைநினைவில்லாமல் தான் நடந்து கொள்ளுவினம். திட்டமிட்டுக் கொலை செய்ய மாட்டினம். இது தொற்று நோயும் இல்லை. அது சரி... நீ ஏன் சாந்தன் இதை யெல்லாம் இப்ப கேட்கிறாய்? எனக்குச் சொல்லலா மெண்டால்..."

"இல்லை ரீச்சர்.... எங்கடை அம்மா... கொஞ்ச நாளாத் தலை வலிக்குது நெஞ்சடைக்குது எண்டு மூலைக்குள்ள போய்க் குந்தி இருந்தா... திடீரென்று அகப்பட்ட சாமான் களையெல்லாம் தூக்கி எறிஞ்சா... மண்ணெண்ணெயைத் தனக்குமேலயும் அப்பாவுக்கு மேலயும் ஊத்தினா. அப்பம்மாவும் அப்பாவும் ஆஸ்பத்திரியிலை கொண்டு போய் விட்டவை. அப்பம்மாதான் சொன்னவா அம்மாவுக்கு.... விசராம்... ஆனால்... நான் ஆஸ்பத்திரிக்குப் போனனான். என்னைக் கிட்டவைச்சுக் கட்டிப் பிடிச்சுக் கொஞ்சினவா. பிஸ்கட் தந்தவா. வடிவாக் கதைச்சவ. ஆனா... அப்பம்மா வந்தவுடனே..."

"ம்... அப்பம்மா வந்தவுடனே...?"

"பல்லை நெருமிக் கொண்டு என்னையும் தள்ளி விட்டிட்டுப் போடி வெளியில... ஏன் வந்தனி? இஞ்சையாவது இருக்க விடமாட்டியோ? எண்டு தலவாணியாலை தூக்கி

எறிஞ்சு கத்தினவ. அதுக்குப் பிறகு ஊசி போட்டவை. பாவம் அப்பிடியே படுத்திட்டா... அதுக்குப் பிறகு கொஞ்ச நாளாலை சுகமாகி வீட்டை வந்தவா. சமைக்க மாட்டா... அப்பா சாப்பாடு வாங்கி வருவார். சில நேரம் எனக்கும் அம்மா ஊட்டிவிடுவா. ஆனா முன்னைமாதிரி இப்ப இல்லை..."

"இப்ப அம்மாவுக்கு எப்பிடி..."

"டொக்டர் சொன்னவர் ஒழுங்கா மருந்தை எடுக்கட்டாம் எண்டு... அப்பா கவனமா மருந்து குடுப்பார்... நானும் அம்மாவிலை கவனம். ஆனால் அப்பாவோடை தான் படுக்கிறனான். ஏன் ரீச்சர்... அம்மாவுக்குக் கெதியாச் சுகம் வரும்தானே"

சாந்தனின் ஏக்கம் நிறைந்த விழிகளை மெல்ல ஏறெடுத்துப் பார்த்தபோது உறுதியான விடை சொல்வதில் எனக்குள்ளே தயக்கம் இருந்தது. அவனுக்குள் தாங்கு திறனை தனது வேலைகளைத் தானே செய்யும் ஆற்றலை வளர்க்க வேண்டும் போல் தோன்றியது.

"ம்... உடனே சுகமாகிப் பழைய மாதிரி ஆகமுடியாது சாந்தன். ஆனால் சரியாக்க ஓரளவு அவ பழைய நிலையை அடையலாம். ஆனால்... உடனடியா இல்லை" எனது பதில் எனக்கே ஒரு மாதிரியாக இருந்தாலும் அவன் வலுப் பெற்றது போல எழுந்து வீடு சென்றுவிட்டான்." நாட்கள் ஓடின. இரு வாரங்களாக அவனைக் காண முடியவில்லை. ஆனால்... அந்த இரு வாரங்களுக்குள் ஏதேதோ... துயரங்கள் நடந்து முடிந்து விட்டன.

அதே கோயில் மண்டபத்தில் அவன் வந்து என்னைக் கண்டான்... சின்னஞ்சிறு உருவம் தள்ளாடிய படி சோகத்தின் பிரதியுருவாக வந்தது. நான் விழி களாலேயே வரவேற்று அருகே இருக்க இடம்விட்டு விலகி இருந்து கொண்டேன். ஒரு சில நொடிகள் மௌனத்தின் குமுறல். அடுத்த நிமிடமே 'ஓ' வென்று குரலெடுத்து அந்தப் பிராந்தியத்தையே உறைய வைத்து விட்டான். மெல்ல அவனது தோளில் கையை வைத்து ஆதரவாக வருடிக் கொடுத்து அவனது உணர்வுகளின் வடிகாலுக்கு ஆதரவாக இருந்தேன். மழை மெல்ல ஓய்ந்தது. வானம் வெளிப்பது போல அவனது முகத்தில் ஒரு தெளிவு பிறந்தது. என்னை ஊடறுத்துப் பார்த்தான்.

"முடிஞ்சுது எல்லாம் முடிஞ்சுது. எனக்கு இனி அம்மாவும் இல்லை அப்பாவும் இல்லை. எல்லாரும் என்னை அநாதை எண்டு சொல்லப் போகினம்... உங்களுக்குத் தெரியாதோ ரீச்சர். எங்கடை வீட்டிலை என்ன நடந்தது எண்டு. ஒருத்தரும் வந்து சொல்லேல்லையோ..... ஒரே பொலிசும் ஜீப்பும் ஆக்களும் தானே. அதுதான் என்ரை வகுப்புப் பொடியளுக்குத் தெரியாது போல. அண்டைக்கு அம்மாவுக்கு சுகமெண்டு கொண்டு வந்திட்டினம். என்னைப் பாத்துச் சிரிச்சவ. நானும் அவவும் ஒண்டா இருந்து சாப்பிட்டனாங்கள். அப்பம்மாவை வீட்டை வரக்குடாது எண்டு அப்பா சொல்லி அவையின்றை வீட்டை அனுப்பிப் போட்டார். நாங்கள் மூண்டு பேரும் றேடியோவிலை பாட்டெல்லாம்

கேட்டிட்டுப் பத்து மணிக்குப் படுத்திட்டம். அப்பாவுக்கும் அம்மாவுக்கும் நடுவிலை நான் படுத்தனான். நல்ல சந்தோசமாகக் கிடந்தது. ஆனா... அவை அண்டைக்கே அம்மாவுக்குத் திரும்பவும் கூடிட்டுது... நான் முழிச்சுப் பாக்கேக்குள்ள ஒரே மண்ணெண்ணெ மணம்... அப்பா நல்ல நித்திரை. அம்மாவின்ரை கையிலை குப்பி விளக்கு எரிஞ்சு கொண்டிருந்தது. திடீரென்று குனிஞ்சு அப்பாவுக்கு மேலை விளக்கைப் போட்டிட்டா... நான் கத்திக் கொண்டு எழும்பிறதுக் கிடையிலை அப்பாவிலை நெருப்பு நல்லாப் பிடிச்சிட்டுது... அப்பா எழும்பி அங்குமிங்குமா ஓட அம்மா, அப்பாவைப் பிடிச்சுக் கொண்டு 'ஓடாதையுங்கோ என்னையும் கூட்டிக் கொண்டு போங்கோ" எண்டு கத்திக் கொண்டே விழுந்து உருண்டு.... ஐயோ..." சாந்தன் வெட்ட வெளியை வெறித்துப் பார்த்துக் கொண்டு இருந்தான். அவனது விழிகளில் கலக்கம் தெரிந்தது....

"ம்.... எனக்கு நாலு நாளாக் காய்ச்சலெண்டு ஆஸ்பத்திரியிலை வைச்சிருந்தினம். பிறகு தான் அப்பா அண்டிரவே செத்திட்டார் எண்டும் அம்மா அடுத்த நாள் செத்துப் போனா எண்டும் சொல்லிச்சினம். சித்தியவை நிக்கினம். அவைதான்... என்னைத் தாங்கள் பாப்பினமாம் எண்டு என்னைத் தங்களோடை கூட்டிக் கொண்டு போயினமாம்.. அது தான்... உங்களிட்டைச் சொல்ல வந்தனான்..."

"அப்ப... படிப்பு... சாந்தன் உனக்கு அவையை முன்னமே பழக்கமா?" ஏன் இப்படி நான் கேட்டேன்?

என்னை இப்படிக் கேட்பதற்கு எது தூண்டியது... அவன் மேல் கொண்ட பரிதாபமா? அக்கறையா? அல்லது ஒரு சிறுவனின் வாழ்க்கை சீரழியாமல் இருக்க வேண்டுமே என்ற ஏக்கமா? ஆதங்கமா? சாந்தன் என்னை ஏக்கத்துடன் ஏறெடுத்துப் பார்த்தான். மழையில் நனைந்த ரோஜாவாக அந்த முகம் நீர்ச்சுமையில் கனத்துக் கிடந்தது. கஷ்டப் பட்டே தலையை நிமிர்த்தினான்... ஒரு பெருமூச்சு வெளிப் பட்டு நீண்டது.

"அம்மாவின்ரை வருத்தத்துக்கு எங்கடை காணி, நகை எல்லாத்தையும் அப்பா, சித்தியவையிட்டத்தான் அடைவு வைச்சவராம். அதுதான்.. என்னை... அவையின்ரை கடையிலை... வேலைக்கு வந்து நிக்கட்டாம். சாப்பாடு தருவினமாம். அவன் சித்தியின்ற மகன் - படிக்கிற பள்ளிக்கூடத்தில படிக்கவிடுவினமாம். அப்பம்மா என்ரை நன்மைக்கு எண்டு சொல்லி என்னை அனுப்பிறா... நானும் ஓமெண்டு சொல்லிப் போட்டன். சித்தி நல்லவ..."

எனக்குள்ளே பெரிய புயலே வீசியடித்தது. அதில் எனது நம்பிக்கை விருட்சங்கள் வேரோடு சாய்ந்து விழுந்தன. 'சோ'வென்று பேரிரைச்சலோடு எனது உள்ளக்கடல் பொங்கிக் கொந்தளித்தது. ஐயோ இது என்ன கொடுமை. எனது தொண்டைக் குழிவரை விழுங்கவும் முடியாது துப்பவும் முடியாது மூச்சுக் காற்றை அடைத்துக் கொண்டு பெரியதோர் துயரச் சுமை இரும்புக் குண்டாகக் கனத்தது - ஆமாம்.... எனக்கு ஏன் இந்தக் குமுறல். சாந்தன் சித்தி நல்லவ என்றுதானே சொல்கிறான்.

எனக்கு எதற்காக இந்தக் குழப்பம்... ம்... எனக்கே புரிய வில்லை. நான் ஒரு சாதாரண ஆசிரியை. அதுவும் என் முன்னே ஒரு பிள்ளை அழுதால் சேர்ந்து அழுகின்ற சராசரிப் பெண் ஜென்மம் ம்.... எனது உள ஆரோக்கியம் அவ்வளவுதான்.

"போட்டுவாறன் ரீச்சர்... கவலைப்படாதையுங்கோ. அம்மா அப்பாவின்ரை அந்திரட்டிக்கு வரேக்கை உங்களை வந்து கட்டாயம் பாக்கிறன்" நான் விழித்துக் கொண்டு விட்டேன்.

"ஓ.... ஓ... போட்டு வா சாந்தன்" நானும் எழுந்து தெருவரை அவனோடு நடந்து சென்றேன். எனது பாதை பிரிந்து செல்ல அதில் நான் திரும்பி என் வீடு சேர்ந்தேன்.

ம்.... எனது நண்பி சிவாவை நினைத்துக் கொண்ட போது அதிசயமாக இருந்தது. அவள் ஒரு உளவளத் துணையாளர் பயிற்சி பெற்றவள். அவள் அடிக்கடி சொல்லுவாள் "அவர்களது உலகத்துக்குள் நுழைந்து அதனை எமக்குப் பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும்.. உடனிருந்து உற்றுக்கேட்டு, ஒத்துணர்வுப்பதில் வழங்கி ஒரு நம்பிக்கைப் பாலத்தினூடு அவர்களை அப்படியே ஏற்றுக் கொள்ள வேண்டும். மூன்றாம் ஆளாக நின்று பார்க்க வேண்டும்"

ம்.... எப்படி? இது எப்படி அவர்களுக்கு முடிகிறது. எனது கேள்விக்குறியோடு சாந்தன் சித்தி வீட்டில் சந்தோஷமாக வாழ வேண்டும். இழந்த பாசங்கள் ஆழ்ந்த

நேசங்கள், கவனிப்புக்களைப் பெற வேண்டும் என்ற எண்ணத்தோடு எனது அன்றாட வாழ்வை ஆரம்பித்துக் கொண்டேன். ஆனாலும் இதயத்தின் ஒரு மூலையில் அவனது அந்த ஏக்கம் ததும்பும் விழிகள் மெல்ல மின்னிக் கொண்டிருப்பதைத் தவிர்த்துக் கொள்ளவும் முடிய வில்லை.

அந்த ஒரு மாத காலத்துள் நான் அவனைக் கொஞ்சம் கொஞ்சமாக மறந்து கொண்டு விட்டேன் என்றாலும் அவனது வகுப்பு மாணவர்கள் அவன் சித்தியின் கடையில் வேலை பார்ப்பதாகவும் படிப்பை நிறுத்தி விட்டதாகவும் செய்திகளைக் கூறியபோது மீண்டும் பாவம் அந்தச் சிறுவன் என்ற ஒரு ஆதங்கம் என்னுள் விஸ்வரூபமெடுத்தது.

அன்று சாந்தனின் நண்பன் ராஜாவைக் கூப்பிட்டு விசாரித்தபோது அவன் பயந்து பயந்து மிரண்ட பார்வையோடு என்னோடு பேசினான்.

“சாந்தனை நிறைய வேலை வாங்கிறான்கள். பாரம் தூக்க வைக்கினம். களவெடுத்தது எண்டு விறகு கட்டையாலை அடிச்சவை. எறும்புப் புற்றுக்கு மேலே நிக்கவைச்சவை. கட்டிவைச்சு மிளகாய்த்தூள் போட அவன் உரத்துக் கத்த ரோட்டாலை போனவை எல்லாரும் வந்து எட்டிப் பார்த்தவை... அதுக்குப் பிறகு சத்தம் ஒண்டும் கேக்கிறயில்லையாம்... எங்கடை மாமா வீட்டுக்கு அடுத்த வீடுதான் சாந்தன்ரை சித்தி வீடு. நான் எட்டிப் பார்த்தனான். உங்களிட்டைக் சொல்லச் சொன்னவன்.

அவனைக் காப்பாத்த வேணும் ரீச்சர். அவன் மெலிஞ்சு கறுத்துப் போனான் - பாவம்"

"ஏன் ராஜா இது அப்பம்மாவுக்குத் தெரியாதா?"

"இல்லை ரீச்சர். எங்கடை அப்பா இண்டைக்கு அப்பம்மாவுக்குச் சொல்லி அவனைக் கூப்பிட்டு ஏதாவது இல்லத்திலை சேர்க்க வேணும் எண்டு சொன்னவர். அதோடை அவனுக்கு ஏதோ உதவி செய்ய வேணும் என்றும் கதைச்சவர். சில வேளை உங்களிட்டை வருவார்"

எனக்குள்ளே இத்தனை நாட்களாகக் கேட்ட அந்த அவலக்குரல் இப்போது அலறலாகக் கேட்பது போலிருந்தது. ஏதாவது செய்ய வேண்டும். செய்தாக வேண்டும் என்று ஒரு வேகம் எழுந்து வளர்ந்து கொண்டு இருந்தது. அந்தச் சின்னஞ் சிறுவனை இப்படியெல்லாம் துன்புறுத்த எவருக்குமே அதிகாரம் இல்லையே. எத்தனை காட்டுமிராண்டித்தனம்! நான் என் தோழி சிவானை அணுகி இது பற்றிக் கதைத்தபோது ராஜாவின் தந்தை கூறிய பாதைபற்றியும் கதைத்தேன். வெள்ளிக்கிழமை இது பற்றிக் கதைப்பதாக முடிவெடுத்துக் கொண்டாலும் என் மனம் தவித்தபடியே இருந்தது. இப்படித்தான்... சில வேளைகளில் இந்தமாதிரி அநியாயங்களைச் சகித்துக் கொள்ளவே முடியாத ஒரு அழுத்தம் என்னுள் எழுவதை என்னால் உணர முடிகிறது....ம்.... என்னால் மூன்றாம் நபராக நின்று பார்க்க முடியவில்லையே....

ம்... அதோ... யாரது... இருவரின் பிடியில் திமிறத் திமிறக் கை கால்களை உதைத்தபடி யாரது... ஓ... நான்

திடுக்கிட்டு எழுந்து கொள்கிறேன். சாந்தன்! ஏன் அவனை இப்படி இழுக்கிறார்கள்? அவன் வருவான் தானே.

"ஐயோ... மாட்டன்... மாட்டன்.. என்னை விடுங்கோ. அங்கை கொண்டு போடாதையுங்கோ... சூடு போடுவா... ஐயோ..." திமிறிக் கொண்டே அலறியவன் என்னைக் கண்டதும் மிரள மிரள விழிக்கிறான்.

ராஜாவின் தந்தையும் ராஜாவின் அண்ணாவும் தான் அவனை என்னிடம் இழுத்து வந்திருக்கிறார்கள். அவன் வீட்டை விட்டுத் தப்பி ஓடி வந்தபோது இவர்கள் கண்டிருக்கிறார்கள். மீண்டும் தன்னைச் சித்தியிடம் அனுப்பிவிடப் போகிறார்களோ என்ற பயத்தில்தான் அவன் இவ்வாறு நடந்து கொண்டிருக்கிறான். பாவம் மிரண்டு போய் விட்டிருக்கிறான். சற்றுமுன் இவர்களைக் கண்டு தான் ஓடியிருக்கிறான் போலும். கோயில் மண்டபத்தின் மணற்பரப்பில் அவனை அமரச் செய்து அவர்களும் அமர்ந்து கொண்டபோது வீதியோரமாக ஒரு ஒட்டோ.... மீண்டும் சாந்தன் எழுந்து ஓட ஆயத்தமாகிறான். நான் மெல்ல அவனைப் பற்றி என்னருகே இருத்திக் கொள்கிறேன். ஒட்டோவில் வந்தது வேறு யாருமில்லை... என் நண்பி சிவாதான். நான் அறிமுகம் செய்து அவளையும் அமரச் செய்து விட்டு விலகி இருந்து அவர்களை அவதானிக்கிறேன்... ஓ .... எத்தனை கனிவாக இதமாக அவள் ஆரம்பிக்கிறாள். மெல்லிய மேகவர்ணச் சேலையோடு மிகவும் மென்மையான முகபாவத்தோடு சாந்தனுக்கு அருகே

அவள் இருப்பது அவனை நோக்கிக் கதையை ஆரம்பிக்கும் இந்தக் காட்சி... ஓ... இது... அவளுக்கே உரிய... இல்லையில்லை. ஆற்றுப்படுத்துவோருக்கே உரிய தனித்துவமோ.... நான் வியந்து போகிறேன்.

"சாந்தன்! பயப்பிடாமல் கதைக்கலாம். நான் உங்களுக்கு உதவி செய்ய எண்டு உங்கடை ரீச்சர்... இவ... வரச் சொல்லி வந்திருக்கிறன். உங்களால சொல்லக் கூடிய வரைக்கும் சொல்லலாம். நாங்கள் யாருக்கும் இதைப் போய்ச் சொல்லமாட்டோம்" உங்களுக்கும் உங்கடை பிரச்சனைக்கும் முழுப் பாதுகாப்புத் தருவம்... ம்... சொல்லுங்கோ... உங்களுக்குக் கதைக்கிறதிலை கொஞ்சம் கஷ்டம் இருக்கும் போல... எனக்கு விளங்குது... உங்களுக்குச் சொல்ல முடியேக்கை சொல்லுங்கோ.... நான் உங்களோடை இருக்கிறன்....ம்... பிறகு"

ஓ.... இது... சிவாதானா? ஏதோ... வேவதையின் குரல் போல எத்தனை மென்மையாக... பொறுமையாக... அரவணைப்பாக ஓ.... இவள்... இவளால் எப்படி இப்படிக் கதைக்கமுடிகிறது...? ம்...நான் கதையைக் கவனிக்க வில்லை... அவர்களது முக பாவங்களை, உடல் மொழிகளை உற்றுப் பார்க்கிறேன். அவன் ஷேட்டைக் கழற்றுகிறான். தோளில் முதுகில் எரிகாயங்கள். கம்பியின் கீறல்கள். கால்களில் கண்டல்கள்... அவன் விக்கி விக்கி அழுகிறான். அவர்கள் கதைக்கிறார்கள். ராஜாவின் பெரியப்பாவிடம் ஒரு படிவம் கொடுக்க அவர் அதை நிரப்பிக் கையெழுத்துப் போட அவள் அதைக் கவனமாகக்

கோவையில் வைக்க... காட்சிகள் மட்டுமே எனக்குப் புரிகிறது....

என்னுள்... என்னுள்... ஜில்லென்று இரத்தம் சூடேறிக் கொள்ள ஒரு பதட்டம் உடலெல்லாம் பரவுகிறது... சீ... என்ன மனிதர்கள்...இந்தப் பிஞ்சுடலை இப்படியெல்லாம் சித்திரவதைப் படுத்தி இந்தக் குழந்தை மனத்தை சின்னாபின்னமாக்கியிருக்கிறார்களே... இவர்களை.... ம்... என் கரத்தை மெல்லப்பற்றிக் கொள்கிறாள் சிவா... ஓ... நான் சமநிலை இழந்து விட்டேன்... நான் மெல்லத் தலைகுனிந்து கொள்கிறேன். சாந்தன்...?

நம்பிக்கையோடு தலை நிமிருகிறான்... ஓ... இது போதும்...!

# வருத்தம் அவளுக்கல்ல!

பலாமரத்திற்குக் கீழ்த் தாய்க் கோழி தன் குஞ்சுகளை அணைத்தபடி சுற்றுமுற்றும் மிக அவதானமாகக் கவனித்துக் கொண்டு, தன் குஞ்சுகள் செய்யும் செல்லச் சேஷ்டைகளை இரசித்தபடி படுத்திருந்தது. காலையில் இருந்து மதியம் வரை அவைகளுக்கு வேண்டிய தீனி தேடித் தேடிக் கிளறிக் கொடுத்துவிட்டு, அவைகள் உண்ணும் பொழுது தான் உண்ணாது அவைகளுக்குப் பாதுகாப்பாகச் சூழலை அவதானித்தபடி காவல் காத்துக் கொண்டிருக்கும். இதனைத் தினசரி அவதானித்து ஏங்கிப் போவாள் உமா. கோழியையும் குஞ்சுகளையும் பார்த்துத் தன்னை மறந்து ஏங்கிக் கொண்டிருந்தவளின் தலையில் 'ணங்' என்று விழுந்தது குட்டு. ஒரு விநாடி பொறி கலங்கினாற்போல கலங்கிப்போன உமாவின் காதைத் திருகியபடியே,

செல்வி

"சனியனே உன்ன உடுப்புத் தோய் என்டுவிட நீ என்ன இஞ்ச வாய் பார்த்துக் கொண்டு நிக்கிற? கெதியாப் போடி நாயே" என்ற வசவுகளுடன் முதுகில் நல்ல 'மொத்தும்' விழுந்தது. இவ்வளவும் அந்தப் பிஞ்சிற்கு கடந்த ஒரு வருடமாக நடந்து கொண்டிருக்கும் நிந்திய பூஜை. கோவிலில் கூட சில நேரம் பூஜை நடப்பதற்குப் பிந்தினாலும் உமாவின் நித்திய பூஜை சற்றும் பிசிறில்லாமல் நடந்து கொண்டிருந்தது.

கிணற்றடியில் பெரிய வாளிக்குள் கிடந்த சித்தியின் உடைகளும், பேசினுக்குள் அவவின் பிள்ளையின் சாணைச் சீலைகளும் குவிந்து கிடந்தன. ஏழு வயதுப் பிஞ்சு ஏழு மாதக் குழந்தையின் ஆடை கழுவுவது அந்த இயற்கை அன்னைக்குப் பொறுக்கவில்லைப் போலும், கண்ணீர் மாரி பொழிந்தாள். மழை தூறத் தொடங்கியதும் வீட்டிற்கு ஓடிப் போன வேகத்திலேயே சுவரில் எறிந்த பந்தாகத் திரும்பவும் கிணற்றடிக்கு ஓடிவந்தாள். கண்களில் அருவி வழிந்தோடியது.

"முந்தியொருக்கா பள்ளிக் கூடம் விட்டு வீட்ட வரேக்க மழையில நனைஞ்சு கொண்டு வந்திற்றன் என்று அம்மா எப்படிப் பதறித்துடிச்சுப் போனா. உடன என்ர உடுப்புக்கள மாத்தி தலையைத் துடைச்சு சாம்பிராணிப் புகைப்போட்டு மல்லித் தண்ணியும் அவிச்சுத் தந்தவா இப்ப." என்று தன் தாயை நினைத்ததும் உமாவிற்கு உள்ளத்தைப் பல நூறு அம்புகளால் துளைத்தது போல் இருந்தது. உடைகளை உமா சலவை செய்ய உமாவை மழை சலவை செய்தது.

இராத்திரி முழுக்க உமாவிற்கு நல்ல காய்ச்சல். காய்ச்சலின் வேகத்தில் வாய் பிதற்றினாள். அந்தப் பிஞ்சு உள்ளம் பட்ட வேதனைகள் தான் பிதற்றலாய் வந்தனவோ என்னவோ! அம்மா அம்மா என்ற சொற்கள் மட்டுமே கேட்டன. இவளின் பிதற்றல் சத்தம் கேட்டு அவளின் தந்தை வந்து அவளைத் தொட்டுப் பார்த்து விட்டு நல்ல காய்ச்சல் காயுது என்று சொல்லும் பொழுது அங்கு வந்த அவரின் ஆசை நாயகி மோகினி, "சொல்லக் கேட்காமல் மழையுக்க நிண்டு வெள்ளத்தில கப்பல் விட்டு விளையாடினவள்" என்று கொஞ்சங் கூட நாக்கூசாமல் பொய் சொன்னாள். அதனை உண்மையென்று அப்படியே நம்பிய அவர், "ஆட்டக்கார நாயே உனக்கு மெத்திப் போச்சு. சித்தீன்ர சொல்லுக் கேட்காம இப்ப தேடிக் கொண்டு நீ கிடக்க அவ கைக்குழந்தையோட உன்னோடயும் கஸ்டப்பட வைச்சிருக்கிற. உன்னோட எப்பவும் எனக்குக் கரைச்சல்" என்று திட்டியபடி எட்டி உதைத்தார். உதைத்த வேகத்தில் உமாவின் தலை சுவருடன் மோதுப்பட்டது. உடனேயே நினைவிழந்தாள்.

நினைவிழந்தவளை எவராவது என்ன ஏது என்று பார்க்கவில்லை. அப்படியே விட்டுவிட்டுச் சென்று விட்டனர். உமாவிற்கு இழைக்கப்படும் அநீதிகளைப் பார்க்கச் சகிக்காது வானம் அழுது கொண்டேயிருந்தது. யன்னலுக்குள்ளால் தெறித்த மழைச்சாரல் உமாவின் முகத்தில் பட்டு அவளை உணர்வடையச் செய்தது. மெதுவாகத் தன்னிலை உணர்ந்த உமா மெதுவாக எழுந்து தனது பாயில் சென்று படுத்தாள். உள்ளமும் உடலும்

களைத்துப் போயிருந்ததால் உடனே உறங்கிப் போனாள். உறக்கம் மாத்திரம் அவளை வஞ்சிப்பதேயில்லை. அந்த உறக்கத்தைக் கூடச் சுதந்திரமாக அனுபவிக்க முடியாமல் உஷத்காலப் பூஜையாகத் தண்ணீர் அபிஷேகம் நடை பெற்றது. காய்ச்சல் உடம்பு தண்ணீர் பட்டதும் வெடவெடென்று நடுங்கியது.

பயத்துடன் பாயை விட்டெழுந்தவளிடம் "பானை சட்டியக் கழுவீற்று பிள்ளயக் குளிக்க வார்க்க சுடுதண்ணி வச்சிற்று தொட்டியில தண்ணி நிரப்பிவிட்டு வீட்டயும் முத்தத்தையும் கூட்டீற்றுத் தான் பள்ளிக்குப் போக வேணும்" என்று பெரியதொரு உத்தரவுப் பட்டோலை வாசித்து முடித்தாள் மோகினிச் சித்தி - இல்லை பிசாசு.

முகம் கழுவுவதற்கு கிணற்றடிக்கு வந்த பொழுது சிவன் கோவிலில் திருப்பள்ளியெழுச்சி பாடிக் கேட்டது. பல்லைக் கடித்துக் கொண்டு தனது நோயைச் சகித்துக் கொண்டு ஏதோ ஒரு வேகத்தில் இயந்திர கதியில் வேலைகளைச் செய்து முடித்து விட்டு, வெள்ளைச் சட்டையைப் போட்டுப் புத்தகப் பையைத் தூக்கிக் கொண்டு படலையைத் திறந்து கொண்டு வீதிக்கு வந்து இரண்டு மூன்று தரம் வீட்டுல யாரும் தன்னைக் கவனிக்கிறார்களோ என்று பார்த்துவிட்டு மேற்குத் திசையில் விரைந்தாள். அவளது பாடசாலையிருந்தது கிழக்குத்திசையில்.

இராத்திரி நல்ல மழை பெய்தபடியால அதிகாலை ஐந்து மணிக்கே எழுந்து தோட்டத்திற்கு வந்துவிட்டார் முருகேசு. அங்கு மழைக்கும் காற்றிற்கும் ஈடுகொடுக்க

முடியாது நிலத்தை முத்தமிட்டுக் கொண்டிருந்த தக்காளி, மிளகாய்ச் செடிகளுக்கு அணைவாகத் தடிகளை நாட்டி அவற்றுடன் செடிகளை நிமிர்த்திக் கட்டிவிட்டு, களைகளைப் பிடுங்கிவிட்டு இன்று சந்தைக்குக் கொண்டு போகக்கூடிய மரக்கறிகளையும் ஆய்ந்து கூடையில் வைத்துவிட்டுத் தோட்டத்தைச் சுற்றிக் கொண்டு வந்தவருக்குச் சட்டென மூக்கில் வந்தடித்தது பலாப்பழ வாசம்.

"ஓ பிலாப்பழம் வெடிச்சிற்றுது. என்ர பேத்தி உமாவுக்கு பிலாப்பழம் என்டாக் கொள்ளை ஆசை. எவ்வளவு சுளையென்டாலும் திண்டு முடிச்சிடுவாள். முந்தியொருக்காக் குந்திற்கும் சுளைக்கும் வித்தியாசம் தெரியாம திண்டு அது வயித்துக்குள்ள தொங்கிப் பிறகு தொங்கல் ஆச்சீற்றப் போய்த்தான் மாறினது. என்ர குஞ்ச கனநாள் காணேல்ல. ராத்திரியும் கனவில ஒரே உமா அழுகிறமாதிரித் தான் கண்டனான். பிள்ளைக்கு ஏதும் வருத்தமோ தெரியேல்ல. இன்டைக்கொருக்காப் போய்ப் பிள்ளையப் பாத்திற்று வரோணும்" என்று நினைத்த படியே மளமளவென்று அலுவல்களை முடித்துவிட்டு மரக்கறிக் கூடையையும் எடுத்துக் கொண்டு தோட்டத்துப் படலையைக் கயிற்றால் கட்டிவிட்டு வீட்டிற்கு விரைந்து வந்தார்.

என்னவோ தெரியா இன்டைக்கு எழுப்பின சேரந் தொட்டு உமாவின்ர நினைவாக் கிடக்கு...ம்... என்ர சீமாட்டி உயிரோட இருந்திருந்தா உமா இப்பிடித் தேரைக் குஞ்சு போல இருப்பாளோ? என்று தன் மகளை நினைத்துக் கண்கலங்கினார். முருகேசரின் மனம் உமாவில்

நிலைத்து இருந்தாலும் பழக்க தோஷத்தால் கால்கள் வீட்டிற்குக் கூட்டி வந்தன.

பெருமூச்சோடு மரக்கறிக் கூடையை இறக்கிய வருக்கு அப்பொழுதுதான் திண்ணைக் குந்தில் வெள்ளைச் சட்டையுடன் உமா படுத்திருப்பது தெரிந்தது. அவளையே நினைத்துக் கொண்டிருந்தவருக்கு அவளை நேரில் கண்டதும் தலைகால் புரியாத சந்தோசத்தில் ஓடி வந்து அவளைத் தூக்கினார். அவரது கைகளில் பறித்துப் போட்ட கீரைத் தண்டாகத் துவண்டு சரிந்தாள் உமா.

உமாவின் மேனி நெருப்பெனக் கனன்றது. அவளைப் ·பாயில் கிடத்திவிட்டு முகத்தில் தண்ணீரைத் தெளித்து விசிறியால் விசிறினார். அவளது நினைவு திரும்பியதும் நல்ல சூடான 'ஹோர்லிக்ஸ்' கலக்கிக் குடிப்பதற்குக் கொடுத்து இரண்டு 'கிறீம் கிறெக்கர்' பிஸ்கட்டுகளையும் கொடுத்தார் உண்ணச் சொல்லி. 'ஹோர்லிக்ஸ்' குடித்து பிஸ்கட்டுக்களையும் உண்டவளுக்குச் சிறிது தென்பாக இருந்தது. உமாவை இந்தக் கோலத்தில் பார்த்த முருகேசருக்குத் தாங்க முடியாமலிருந்தது. தனது மகளை நினைத்தார். "சீமாட்டி நீ போய்ச் சேந்திற்ற இஞ்ச பார் உன்ர குஞ்சின்ர கோலத்தை" என்று அழுது புலம்பினார்.

தாத்தாவின் மடியிலேயே மீண்டும் உறங்கி விட்டாள் உமா. அவளது தலையைக் கோதியவாறே விசிறிவிட்டார். சிறிது நேரத்தில் தனது கருங்குவளைப் பூவைப் போன்ற கண்களை மலர்த்தித் தாத்தாவின் முகத்தைப் பார்த்தாள். அந்தக் கண்களில் நீர் நிரம்பியிருந்த காட்சி, மாரி காலத்தில் நீர் நிரம்பிய குளம் கரையை உடைத்துக் கொண்டு வந்து

விடுவேன் என்று தளும்பிக் கொண்டிருப்பதைப் போலவும் நீரிற்குள் இரண்டு குண்டு மீன்கள் பயத்துடன் அலைந்து திரிந்ததைப் போலவும் இருந்தன.

பேத்தியின் கேசங்களைக் கோதிவிட்டுக் கொண்டு இருந்த முருகேசர் அவளை அன்புடன் பார்த்து ஆதரவாக முதுகைத் தடவியபடியே "என்னடா ஏன் பிள்ளைக்குக் காய்ச்சல் வந்தது? மழைக்குள்ள நனைஞ்சனியோ? இப்பிடி மெலிஞ்சு போனியே! சாப்பிடுறதில்லையோ? சித்தி வடிவாச் சாப்பாடு தாறவாவோ?" என்று அன்போடும் ஆதங்கத்தோடும் கேட்டார். முருகேசர் கேட்ட தொனியும் காட்டிய அன்பும் உமாவின் மனதைத் தொட்டது. அத்துடன் சித்தியைப் பற்றிக் கேட்டதும் அவளது விழிகளில் கண்ணீர் மடைதிறந்தாற் போல் பாயத் தொடங்கிற்று. தாத்தாவின் நெஞ்சில் முகத்தைப் புதைத்தவாறே,

"என்னால அங்க இருக்கேலாது. ஒவ்வொரு நாளும் எனக்கு ஒரே அடி விழுகுது. நான் அங்க போகமாட்டன். அங்க பிசாசு இருக்கு. நான் போக மாட்டன்... மாட்டன். அதிற்ற குட்டு வேண்டி வேண்டியே என்ர தலையில சரியான காயம். தலை சரியா நோகுது. காதைப் பிடிச்சு இழுத்து இழுத்து ஒரே காது வலிக்குது. உடுப்புத் தோய்ச்சுத் தோய்ச்சு கை எல்லாம் தோலுரிஞ்சு புண் வந்திட்டுது. எப்ப பார்த்தாலும் எனக்குப் பழைய சாப்பாடும் அவை திண்ட மிச்சத்தையும் தான் தரினம். ஒரு நாள் அப்பா பிலாப்பழம் வேண்டியந்தவர். அந்தப் பிசாசு

எனக்குத் தராம ஒளிச்சு வைச்சிற்றுது. எனக்கெண்டா அதைச் சாப்பிடோணும் எண்டு ஆசை ஆசையா இருந்தது. அதின்ர வாசத்தை வைச்சு அது எங்க இருக்கெண்டு கண்டுபிடிச்சு எடுத்துச் சாப்பிட்டுக் கொண்டு இருக்கேக்க அந்தச் சனியன் கண்டிட்டு என்ர தொண்டையப் பிடிச்சு நெரிச்சுப் போட்டுது. அந்த நோவில இரவு சாப்பிடாமப் படுத்திற்றன். அப்ப அப்பா கேட்டார் ஏன் உமா சாப்பிடாமப் படுத்திற்றாள் எண்டு. அதுக்கு அது சொல்லிச்சு முழுப்பிலாப்பழத்தையும் திண்டா பிறகெப்பிடிப் பசிக்கும் எண்டு பொய் சொல்லிப் போட்டா. அதுக்கு அவர் முழுக்கத் தின்டிட்டாளோ சரியான சாப்பாட்டு ராமி கழுதைக்கு அடிச்சு நல்ல பழக்கம் பழக்கோணும் எண்டு சொன்னவர். உண்மையாத் தாத்தா நான் அப்ப தான் சாப்பிடத் தொடங்கினனான். உடன அவ வந்து கண்டிட்டு தொண்டையப் பிடிச்சு நெரிச்சுப் போட்டு பறிச்சுக் கொண்டு போட்டு இப்பிடிப் பொய் சொல்லுறா. வீட்டில வேலை செய்து முடிச்சிற்று படிக்க இருந்தா உடன பிள்ளையத் தூக்கு அழாமப் பார் எண்டுவா. அப்ப நான் எப்பிடிப் படிக்கிறது. தாத்தா இனி நான் அங்க போகமாட்டன் உங்களோடயே இருக்கிறன் தாத்தா. என்ர அம்மா செல்லடிச்சுச் சாகாம இருந்திருந்தா இந்தப் பிசாசு எங்கட வீட்ட வந்திருக்குமா? என்று அழுகையும் ஆத்திரமுமாகக் கேட்டாள்.

இதனைக் கேட்டுக் கொண்டிருந்த முருகேசரின் இரத்தம் கொதித்தது; நரம்புகள் புடைத்தன. ஆத்திரத்தில் நரைத்த மீசை துடித்தது. விழிகளில் நீர்க் கோலங்கள்.

அப்பொழுது அடுத்த வீட்டு வானொலியில் 'உன்னைத் தானே தஞ்சம் என்று நம்பி வந்தேன் நானே...' என்ற பாடல் ஒலித்துக் கொண்டிருந்தது. உள்ளத்தின் கனலைக் கொட்டித் தீர்த்த தன் பேத்தியைத் தன்னுடன் இறுக்கி அணைத்துக் கொண்டே "என்ர குஞ்ச இனி நான் அங்க போகவிட மாட்டன் தாத்தாவோடயே இரடா" என்று ஆறுதல் மொழி பகன்று அவளைத் தேற்றி மருத்துவரிடம் கூட்டிச் சென்று மருந்தெடுத்துக் கொடுத்தார். உமா சரியான பலவீனமாக இருப்பதாகவும் அதால காய்ச்சல் கூடுதலாக இருப்பதாகவும், மருந்துகளுடன் சத்துணவுகள் கொடுக்குமாறும் கூறினார் மருத்துவர்.

உமாவிற்கு வேண்டிய மருந்துகளைக் கொடுத்து விட்டு அசதியில் உறங்கிய உமாவைப் பார்த்துக் கொள்ளுமாறு பக்கத்து வீட்டுப் பத்மாவிடம் கூறிவிட்டு சால்வையை எடுத்துக் கொண்டு விறுவிறுவென மருமகனின் வீடு நோக்கி நடந்தார்.

மோகினியின் பிள்ளை வீரிட்டு அழுது கொண்டு இருந்தது. அதைக் கேட்டுக் குசினிக்குள் அலுவலாயிருந்த மோகினி,

"இந்தச் சனியன் எங்க போய்த் துலைஞ்சுதோ தெரியா. இஞ்ச நான் வேலையோட பிள்ளையைத் தூக்கேலாம அவதிப்படுறன். அந்த நாய் எங்கயோ லாத்தப் போய்ற்றுது. வரட்டும் இன்டைக்குப் பெட்டைக்கு நல்ல சூடு போட்டாத்தான் சரிவரும் என்று கூறியபடியே இரும்புக் கம்பி ஒன்றை எடுத்து நெருப்பிற்குள் வைத்து

விட்டுத் திரும்பியவளுக்குப் பேரதிர்ச்சி.. இவ்வளவு நேரமும் இவள் பேசிய அனைத்தையும் கேட்டபடி குசினி வாசலில் கதவில் சாய்ந்து கொண்டே கைகளை மார்பிற்கு குறுக்காகக் கட்டிக் கொண்டே நின்றிருந்தார் உமாவின் தாத்தா.

மோகினிக்கு முகத்தில் வியர்வை ஆறு. பெருக்கெடுத்தது. இதயத்தின் 'லப் டப்' இடியோசை போல அவளுக்குக் கேட்டது. கைகள் 'ரைப்' அடித்தன. அதிர்ச்சியில் உதடுகள் ஒன்றோடு ஒன்று ஒட்டிக் கொண்டு நாக்கு அசைய மறுத்ததில் அவளுக்குப் பேச்சு வரவில்லை. விநாடி நேரத்திற்குப் பிறகு,

"நா.......நா......ன்.....இ....ல்.....ல.....அது.....சும்மா......கம்பிய.... அடுப்.....புக்க......அடுப்புக்க.......இல்.....லை வைக்கேல்ல.... அ....து.....விறகு......விறகு'' என்று திக்கித் திணறித் தடுமாறியதில் வார்த்தைகள் கோர்வையின்றி துண்டு துண்டாக வந்து விழுந்தன.

கோபமே உருவாக வந்து நின்றவருக்கு மோகினியின் இந்தத் தடுமாற்றம் சிரிப்பை வரவழைத்தாலும் அதை வெளியில் காட்டிக் கொள்ளாமல், "என்ன உனக்கும் காய்ச்சலா? உமாவும் காய்ச்சலில் பிதற்றினாள். நீயும் பிதற்றுற. மருந்து எடுக்கேல்லயா? உனக்கு மருந்து மனநோய் டாக்குத்தரிட்டத் தான் எடுக்க வேணும்" என்று கூறியவர் திரும்பித் தனது வீடு நோக்கிச் சென்றார்.

# மானுடம் செத்துப்போன....

அலை அலையாய் நெளிந்த கூந்தலுக்கு எண்ணெய் பூசிப் படிய வாரி இரட்டைப்பின்னலிட்டிருந்தாள். மூன்றாம் பிறை போன்ற நெற்றி, வில்லென வளைந்த புருவங்கள், நீண்ட கூரான மூக்கு, சிறிய செம்பவள இதழ்கள், பூரண சந்திரன் போன்ற வதனம், நல்ல சந்தன நிறம். குவளை மலர் போன்ற அந்தக் கண்களில் மட்டும் வற்றாத சோகம். சலிப்பு நிறைந்த பார்வை.... அழகான நீண்ட விரல்கள். நகங்கள் சீராக வெட்டப்பட்டு இருந்தன. அந்தக் கைகளையே பார்த்துக் கொண்டு இருந்தாள் வதனா.

"வதனா! உங்களுக்கு ஏதோ சொல்ல வேண்டும் போல இருக்குது. ஆனால் தயங்கிறீங்க என்டு எனக்கு விளங்குது. எப்பவும் நான் உங்களோட இருப்பன். நீங்கள் தாராளமா உங்களைப்பற்றி எனக்குச் சொல்லலாம்"

## செல்வி

மெல்ல முகத்தை நிமிர்த்தி, நிதானமாக எனது கண்களை இரண்டு மூன்று நிமிடங்களுக்கு ஊடறுத்துப் பார்த்துக் கொண்டிருந்தாள். நான் புன்னகையுடன், "நிறைய யோசிக்கிறீங்க போலிருக்கு. வடிவா யோசிச்சுப் போட்டு என்னோட கதைக்கலாம். அதுவரைக்கும் நான் உங்களோட இருக்கிறன்" ஒரு இமைப் பொழுதிற்குள் அந்த விழிகளில் நம்பிக்கை ஒளிக்கீற்றுப் பளிச்சிட்டது. கதிரையில் நிமிர்ந்து உட்கார்ந்து, எனது கண்களைப் பார்த்தவாறே தனது கதையைச் சொல்லத் தொடங்கினாள்.

"நான் சித்தியோடயும் மாமாவோடயும் தான் இருக்கிறன். அப்பா எப்பயெண்டாலும் இருந்திட்டு வருவார். வந்தாலும் சித்தியும் மாமாவும் அப்பாவோட சண்டை பிடிச்சுக் கொண்டிருப்பினம். அவையளுக்கு அப்பா என்னப் பாக்க வாறது விருப்பமில்ல. ஆனா அப்பா..."

"பிள்ளேன்ர சித்தியும் மாமாவும் அப்பா வாறபோது சண்டை பிடிக்கிறது உங்களுக்கு கவலையா இருக்கெண்டு எனக்கு விளங்குது"

"ஓம் ரீச்சர் அப்பாவ நினைச்சா எனக்குக் கவல தான். சித்தியையும் மாமாவையும் நினைச்சா கோபம் கோபமா வருகுது. அப்பா என்னப் பாக்க வாறதுக்கு இவை ஏன் சண்டை பிடிக்கோணும்? பாவம் அப்பா, அவர் எவ்வளவு ஆசையா என்னப் பாக்க எண்டு வாறவர்"

"ஆ....வதனாவின்ர அப்பாக்குப் பிள்ளேல நல்ல அன்பிருக்குது என்டு விளங்குது. அப்ப பிள்ளேன்ர அப்பாவைப் பற்றிக் கொஞ்சம் சொல்லுறீங்களா...?"

"அப்பா திருவையாத்தில கடை வைச்சிருக்கிறார். அப்பம்மாவும் தம்பியும் அவரோடதான் இருக்கினம். திருவையாறு எவ்வளவு நல்ல இடம்? அங்க இருக்கத்தான் எனக்கு விருப்பம்." என்று தனது மன ஆதங்கத்தை வெளிப்படுத்தினாள்.

"உங்கட நிலை எனக்கு விளங்குது. அம்மாவைப் பற்றிக் கொஞ்சம் சொல்லுறீங்களா? இதனைக் கேட்டதும் கண்களில் அனல் பறக்க,

"அது செத்துப் போய்ற்றுது. அதால தான் எனக்கு அப்பாவும் இல்லாம நான் இவேற்ற இருந்து கரைச்சல் படுறன்"

குங்குமமாய்ச் சிவந்த முகத்தில் முத்து முத்தாகத் துளிர்த்த வியர்வையைக் கைக்குட்டையால் துடைத்தாள் வதனா. தண்ணீர் அருந்தினாள். மூச்சை ஆழமாக இழுத்து விட்டுக் கொண்டபின் கைகளைப் பிசைந்து கொண்டு இலக்கின்றி எங்கோ வெறித்தாள். சிறிது நேரம் சென்ற பின், "பிள்ளைக்கு அம்மாவப் பற்றிக் கதைக்கிறது பிடிக்க வில்லைப்போல, கோபம் வருகுது" என்று நான் கேட்டதும், விசுக்கென்று என்னை நோக்கித் திரும்பியவள்,

"பின்ன என்ன ரீச்சர் என்னையும் தம்பியையும் அப்பாவையும் விட்டிட்டு அவ..." என்று காரமாக வார்த்தைகளைக் கொட்டியவள் விசித்து விசித்து அழத் தொடங்கினாள். அவளது அழுகை ஓயும் வரை அவள் முதுகைத் தடவிக் கொடுத்தவாறு அமர்ந்திருந்தேன். அழுகை சற்று ஓய்ந்ததும் "அவ நான் மூன்று வயதா இருக்கேக்க வெளிநாட்டுக்குப் போய்ற்றா. அப்ப தம்பிக்கு

ஒரு வயது. பாவம் அம்மா இல்லாம ஒரே அழுகை தான். இப்ப என்ன செய்யிறானோ?"

"பிள்ளேன்ர அம்மா, உங்கள எல்லாம் விட்டிட்டு வெளிநாட்டுக்குப் போனதும் தம்பி அழுததும் உங்களுக்குக் கவலையா இருக்கு"

"ஓம் ரீச்சர். அவ போன உடன சித்தி சொன்னவா அம்மா உங்களுக்கு உடுப்பு சொக்கிளேற்று எல்லாம் வாங்கி அனுப்புவா; கொஞ்ச நாளால என்னையும் தம்பியையும் வெளிநாட்டுக்குக் கூப்பிடுவா என்று. ஆனா எனக்கு 12 வயசு ஆகீற்றுது. அவ இன்னும் தான் எங்களக் கூப்பிடேல்ல. எனக்கெண்டா அவ இனி எங்களக் கூப்பிட மாட்டா போலத்தான் இருக்கு. அவ அங்க ஆரையோ... ஆரையோ..." மீண்டும் அழத்தொடங்கினாள் வதனா. கைகளால் முகத்தைப் பொத்திக் கொண்டு சத்தமின்றி குலுங்கிக் குலுங்கி அழுத காட்சி நீரைவிட்டு வெளியே தூக்கிப் போட்ட மீன் குஞ்சொன்று துடிதுடிப்பது போல் இருந்தது. சில நிமிடங்களுக்குப் பின் கண்களைத் துடைத்தவாறே,

"அவ வேற கலியாணம் செய்திட்டாவாம். ஒரு நாள் பள்ளிக்கூடம் போறவழியில அப்பம்மா கண்டு சொன்னவா. என்னையும் தன்னோட வரச்சொல்லிக் கேட்டவா. நான் சித்திக்கும் மாமாவுக்கும் பயந்து மாட்டன் எண்டிட்டன். ஆனா எனக்குத் தம்பியிருக்கிற இடத்தில இருக்கத்தான் விருப்பம்" என்று கூறிவிட்டுத் தலையைக் குனிந்து விரல்களைக் கோர்த்துப் பிரித்துக் கொண்டு இருந்தாள்.

"பிள்ளைக்கு அம்மா வேற கலியாணம் செய்தது சரியான கவலையா இருக்குது. தம்பியிருக்கிற இடத்தில தான் இருக்க விரும்பிறீங்க. இப்ப நீங்க என்ன செய்யலாம் என்று நினைக்கிறீங்க?"

"தம்பியும் அப்பாவும் நானும் ஒன்டா இருந்தம் என்டா சந்தோசமா இருக்கலாம் தான. அம்மா இருந்திருந்தா நாங்க இப்பிடிப் பிரிஞ்சு பிரிஞ்சு இருப்பமா? எல்லாம் அவாவாலத்தான் வந்தது. ஏன்தான் எங்கள விட்டிட்டுப் போனாவோ? இந்தக் குட்டித் தம்பியக்கூட விட்டிட்டுத் தான போய்ற்றா."

"அப்பாவும் தம்பியும் நீங்களும் ஒன்றாச் சேர்ந்து இருக்க விரும்பிறீங்க. அது நல்ல முடிவு. அதை நான் பாராட்டுறன்" என்று சொல்லியவுடன்,

"ஆனால் ரீச்சர் சித்தியும் மாமாவும் அப்பாவோட சண்டை பிடிப்பினமோ தெரியா. அதுதான் பயமாக் கிடக்கு. அவை கட்டாயம் சண்டை பிடிப்பினம். ஏனென்டா நான் அப்பாவோட போய்ற்றா, அவவுக்கு வீட்டு வேலையள் செய்யிறதுக்கு ஒருத்தரும் இல்ல. விடிய எழும்பி அடுப்பில சாம்பல் கிள்ளிறது தொடக்கம் பின்னேரம் ஆறுமணிக்கு ஆடுகளக் கொண்டந்து பட்டியில அடைக்கு மட்டும் வேலதான். பள்ளிக்கூடத்தில இருக்கிற அவ்வளவு நேரமும் தான் நான் சந்தோசமாகவும் நிம்மதியாகவும் இருக்கிறனான்."

"பிள்ளக்கு சித்தி நிறைய வேலை செய்யச் சொல்லி இருக்கிறா. பள்ளிக்கூடத்தில மட்டும் தான் நீங்க

சந்தோசமா இருக்கிறீங்க. இப்ப அப்பாவோட போனாலும் அவையள் அப்பாவோட சண்டை பிடிப்பினம் எண்டு பயப்பிடுறீங்கள். நான் உங்கட சித்தியோடயும் மாமாவோடயும் கதைக்கட்டுமா? என்று கேட்டதும் வதனா சம்மதமாகத் தலையாட்டினாள்.

"அப்ப சரி நான் அவையோட கதைச்சிற்று, நாங்க திரும்பவும் வாற புதன் கிழமை சந்திப்பம். இவ்வளவு நேரமும் கதைச்சது இப்ப எப்படி இருக்கு?"

"இப்ப கொஞ்சம் நிம்மதியா இருக்கு ரீச்சர். என்ர பிரச்சினைக்கு நீங்க வழிகாட்டிறது சந்தோசமாயிருக்கு. நான் போட்டு வாறன் ரீச்சர்."

மாலை வீரனும் இரவு மங்கையும் கைகுலுக்கிக் கொள்ளும் ஒரு அந்திப் பொழுதில், நான் வதனாவின் வீட்டிற்குச் சென்றேன். ஏழ்மையைப் பறைசாற்றிக் கொண்டு நின்றது அவர்கள் வசித்த வீடு. ஆட்களுக்கும் ஆடுகளுக்கும் அங்கு சம உரிமை வழங்கப்பட்டிருந்தது. ஆடுகளுக்கு குழை கொடுத்துக் கொண்டிருந்த வதனா என்னைக் கண்டதும் மகிழ்வுடன் ஓடி வந்து உள்ளே கூட்டிச் சென்றாள். தனது சித்திக்கும் மாமாவிற்கும் என்னை அறிமுகப்படுத்தினாள். அவளின் சித்தியும் மாமாவும், முகத்தில் கேள்விக் குறி தொக்கி நிற்க எழுந்து என்னை வரவேற்றனர்.

நேரடியாகவே வதனாவைப் பற்றி, அவளின் விருப்பத்தைப் பற்றி அவர்களிடம் நான் சொன்னதை அவர்கள் ஏற்றுக் கொள்ள மறுத்தனர். வதனாவின் சித்தி, தனது அக்காவின் மகளை, வளர்ப்பதற்குத் தனக்குத்தான்

கூடுதலான உரிமை இருப்பதாக வாதிட்டார். வதனாவின் மாமா.

"முளைச்சு மூண்டு இலை விடேல்ல. அதுக்கிடயில தான் நினைச்சதைச் செய்ய வெளிக்கிட்டிட்டாவோ?" என்று ஆத்திரப்பட்டார். சுடுகுது மடியைப் பிடி என்ற மாதிரி அவர்களுடன் அணுக முடியாது. வதனாவின் நிலையோ முள்ளில் போட்ட சேலையாக இருக்கிறது. அதனை மெல்ல மெல்லத் தான் எடுக்க வேண்டும் எனத் தீர்மானித்துக் கொண்டு, வாழைப் பழத்தில் ஊசி ஏற்றுவது மாதிரி அவர்களுக்கு விளக்கவைத்தேன். ஆனாலும் எனது முயற்சிகளுக்குக் கிடைத்த பலன் பூச்சியம். நான் பிடித்த முயலுக்கு மூன்று கால் என்று நிற்பவர்களுடன் என்னத்தை எப்படிக் கதைப்பது என்று தெரியாத நிலையில் இருந்தேன் நான்.

தனது துன்பங்களுக்கு நல்லதொரு விடிவினை ஏற்படுத்துவேன் என்று பூரணமாக நம்பிக் கொண்டு இருந்த வதனாவின் விழிகள் குளமாகியதை என் மனம் ஏற்றுக் கொள்வதற்குச் சிரமப்பட்டது. மனித வடிவிலிருந்த மானுடம் மரத்துப் போனவர்களுடன் எப்படிக் கதைப்பது என்று தெரியாமலும் என்னையே மலை போல நம்பிக் கொண்டிருந்த வதனாவிற்கு ஒரு வழியேற்படுத்திக் கொடுக்க முடியாமலும் தர்மசங்கடத்தில் சிக்கித் தவித்தேன்.

# பூவொன்று புயலாகிறது...

மாலைச் சூரியனின் பொன்னிறக் கதிர்கள் மேலைச் செவ்வானச் செம் பஞ்சுக் குழம்பில் பட்டுத் தெறித்துப் பிரபஞ்சத்தையே சிவப்பாயடித்துக் கொண்டு இருக்கிறது. எத்தனை வர்ணங்கள், ஜாலங்கள், வர்ணக் கலவைகள், மாலையின் பிரியா விடையிலே இரவு மங்கை கைகுலுக்க அந்தி மாலை பிறக்கிறது. பறவைக் கூட்டங்களின் பிரிவுத்துயர்ப் பரிமாற்றங்கள் கூட்டிற்குள் எதிர் பார்ப்புடன் காத்திருந்த குஞ்சுகள் ஆதரவாகக் கீச்சிடுதல்கள், கன்றுகளின் பாசம் கொப்பளிக்கும் அழைப்புகளுக்கு கழுத்து மணிகள் குலுங்கப் பதில் கொடுக்கும் தாய்ப் பசுக்களின் விரைவுகள், வயல் வெளிகளில் இருந்து குடும்பத்தோடு வீடு திரும்பும் உழவர்களின் வருகையை வாஞ்சையோடு துள்ளிக்

பகீரதி

குதித்துச் சலாம் சொல்லும் காவல் கடமை செய்த நன்றியுள்ள ஜீவன்களின் மொழியில்லா மொழிப் பரிமாற்றங்கள். அடர்ந்த பெரிய விருட்சங்களில் இருந்து இரவுப் பயணத்தை ஆரம்பிக்கும் வௌவால் கூட்டங்களின் சிறகுகளின் பேரிரைச்சல் ஓ... அற்புதமான விவசாயக் கிராமம் ஒன்றின் இரவுப் பொழுது மெல்லத் துயில் கலைகிறது.

வானத்தில் கொட்டிப் பரப்பிவிட்ட வைகறைப் பூக்கள், பொரியரிசிப் பூமணிகள், இயற்கையன்னையின் வெம்மை தணிக்கும் இதமான தென்றலின் இனிய தழுவல், பசுமை நிறைந்த நிலவின் ஒளி மழைகளில் கதைகூறி நிலவு காட்டி அமுதூட்டும் அன்னையர் தம் குழந்தைகளை அரவணைத்துத் தாலாட்டும் இனிய சங்கீதம், இயற்கை அன்னை தன் இனிய குழந்தைகளை இறுக அணைத்தபடி ஆனந்த அமைதியில் ஆழ்ந்து போகிறாள்.

ஓ.... எட்டு மணியாகி விட்டதா? ஓ..... 'தாய்மை' என்னும் தலைப்பில் அடுத்த வாரத்திற்கான கட்டுரை ஒன்றை எழுதுவதற்கான சிந்தனையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த எனது சிந்தனை... அதோ..... எனது ஜன்னலோரத்து மல்லிகைப் பந்தல் அருகே ஆடிய நிழற் கோலத்தில்.... மெல்லக் கலைகிறது... இது என்ன... மெல்லிய விசும்பல் ஒலி... ஓ... யார்.... யார்... அது... இந்த இரவுப் பொழுதில்.... கலவரத்துடன் திடுக்கிட்டு எழுந்த என் விழிகள் குத்திட்டு நிற்கின்றன. இயந்திரமாக வாசற்புறம் செல்கிறேன். கதவைத் திறக்கிறேன். அந்த

நிழலுக்கான நிஜத்தைப் பற்றிக் கொள்கிறேன். உள்ளே அழைத்து வந்து என் அறையில் அமர்த்திக் குளிர்ந்த தண்ணீரைக் கூஜாவில் இருந்து ஊற்றி, அதனைப் பருக வைத்து மெல்ல என் அருகே கதிரையை இழுத்துப் போட்டு அமர்ந்து கொள்கிறேன்.

ஓ.... இந்தச் சிறுமி வழமையாகக் காலை வேளை களில் ஓட்டமும் நடையுமாகப் பாடசாலைக்கு விரைகின்ற, அவசர அவசரமாகப் புத்தகங்களை மார்போடணைத்தபடி உச்சி வெயிலிலே பறக்கின்ற, முகத்திலே சோகத்தை, ஒரு சுமையை, இறுக்கத்தைச் சுமந்து கொண்டு ஒரு இயந்திரமாக ஓடுகின்ற சிறுமி. எனது வீட்டிற்கு ஐந்து வீடுகள் தள்ளிக் குடியிருக்கும் ராஜி. பத்துப் பதினைந்து வயதிருக்கும். கடந்த இருமாத காலமாகவே இந்தச் சிறுமியை நான் காண்கிறேன். வேறு எந்தத் தகவலும் இதுவரை இவளைப் பற்றி எனக்குத் தெரியாது. ம்... கேவிக் கேவி அழும் இந்தத் தளிருக்கு... அப்படி என்ன துயரோ?

"அன்ரி என்னை வெளியாலை துரத்திப் போடாதையுங்கோ. நான் வந்ததை ஒருத்தருக்கும் சொல்லிப் போடாதையுங்கோ. கதவைப் பூட்டுங்கோ; ஜன்னலையும் பூட்டுங்கோ. எனக்குப் பயமாக்கிடக்கு;"

மிகவும் பதட்டத்தோடு மன்றாடிக் கொண்டிருக்கும் அவளைப் பார்க்கப் பரிதாபமாக இருக்கிறது. நான் எழுந்து ஜன்னலைப் பூட்டுகிறேன். கதவைத் தாழ்ப்பாள் போடுகிறேன். அம்மாவிடம் யார் வந்தாலும் எதுவும்

சொல்ல வேண்டாம் என்று கூறிவிட்டு மீண்டும் அவளருகே அமர்கிறேன். மெல்ல வந்து கரத்தைப் பற்றிக் கொள்கிறேன்.

"ஆ....."

கத்திக் கொண்டே கையை இழுத்துக் கொள்கிறாள். ஓ...தீக்காயம்... பொங்கிப் பருத்திருந்தது போலும். நான் தொட்டதும் அவள் பதறி இழுத்துக் கொண்டதால் உடைந்து ஊனம் வடிந்து தோல் கிழிந்து.... என்ன பயங்கரம்....

"அன்ரி, மாமி நெருப்பால சுட்டவ. அது தான்..." விழிகளில் உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கிறது. நெருப்பின் சூட்டிற்கு ஈடுகொடுக்க முடியாத மென்மை யான தோல் வெந்து கிழிந்து அலங்கோலமாகக் கிடக்கிறது. அலங்கோலமாகக் கிடப்பது தோல் மட்டுமல்ல மனித நேயமும்கூட... உருக்குலைந்து கிடப்பது குழந்தையின் தோற்றம் மட்டுமல்ல. ஒட்டுமொத்தமாகச் சிறுவர்களின் அடிப்படை வாழ்வியல் உரிமைச் சாசனமே உருக்குலைந்து தாள் தாளாக நார் நாராகக் கிழிந்து தொங்கிக் கொண்டிருக்கிறது. ம். அழுகை மெல்ல ஓய்கிறது. முகத்தில் ஒரு தெளிவு. கதிரையில் நன்றாக அமர்ந்து ஆவலோடு என் முகத்தைப் பார்க்கிறாள் ராஜி. அந்தப் பார்வை 'என்னை... ஏற்றுக் கொள்வீர்கள் தானே' என்று எதிர்பார்த்துக் காத்திருக்கிறது. நான் மெல்லத் தலையசைத்து முன்சாய்ந்து அவளது விழிகளுக்கூடாக உள்நுழைந்து அந்த உயிர்ப் பறவையை அப்படியே அரவணைத்துக் கொள்கிறேன். அவள் தொடர்கிறாள்....

"இரண்டு மாதங்களுக்கு முன்னம் ஒரு நாள் அம்மா என்னைக் கோயிலுக்குக் கூட்டிக் கொண்டு போய் அர்ச்சனை பண்ணிப் போட்டுக் குளக்கரைக் கட்டில இருந்து கொண்டு என்ரை தலையைத் தடவிக் கொண்டு, "ராஜி உனக்குப் பத்து வயது இண்டையோட முடிந்து பதினொரு வயதாகுது. நீ இன்னும் இரண்டு மூன்று வருஷத்தில பெரிய பிள்ளையாகிடுவ. அதுக்குப் பிறகு உன்னை விட்டிட்டு எங்கேயும் போகேலாது. இந்த காசு காணிபூமி எல்லாம் அப்பாவின்ர வருத்தத்தோடயும் செத்தவிட்டோடயும் கரைஞ்சு போய்ச்சுது. உன்ர பெரிய மாமா என்னை வெளிநாட்டுக்கு வரட்டாம். மூன்று வருஷத்தில கைநிறைய உழைச்சுக் கொண்டு திரும்பி வரலாமாம். இல்லாட்டி உன்னையும் அங்க கூப்பிடலாமாம். நான் இரண்டு கிழமையா யோசிச்சு முடிவில போறதெண்டு தீர்மானிச்சிட்டன். எல்லாம் உனக்காகத் தான் ராஜி. உன்னைப் பூப்போல வைச்சிருக்கவேணும் என்டு கடைசி மூச்சு வரைக்கும் உன்ர அப்பா துடிச்சுக் கடைசியா அந்த ஆசை நிறைவேறாமலே போட்டார். நான் அதே மூச்சா அதைச் செய்து முடிக்க வேணும். இல்லாட்டி அப்பாவின்ர ஆத்துமா அமைதிப்பாடது. நீ நல்ல பிள்ளை கெட்டிக்காரி நல்லாய்ப் படிப்பாய், சின்ன மாமாவும் மாமியும் தங்கடை சுகந்தியைவிட உன்னிலை உயிர். உன்னைக் காப்பாத்துவினம். அம்மாவின்ர மனசை உடைக்காம சந்தோசமாப் போக நீதான் தைரியம் தரவேணும். நீ அழுதால் என்னாலை தாங்கேலாது உன்னைக் கேட்டு முடிவெடுக்கிற நிலை தாண்டிட்டுது.

எனக்கு வேற வழி தெரியேல்ல. என்ர குஞ்சு தானே, சிரிச்ச முகத்தோட ஓமெண்டு என்னை அனுப்பிவிடு. மாமியவைக்கு முன்னால என்னை அழுகைமூட்டிப் போடாத நாளைக்கு மாமி வீட்ட போவம்" கையைப் பிடிச்சுக் கொண்டு தள்ளாடிக் கொண்டு குளக்கட்டைத் தாண்டி மௌனமாக நடந்து வீடு போய் எந்தக் கதையு மில்லாமல் படுத்து எழும்பி உடுப்பு அடுக்கி மாமா வீட்டை போய்த் தயங்கித் தயங்கி உள்ளே சென்று ஒரு இரவு மட்டும் அம்மாவைக் கட்டிப்பிடிச்சுக் கொண்டு நித்திரை கொள்ளாமல் முழிச்சுக் கொண்டே படுத்திருந்து அடுத்தநாள் அம்மா பயணம் போகக் காரில ஏறுற நேரம் 'ஓ' வென்று குமுறி அழுது விழுந்தடிச்சு ஓடி அம்மாவை இழுத்துக் கடைசியில மாமியும் மாமாவும் இறுக்கிப் பிடிச்சுக் கொள்ளக் கார் வேகமாக வெளிக்கிட்டுப் போக எனக்கு எல்லாமே யாதோ போலப் பிடிக்காமல் பயப்பிடுற மாதிரி ஒரு விதமாத் தெரிஞ்சுது. மாமா மாமி பாட்டி சுகந்தி எல்லாருமே அம்மாவுக்குச் சமனா அன்புள்ளவையா இருக்கமாட்டினமா என்ற ஆசையோடு ஒரு கிழமை ஓடிப் போட்டுது.

மெல்ல மெல்லச் சுகந்தியைத் தவிர மற்ற மூன்டு பேருமே என்னை ஒரு யந்திரமாகத் தண்ணி இறைக்க, உடுப்புத் தோய்க்க, பாத்திரம் கழுவ, வீடு முற்றம் கூட்ட, சமைக்க, வயலுக்குச் சாப்பாடு கொண்டு போக ஒரு வேலைக்காரியாகப் பயன்படுத்தத் தொடங்கிட்டினம். பள்ளிக்கூடம் போப் போறன் எண்டு கேட்டதுக்கு அகப்பையால அடிச்சு வேலைக்கார நாய்க்கு ஒரு

படிப்புக் கேட்குது என்று சொல்லிப் போட்டினம். பிறகு சுகந்தி என்னிலை இரக்கப்பட்டுப் படிக்கவிடச் சொல்லிச் சம்மதம் வாங்கித்தந்தவள். என்னைப் பாட்டியின்ர அறை வாசலில் சாக்கில படுக்க வைப்பினம். எனக்கு மின்னலுக்குப் பயம் எண்டு அழவும் கேக்காம.

"பாட்டி பாவம் வெளியிலை அடிக்கடி எழும்புவா. எங்களால நித்திரை முழிக்க ஏலுமே. மூண்டுதரம் தானே எழும்புவா. வாசலில் படுத்தாத்தான் உடனே எழும்பலாம்" எண்டு சொல்லிப் போட்டுத் தங்கடை அறையைப் பூட்டிக் கொண்டு போடுவினம். ஒரு நாள் குளிருது என்டு கேட்டதுக்கு சுகந்தி ரகசியமாப் போர்வை தர நான் போர்த்திக் கொண்டு படுக்க நடுச்சாமம் வந்து,

"வெளிநாட்டுப் போர்வை; சனியன் நனைச்சுப் போடும்" எண்டு சொல்லி உருவிக்கொண்டு போட்டினம். நான் ஒரு நாளும் அப்படி நனைக்கிறேல்லை. ஆனா அண்டைக்கு அம்மா அடிக்கடி கனவிலை வந்து என்னோட கதைச்ச அண்டையில இருந்து நான்... நான்... படுக்கையிலை எனக்குத் தெரியாமலே ஈரமாக்கிப் போடுவன். ஒவ்வொரு நாளும் மாமாவையும் கூப்பிட்டுக் காட்டி அடி அடியெண்டு மாமி அடிப்பா.

ஒரு நாள் சுகந்தி ரகசியமாக கிணத்தடியில வைச்சு பெரியமாமா எனக்கு ஐம்பதாயிரம் அனுப்பியிருக்கிறார் எண்டும் அதை மாமியும் மாமாவும் நகை வாங்கப் போகினம் எண்டும் சொல்லிப் போட்டு ஓடிப் போட்டுது. பின்னை நான் பள்ளிக்கூடச் சட்டை கிழிஞ்சு போச்சுது

புதுச்சட்டை வாங்கித் தரச் சொல்லிக் கேட்டன். அதுக்கு "உன்ர வடிவில உனக்கொரு புதுச் சட்டையோ?" எண்டு மாமி அடிச்சுப் போட்டா. நான் வெள்ளை என்டு அடிக்கடி பேசுவா.

"சுகந்தியப்பார் கறுப்பெண்டால்தான் வீட்டுக்குச் செழிப்பு. நீ அவிச்ச றால் மாதிரிப் பிறந்தது தானே. கொப்பரையும் விழுங்கிக் கொம்மாவையும் நாட்டை விட்டே துரத்திப் போட்டாய் தரித்திரம்"

அடிக்கடி இப்பிடிப் பேசிக் கொண்டே இருந்தவை போன கிழமையிலிருந்து பள்ளிக்குடத்தாலை நிப்பாட்டிப் போட்டினம். பாட்டி படுக்கையில கிடக்கிறா. அவவுக்குப் பாரிசவாதமாம். படுக்கையிலேயே எல்லாம் செய்வா. கிருமி எண்டு சுகந்தியை அவவின்ர அறைக்குள்ள விடுறதில்லை. ஆனா அவவின்ர சீலை விரிப்பு எல்லா அசிங்கத்தையும் என்னை எடுத்துத் தோய்க்கச் சொன்னவை. நான் "சத்தி வருகுது, என்னை விடுங்கோ" எண்டு கெஞ்ச, இழுத்துக் கொண்டு போய் அடுப்பில எரிஞ்சு கொண்டிருந்த விறகுக் கொள்ளியை எடுத்து... நான்... குழறக் குழற இஞ்சை... இதிலை சூடு போட்டவா. என்னை... என்னை... அறைக் குள்ள வைச்சுப் பூட்டி ஒரு முழு நாளாச் சாப்பாடும் தரேல்ல."

வானம் கறுத்து இடிஇடித்து மின்னல் மின்னிப் புயலடித்து மழை மொழிந்து ஓய்ந்தது போல நான் உறைந்து போய் விடுகிறேன். எனது குரல் வளை வரை ஒரு இரும்புப் பந்து உருண்டு வந்து என்னை இறுக்கி

நெரிப்பது போலவொரு பயங்கர உணர்வு.... இது என்ன நிஜமா... கனவா இருக்கக் கூடாதா? இல்லையே... இதோ சாட்சியாக நிழலின் நிஜம் என் முன்னே தொலை தூரத்தைப் பார்த்து வெறித்துக் கொண்டு சமைந்து போயிருக்கிறதே....

"சுகந்தி பாவம், அதுக்கு என்னிலை பாசம். அது ஒரு பேப்பரில லக்ஸ்பிறே மாவும் சீனியும் கலந்து ரகசியமா ஜன்னலுக்குள்ளால தந்தது. பச்சைத் தண்ணியும் தந்தது. அம்மாவின்ர 'போன் நம்பர்' எழுதின துண்டையும் ரகசியமாக எடுத்துத் தந்து எங்கையாவது ஓடிப் போய்த் தப்பச் சொன்னது. சுகந்தி பாவம் பபாப் படம் போட்ட வெள்ளை வாகனத்தை மறிச்சா அவை உதவி செய்வினம் எண்டும் சொன்னது... ஆனா எனக்கு அது பயமாகக் கிடந்தது. அது தான் உங்கட வீட்ட வந்தனான். எப்படியாவது அம்மாவோடை நான் கதைக்க வேணும்."

ஓ... அரக்கத்தனத்தின் குகைக்குள் இருந்து துணிகரமாகத் தப்பிப் பிழைத்து உயிர் சுமந்து வந்து விட்ட அந்தச் சிறுமியின் விழிகளில் வாழ்வதற்கான உந்தல் தெரிகிறது. வாழ வேண்டும் என்ற தவிப்புத் தெரிகிறது. நிச்சயமாக இந்தப் பூ காயாகிக் கனியாகி இதன் தாய்க்கு நம்பிக்கை நட்சத்திரமாகக் கிடைக்கத்தான் போகிறது. நல்ல வேளை... இறைவன் இரக்கமுள்ளவர்தான். ம்... என் மனதில் ஒரு தெளிவு... நம்பிக்கை... நான் எழுந்து சென்று பிஸ்கட்டும் இதமான சூட்டோடு பாலும் கலந்து எடுத்து வந்து அவளது கரங்களில் கொடுக்கின்றேன். அவள் நம்பிக்கையோடு நிமிர்கிறாள்.

"ம்... சாப்பிடு ராஜி... அம்மாவோடை நாளைக்குக் கதைப்பம்."

மிக வேகமாக அவள் சாப்பிடும் விதத்திலேயே அவளது பசி புரிகிறது. மிக இயல்பாகச் சாப்பிட்டு முடித்து எனது அறையிலேயே அவளது மறு வாழ்விற்கான அடித்தளம் அந்த நள்ளிரவு 12 மணிக்கு மிகவும் இறுக்கமாகப் போடப்படுகிறது. எனது மனம் இலேசாகிறது. இயற்கையன்னையின் இதமான அரவணைப்பில் உலகம் உறங்கிக் கொண்டிருக்கிறது. எனது அந்தராத்மா ஒரு பூவின் புது வாழ்வு பற்றிய கனவுகளிலே மிதந்து கொண்டிருக்கிறது. களங்கமற்ற நிலவாகத் தூங்கும் அந்த அழகை ரசித்தபடியே நானும் எனது விழிகளை மூடிக் கொள்கிறேன். 'ஓ... இந்தக் குழந்தைக்கு வேளை வந்து விட்டது; எனக்கு வேலை கிடைத்து விட்டது.....'

# அப்பா மாறுவாரா?

முற்றத்து வேப்பமரத்திலிருந்து குயிலொன்று பூபாளம் பாடிக் கொண்டிருந்தது. அதற்குப் பக்க வாத்தியம் வாசிப்பது போல் ஏனைய பறவைகள் இராகமிசைத்தன. விழிப்பு வந்ததும் எழும்ப மனமின்றிப் போர்வையால் இழுத்து மூடிக்கொண்டு பொய்யுறக்கத்தில் இருந்தான் மதன்.

"தம்பி நேரத்திற்கு எழும்பி வெளிக்கிடன் ராசா பள்ளிக்கெல்லோ நேரம் போயிரும்'' அம்மா சொன்னது அவன் காதில் விழுந்தும் அசையாது படுத்திருந்தான். பள்ளிக்கூடம் போவதை நினைக்கவே அவனுக்கு விருப்பமில்லாமல் இருந்தது.

''என்ர கூட்டாளிப் பெடியள் தங்கட அப்பான்ர சைக்கிளில, மோட்டச் சைக்கிளில வாறாங்கள். நான்

**செல்வி**

மட்டும்...? இது அப்பா என்டு என்னத்துக்கு இருக்குது? சே...." என்று சலித்துக் கொண்டான். மதனுக்குத் தன்னுடைய அப்பாவை நினைக்கவே வெறுப்பும் கோபமும் கலந்ததொரு உணர்வு வந்தது.

"பாவம் அம்மா தன்ர ஏலாத காலோட எத்தின வீடுகளுக்கு வேலைக்குப் போய் உழைச்சுக் கொண்டு வந்து சமைக்கிறா" எனத் தன் தாயை நினைத்து இரங்கினான்.

"தம்பி இன்னும் எழும்பேல்லயாடா? கெதியா எழும்பி வெளிக்கிடு குஞ்சு. நான் எத்தின வீடுகளுக்கு வேலை செய்யோணும்" எனத் தாய் மீண்டும் குரல் கொடுத்தாள். அந்தத் தாயின் இரக்கமான வேண்டு கோளைப் புறக்கணிக்கமுடியாது மெதுவாக எழுந்தான். அவனது உள்ளத்தைப் போலவே நைந்து போன புற்பாயைச் சுருட்டி ஒரு மூலையில் வைத்தான். வீட்டின் ஒரு மூலையில் சாக்கால் மறைத்துக் குசினி என்று சொல்லப்படும் இடத்திலிருந்த தாயிடம் சென்று அவளைக் கட்டிக் கொண்டே, "அ....ம்....மா..... நான் இன்டைக்கு பள்ளிக்குப் போகேல்ல" என்று சிணுங்கினான். அவன் இவ்வாறு சொன்னது அவனது தாய் கமலத்திற்கு ஆச்சரியத்தை அளிக்கவில்லை. கடந்த ஆறு மாத காலமாக அவன் இதையே தான் சொல்லி வருகிறான். மதன் திரும்பவும்,

"அ....ம்......மா....நான்.....இன்...."

"ஏன் ராசன் அப்பிடிச் சொல்லுற? பிள்ளைக்கு என்னவேன் வேணுமோ? இல்லாட்டி வகுப்பில ரீச்சர் அடிக்கிறாவோ? நான் ரீச்சரிட்ட வந்து கதைக்கட்டோ?" என்ற தாயிடம் அவசரமாக,

"இல்லையம்மா, ரீச்சர் ஒரு நாளும் என்னைப் பேசினது கூட இல்லை. அவ நல்லவா அம்மா" என்று மறுதலித்தான்.

"நான் பிள்ளைக்குப் பின்னேரம் கொழுக்கட்டை அவிச்சுத்தாறன். இப்ப பள்ளிக்குப் போய்ற்று வா அப்பன்" என்றாள் தாய் கமலம்.

கொழுக்கட்டை என்றதும் மதனுக்கு வாயூறியது. ஆனால் அப்படி எத்தனை பின்னேரம் வந்து போயிற்று. ஐந்தாம் தரம் புலமைப் பரிசில் போட்டிக்குரியது. ஆகையால் வாசுகி ரீச்சர் தமிழ்ப் பாடத்தை அட்சர சுத்தியாகக் கற்பித்துக் கொண்டு இருந்தார். "கமலா பாட்டுப் பாடினாள்' இது என்ன காலம்? என்று ரீச்சர் பிள்ளைகளைப் பார்த்துக் கேட்டார். கமலா என்றதும் மதனுக்குத் தன் தாயின் நினைவு வந்து விட்டது. ஒரு விதமான பரபரப்பிற்கு உள்ளானான். ரீச்சர் கேட்ட கேள்வி அவனது மூளையில் பதியவில்லை. இதனை அவதானித்த ரீச்சர், "மதன் என்ன காலம் என்று கேட்டனான். நீர் என்ன ஒன்றும் சொல்லாமல் இருக்கிறீர்?" என்று கேட்டதற்கு "நல்ல காலம் அன்டைக்கு அப்பிடி நடக்கேல்ல நடந்திருந்தா...." என்று சொல்லியவன் ஆசிரியரும் பிள்ளைகளும் தன்னையே ஒரு மாதிரிப் பார்ப்பதை அவதானித்து தான் ஏதோ கூறிவிட்டதை உணர்ந்து வெட்கித் தலை குனிந்தான். அவன் உதடுகள் மன்னிப்புக் கேட்பது போல் துடித்தன. பாடவேளை முடிந்து விட்டதற்கான மணி ஒலித்தது. உடன் மதனுக்கு இருப்புக் கொள்ளவில்லை வயிற்றை வலித்தது, நெஞ்சுக்குள் ஏதோ செய்தது, தலையிடித்தது. தனது புத்தகப் பையைத் தூக்கிக் கொண்டு "ரீச்சர்

எனக்கு வயித்துக்க குத்துது. நான் வீட்ட போறன்" என்று கூறியவன் ஆசிரியரின் பதிலை எதிர்பாராமலே சிட்டாகப் பறந்தான் வீட்டிற்கு. மூச்சு வாங்க ஓடி வந்து சங்கடப் படலையைத் தள்ளிக் கொண்டு முற்றத்திற்கு ஓடி வந்தவனை வரவேற்று அவன் காலடியில் விழுந்தது சோற்றுப் பானை. எறிந்த வேகத்தில் மண்பானை சுக்கல் சுக்கலாகச் சிதறியது. சிதறுண்ட சோற்றுப் பருக்கைகளை உண்பதற்குக் கோழிகள் ஓடி வந்தன. வழமை போலவே அப்பா என்டது கத்திக் கொண்டிருந்தது. அம்மா கண்ணீர் அபிஷேகம் செய்து கொண்டிருந்தா. தாயாரின் கண்ணீர்க் கோலத்தைக் கண்டதும் அந்தப் பிஞ்சின் பஞ்சுமனம் சொல்லொணாத வேதனையில் துடித்தது. தாயைக் கொடுமைப்படுத்தும் தகப்பனைத் தான் ஒன்றும் செய்ய முடியாத கையாலாகாத் தனத்தை எண்ணி மனத்திற்குள் மருகினான் மதன். ஊழிக்காற்றின் கோரத் தாண்டவம் முடிவடைந்தது போலிருந்தது வீட்டின் கோலம். நடந்த களேபரத்தில் மதன் இன்னமும் சாப்பிடவில்லை என அறிந்த தாயுள்ளம் பதறித்துடித்தது. "அட கடவுளே, இந்தப் பாலனுக்காவது கொஞ்சச் சோறு இல்லாமப் போச்சே வளருகிற வயசில வயித்துக்கில்லாமல் வாடி நிக்கிறானே. என்ன பாவம் செய்து என்ர வயித்தில வந்து பிறந்தானோ?" என்று தனது வயிற்றில் அறைந்தவாறே புலம்பினாள். குசினிக்குள்ளிருந்த தட்டுமுட்டுச் சாமான்களை எல்லாம் ஆராய்ந்து பார்த்தாள் - ஏதாவது உணவுப் பொருட்கள் இருக்கிறதா என்று. ஒரு ஓலைப் பெட்டிக்குள் கொஞ்சம் புழுக்கொடியல் இருந்தது. அதனைக் கண்ட கமலம் பரபரவென்று அதனை இடித்து மாவாக்கி தேங்காய்ப்பூவும் சீனியும் சேர்த்துப் பிசைந்து மதனுக்கு உண்ணக் கொடுத்தாள். பசி மிகுதியாக

இருந்தாலும் தாயையும் உண்ணுமாறு வற்புறுத்தினான். வேலை செய்த வீடொன்றில் தான் உண்டு விட்டதாகப் பொய் சொன்னாள் கமலம். தாய் கூறியதை உண்மையென்று எண்ணிய மதன் விரைவாக உண்ணத் தொடங்கினான்.

கமலம் மகன் உண்பதையே பாசத்தோடும் கனிவோடும் பார்த்துக் கொண்டிருந்தாள். அப்பொழுது அங்கு மதனின் பாடசாலையில் படிக்கும் உயர்வகுப்பு மாணவனொருவன் வந்து கமலத்திடம், மதனின் வகுப்பாசிரியர் தந்ததாகக் கூறிய கடிதம் ஒன்றைக் கொடுத்து விட்டுச் சென்றான்.

அக்கடிதத்தை வாசித்த தாயார், "ஏன் ராசா, என்னப் பள்ளிக் கூடத்திற்கு வரச்சொல்லி எழுதியிருக்கிறா ரீச்சர்?" என்று கேட்டதற்கு, "தெரியாதம்மா" என்று பதிலிறுத்து விட்டான் மதன். ஆனாலும் மனத்தில் குறுகுறுப்பு. அடுத்த நாள் பாடசாலை வந்த மதனின் தாயார் கமலத்தை வரவேற்றுக் கூட்டிக் சென்று தங்கள் ஓய்வெடுக்கும் அறைக்குள் அமரச் செய்தார் வாசுகி ரீச்சர். "என்ன வரச் சொல்லிக் கடிதம் அனுப்பியிருந்தீங்க அதுதான் வந்தனான்"

"ஓம் அம்மா, மதனைப் பற்றிக் கதைக்கத் தான் வரச்சொன்னனான்." கமலத்தின் இதயம் பதறித்துடித்தது. விநாடி நேரத்திற்குள் ஆயிரம் எண்ணங்கள் சுழன்றோடின.

பதைபதைப்பு மாறாத குரலிலேயே, "மதன் ஏதும் குழப்படி செய்தவரோ? படிக்கிறார் இல்லையோ? என்ன செய்தவர் ரீச்சர்?" மூச்சு விடாது கேள்விகளைக்

கேட்டுவிட்டு, ரீச்சர் என்ன பதில் கூறப் போகின்றாவோ என்ற துடிப்புடன் ரீச்சரின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள் கமலம்.

"இல்லையம்மா, நீங்க பயப்பிடுற மாதிரி ஒண்டு மில்ல. அவற்ற நடவடிக்கை கொஞ்சம் வித்தியாசமாய் இருக்கு. அதுதான் அதப்பற்றி உங்களோட கதைப்பம் என்று கூப்பிட்டனான்"

"என்ன வித்தியாசம் ரீச்சர்"

"ஒவ்வொரு நாளும் பன்னிரெண்டு மணி ஆகின உடன வயித்துக்க குத்துது என்று அழுது கொண்டு வீட்டுக்கு ஓடிப் போயிருவார். வகுப்பில இருக்கேக் குள்ளயும் பாடத்தில கவனமில்லை. கேள்வி கேட்டாலும் சம்பந்தமில்லாத பதில் சொல்லுவார். அவர அவதானிச்சுப் பார்த்ததில அவரில பிரச்சனையும் இல்ல. அது தான் வீட்டில ஏதும் பிரச்சனை இருக்கோ என்று அறியத்தான் உங்களக் கூப்பிட்டனான்"

"கமலத்தை வரவழைத்ததற் கான காரணத்தை ஆசிரியர் கூறிமுடித்து, கமலம் கூறப்போவதைக் கேட்பதற்குத் தயாராயிருந்தார்.

"வீட்டில் இவனுக்கு ஒரு பிரச்சனையும் இல்லை ரீச்சர். மதன் ஒரு பிள்ளை என்றதால அவனுக்கு விருப்பமானதெல்லாம் வாங்கிக் குடுத்திரவன். வீட்டில கஸ்டம் என்றாலும் அவன வடிவா வைச்சிருக்கிறன்."

"மதனின்ர அப்பாவைப் பற்றிச் சொல்லேல்ல"

"அவர் விடியப்பிறம் எழும்பிப் போனா என்டா மத்தியானம் சோத்துக்குத்தான் வருவார்"

"அப்ப அவர் ஒரு பிரச்சனையும் தாறதில்லையோ?"

"அவர் குடிச்சிற்று வந்து என்னோட சண்டை பிடிக்கிறவர்தான். என்டாலும் இவனோட ஒரு சோலிக்கும் போகார்"

"இது பற்றி நாங்கள் ஒருக்கா மதனோடயும் கதைச்சுப் பார்ப்பம் என்னம்மா?"

"இதில இரும் மதன்"

"......................"

"சாப்பிட்டாச்சோ?"

"ஓம்"

"இன்றைக்குப் பிள்ளைக்கு எப்பிடி இருக்கு?"

"............"

"உம்மட கஸ்டம் எனக்கு விளங்குது. அதப்பற்றிக் கொஞ்சம் சொன்னீரென்றா நான் உமக்கு ஆதரவா உதவி செய்வன்" கைகளைப் பிசைந்து கொண்டு ஒரு விதமான பரபரப்புடனிருந்தான் மதன். நெற்றியில் முத்துமுத்தாக வியர்த்திருந்தது. இருப்புக் கொள்ளாமல் கதிரையின் நுனியில் உட்கார்ந்திருந்தான்.

"உமக்குக் கதைக்கக் கஸ்டமாய் இருக்குப் போல, நீர் எதுவென்றாலும் பயப்பிடாம என்னட்டச் சொல்லலாம். நான் உமக்கு உதவி செய்வன்."

இப்பொழுது மதனின் முகத்தில் சிறிது தெம்பு தெரிந்தது.

"என்னென்டா ரீச்சர், எனக்கு மத்தியானம் வீட்ட போகவேணும் போல வந்திரும். அதுதான் தமிழ்ப்பாடம்

முடிஞ்சோடன வயித்துக்க குத்துது எண்டிட்டு வீட்ட ஓடீருவன்"

வழமையாக தமிழ்ப்பாடம் 12 மணிக்கு முடிவடையும்.

"உம்மட நிலை எனக்கு விளங்குது. உம்மட அப்பாவைப் பற்றி ஒன்றும் சொல்லேல்ல" மதனின் தந்தையைப் பற்றிக் கேட்டதும் அவனது கை முஷ்டிகள் இறுகின. முகத்தில் அசூயையும் வெறுப்பும் கலந்தவொரு உணர்வு வெளிப்பட்டது. அந்த உணர்வு குரலிலும் தொனிக்க,

"அது ஒரு விசர். நெடுகிலும் குடிச்சுப் போட்டு வந்து அம்மாக்கு அடிக்கும். அம்மா பாவம் வீட்டுக்குள்ளேயே சுத்திச்சுத்தி ஓடுவா. அடிக்காதேங்கோ அடிக்காதேங்கோ என்று கெஞ்சுவா. என்டாலும் அது அம்பிட்டதால தூக்கி யெறியும். இப்பிடித்தான் ஒரு நாள் இறைச்சி வெட்டிற கத்தியால அம்மாக்கு எறிய அது அம்மான்ர காலில வெட்டி இரத்தம் ஓடினது. ஆசுப்பத்திரியில கனநாள் இருந்தவா. அதுக்குப் பிறகு இப்பவும் வடிவா நடக்க மாட்டா. நொண்டி நொண்டித்தான் நடப்பா. இன்னொரு நாள்..."

விக்கி விக்கி அழுதான் மதன். ஆசிரியர் பொறுமை யுடன் மதன் அழுது முடியுமட்டும் காத்திருந்தார். அழுகை சிறிது குறைந்ததும் கேவலமான குரலில்,

"அதின்ர ஆக்கின தாங்கேலாம ஒரு நாள்... ஒரு நாள் அம்மா அலரிக்காய் அரைச்சுச் சாப்பிட்டிட்டா. அந்த உடன நான் கண்டதால கத்திக் குழறினனான். ஆக்கள்

எல்லாம் ஓடியந்து அம்மாவை ஆசுப்பத்திரிக்குக் கொண்டு போனவை. அண்டைக்கு நான் காணேல்ல என்றா அம்மா... அம்மா செத்துப் போயிருப்பா"

மீண்டும் தேம்பித் தேம்பி அழுதான் மதன். அவனின் முதுகில் ஆதரவாகத் தடவிக் கொடுத்தார் ஆசிரியர். அழுகை குறைந்ததும்,

"அம்மா செத்துப் போயிருவாவோ எண்ட பயத்தில தான் நீர் வயித்துக்க குத்துது என்டு சொல்லீற்றுப் போறீர் என்று விளங்குது. அதோட உமக்கு வகுப்பிலயும் பாடங்களில கவனம் செலுத்த முடியாமக்கிடக்கு. அப்பா அம்மாக்குக் கரைச்சல் தாறதால அம்மா செத்துப் போயிருவாவோ என்று பயப்பிடுறதால மத்தியானம் என்றோடன வீட்ட போயிருவீர். எனக்கு உம்மட பிரச்சினை விளங்குது. நாங்க இது பற்றி அப்பாவோடயும் கதைச்சு அவற்ற பிரச்சினையைப் பற்றிக் கேப்பம். நீர் ஒன்றுக்கும் பயப்பிடாம அம்மாவோட வீட்ட போம்" என்று ஆசிரியர் கூறினார். அப்பாவுடன் கதைப்பம் என்று ஆசிரியர் கூறியதும் மதனின் கண்களில் சட்டெனப் பிரகாசம் தோன்றியது. அந்தப் பிரகாசம் மாறாமலேயே, "ரீச்சர், அப்பா நல்லவரா மாறீடுவாரோ? அம்மாக்கு இனி அடிக்கமாட்டாரோ? நாங்க இனிச் சந்தோசமாக இருப்பமா?" என்று குரலில் ஆவல் தொனிக்க அடுக்கடுக்காகக் கேள்வி தொடுத்தான். அதற்கு ஆசிரியர் புன்னகைத்தவாறே.

"ஓம் மதன், முதலில அப்பாவோட கதைப்பம். சிலவேளை அவர் தன்னைப்பற்றி உணர்ந்து நல்லவரா மாறக்கூடும். நீங்க எல்லாரும் மகிழ்ச்சியா இருக்கலாம்.

நாங்க பிறகு அப்பாவோட கதைக்கேக்க சந்திப்பம்" என்று கூறி விடை கொடுத்தார்.

அந்தப் பிஞ்சு உள்ளத்தில் நம்பிக்கைத் துளிர் விட்டது. மகிழ்வாகத் தாயின் கரத்தைப் பற்றியவாறே துள்ளித் துள்ளி நடந்தான். மதனின் தாய் கமலத்திற்கு பெரிய ஆச்சரியமாகவிருந்தது.

"இந்த சின்னன்ர மனசில இவ்வளவு பெரிய பயம், கவலை, எதிர்பார்ப்பு எல்லாம் இருந்திருக்கே. இது ஒன்றும் எனக்குத் தெரியேல்லயே. நான் ஒரு மடைச்சி. பிள்ளைக்கு இவ்வளவு பிரச்சனை இருக்கு என்று தெரியாமல் நல்ல சாப்பாடும் உடுப்பும் குடுத்தாக் காணுமென்டு நினைச்சிற்றன். அந்த ரீச்சர் என்னைவிட சின்னப் பிள்ளையா இருந்தாலும் கெட்டிக்காரி. இவனுக்கு என்னவோ பிரச்சினை இருக்கெண்டு கண்டு பிடிச்சிருக்குதே" என்று தன்னை நொந்து கொண்டும் மகனைப் பற்றியும் ஆசிரியரைப் பற்றியும் சிலாகித்துக் கொண்டும் வீடு நோக்கிச் சென்றாள்.

# உலகங்கள் மாறும்

மூன்றாவதாகப் “பெடியன் பிறந்த போது அந்தக் குடும்பத்தில் சந்தோஷத்தைக் காணவில்லை. அதிர்ச்சி அடைந்தார்கள். அதனை அவர்கள் எதிர்பார்க்க வில்லை. அப்பா சுந்தரம், அம்மா பார்வதி, இரண்டு ஆண் சகோதரர்கள், அம்மம்மா, அப்பப்பா, மாமா (பார்வதியின் தம்பி), மாமி எல்லோரும் அவன் பிறப்பை ஏற்றுக் கொள்ள முடியாத தன்மையில் இருந்தார்கள்.

“அட பொடியனே பிறந்திட்டான்.”

“ஏற்கனவே ரண்டு பிறந்து இருக்குதுகள்.”

“உதுகளை எப்படி இந்த இடத்தில வளர்த்தெடுக்கிறது.”

சி.கதிர்காமநாதன்

"நாசமாய் போச்சு ஒரு 'பெடிச்சி' பிறந்திருந்தால் கடைசி நேரத்தில் உனக்கு ஆறுதலாய் இருந்திருக்கும்."

"அந்தக் கடவுளுக்கும் கண்ணில்லை."

குடும்பத்தில் உள்ளவர்கள் தமது மனதில் உள்ளதைக் கொட்டித் தீர்த்தார்கள். அயலில் "நெருக்கு வாரமாகச் சிறு சிறு குடிசைகளில் குடியிருந்தவர்கள் 'அவனை' விட்டு வைக்கவில்லை.

"பாவம் தாய் 'பொடிச்சி' பிறப்பாளென்டுதான் ஆசைப்பட்டுக் கொண்டிருந்தவ"

"புருஷனும் அதைத்தான் விருப்பிக் கொண்டு இருந்தார்"

எத்தனை விதமான ஆசைகள், எண்ணங்கள், அபிப்பிராயங்கள்!

அந்தச் சூழலில் எந்த விஷயமானாலும் உடன் "பறவைக் காய்ச்சல் பரவுவது போல் பரவி விடும். இடம் பெயர்ந்து அகதிகளாக அலைந்தவர்கள் இப்போது இந்த இடத்தில் நிம்மதியாக இருக்கின்றார்கள். நகர்ப்புறத்தில் இருந்து பல மைல் தூரம் தள்ளியிருந்த இடம். வயல்களும், வெட்டாந்தரைகளும், குடியிருப்பை ஊடறுத்துச் செல்லும் பிரதான பாதையும் அதனைக் கடந்து அப்பால் இருக்கும் பற்றைக் காடுகளும்....

இந்தச் சூழல் அவர்களுக்குப் பழக்கமாகி விட்டது. சில நாட்கள் அவனைப் பற்றிப் பேசினார்கள்,

சிந்தித்தார்கள். அந்த 'இளம் பிஞ்சைப்' பற்றி எள்ளளவும் கவலைப் படாமல்.

பாவம் அவனோ இவ்வுலகத்தைப் பற்றித் தெரியாமல் இந்த உலகம் எப்படி ஆனது என்பது அறியாமல், தன்னைப் பற்றி என்ன கதைக்கின்றார்கள் என்பது புரியாமல் தன்னுடைய பிஞ்சு 'வெண்டிக்காய்' கை கால்களை அசைத்து, உதைத்து விளையாடிக் கொண்டு இருந்தான்.

அவனுக்கு 'பேர்' வைக்கத் தீர்மானித்த போது சற்றுக் குழம்பினார்கள். பெண் குழந்தை பிறக்கும் என நினைத்துப் பல பேர்களை நினைவில் எடுத்து வைத்து இருந்தார்கள். ஆசை ஆசையாய் தமக்குள் பெயரைச் சொல்லியும் பார்த்தார்கள்....

என்ன செய்வது? கடைசியில் எதிர்பார்த்தது நடை பெறவில்லை. எனவே அவனுக்குப் 'பேர்' வைப்பதற்கு அதிக நேரம் அவர்கள் எடுத்துக் கொள்ளவில்லை.

"முரளி என்று பேரை வையுங்கோ. ஏன் சும்மா மண்டையைப் போட்டுக் குழப்புறியள்?"

அவ்வளவுதான்

'முரளி 'உடம்பு பிரட்டினான்,' தவழ்ந்தான், கை, கால்களை எம்பி, எம்பி உதைத்தான், கண்கள் மலர பொக்கை வாய் திறந்து சிரித்தான், ஆசையுடன் அப்பா, அம்மா சகோதரர்களைப் பார்த்தான்.

".......ம்மா" என்றான்.

பார்வதியும் பெண்தானே; அவனைத் தூக்கி வைத்துக் கொஞ்சினாள். தாய்ப்பாசத்தை அடக்க முடிய வில்லை. தலையைத் தடவினாள். பஞ்சு போன்ற மயிரைக் கோதி விட்டாள். பாலூட்டினாள்.

அவளின் புதல்வர்கள் இருவரும் வீட்டில் அதிக நேரம் இருந்தார்கள். இடம் பெயர்வுகள் குடும்பச் சூழல் "பள்ளியில்' அவர்கள் படிப்பைத் தொடர முடியாத நிலை.

தந்தை சுந்தரமோ உழைப்பாளி தான், அவரின் உழைப்பில்தான் அவர்கள் குடும்பம் சீவித்துக் கொண் டிருந்தது. வீண் செலவு பெரிதாக இல்லை. இடையில் எப்போதாவது சந்தோஷாக இருக்கிற நேரத்தில் சாராயம் குடிப்பார் அந்நேரம் அவரது வயது போன தந்தையும் அவருக்குத் துணையாகப் போவார். வெற்றிலை போடும் பழக்கமும் இருந்தது. வேறு நண்பர்கள் குறைவு.

அதிகாலை ஐந்து மணிக்கே எழுந்து தனது காலைக் கடமைகளை முடித்துத் தொழிலுக்குக் கிளம்பி விடுவார். என்ன வேலை என்றாலும்... விறகு கொத்துதல், வேலி அடைத்தல், தேங்காய் பிடுங்குதல், தோட்ட வேலை. சளைக்காமல் செய்தார். இருந்தும் குடிப்பழக்கம் தொடர்ந்து இருந்தது. பிரச்சினையும் கொடுத்தது.

சுந்தரம் தொழில் முடிந்து வீடு திரும்பும் போது ஊரும் மெல்ல அடங்கி... தாயார் பார்வதியைத் தவிர மற்றவர்கள் எல்லோரும் உறங்கி இருப்பார்கள்.

அன்றைய தினம் குடும்பத்தில் நடந்த நன்மைகள் தீமைகள் வேறு விஷயங்கள் அவர்களால் கதைக்க முடியாத நிலை. மாலையிலிருந்தே மாய்ந்து, மாய்ந்து ஓடியாடிக் களைத்த உடம்பு, படுக்கையில் சாய்வதே குறியாக இருக்கும், அந் நேரத்தில் ஏதோ ஒன்று கதைக்க முடியாமல், நிறைவு பெறாமல் கடைசியில்...

இயற்கை நியதி. தாம்பத்திய உறவில் போய் முடியும்.

இது இப்போது தேவையா? தேவையில்லையா? குடும்ப நிலை எப்படி உள்ளது? இதன் பாரத்தை என்னால் இப்போது சுமக்கக் கூடியதாக உள்ளதா? மேலும் இதன் 'பாரம்' அதிகரித்தால் என்னால் தாங்க முடியுமா?

எல்லாமே அவர்களுக்கு, தெளிவற்ற குழப்பமான, ஆழ்ந்து சிந்தித்து தீர்மானிக்கும் திறன் அற்றவர்களாக... மருத்துவமனை செல்வது அங்கு கடமை புரியும் மருத்துவத்தாதிகளின் 'அறிவுறுத்தல்கள்' 'குடும்பத் திட்டங்கள்' எல்லாமே அர்த்தமற்றதாகி விட்டன.

கடைசியில்,

முரளிக்கு ஒரு வயது முடிவடையும் தறுவாயில் அவனுக்குத் துணையாக 'அம்மா' வயிற்றில் இன்னொரு குருத்து முளைவிடத் தொடங்கி விட்டது.

வயிறு பாரமாக... மூச்சு விடக் கஸ்டமாக நல்ல தண்ணீர் அள்ளி வருவதற்கு வயல் வெளியில்

அமைந்துள்ள கோயில் கிணத்துக்குச் செல்லவேண்டும். பார்வதியால் குடத்தில் நீர் கொண்டுவர முடியவில்லை. மூத்த புதல்வர்களைக் கூவியழைத்து கட்டாயப்படுத்தி அனுப்பி வைக்க வேண்டும். அவளால் எதுவுமே செய்ய முடியாமல் இருந்தது.

தன் மீது அவளுக்கு வெறுப்பு வந்தது. தசைகளை நினைக்க ஆத்திரம் வந்தது.

"சீ... என்ன கர்மமோ, என்னத்துக்கு "உப்பிடி படைச்சு இருக்கிறானோ தெரியாது"

பார்வதி இப்போது நான்காவது குழந்தையையும் பெற்று விட்டாள். அதுவும் பெடியன் தான். முரளிக்கு இது என்னவென்று தெரியவில்லை. தம்பியைப் பார்த்து அழுவதா சிரிப்பதா என்ற நிலைதான். இவன் இவ்வளவு விரைவாக எங்கிருந்து வந்தான்?'

பார்வதியின் கவனம் பார்வை, சிந்தனை எல்லாம் 'தம்பிப்பயல் மீது திரும்பியது. அடிக்கடி முரளி மீது எரிந்து விழுந்தாள். உதாசீனப் படுத்தினாள்.

தாயின் வெறுப்பைத் 'தம்பி' பிறப்பதற்குச் சில மாதங்களுக்கு முன்பே அனுபவித்தான். அவன் வழமை போல் பால் குடிப்பதற்குத் தவிப்போடு ஆசையாய் தனது உதடுகளைக் குவித்து 'முலைக்காம்பை உறிஞ்ச....

முகம் 'கோணலாகி.... சீ... ஓங்காளித்தான், சத்தி வந்தது. எப்பேர்ப்பட்ட 'கசப்பு' அது.

அவனுக்கு அது மறக்க முடியாத நாள். அவன் ஒடிந்து போனான். பல தடவைகள் அவன் இதே மாதிரியான 'கசப்பான' அனுபவத்தைப் பெற்றான். பால் குடிக்க முடியவில்லை. முலையை உறிஞ்ச அது கசந்தது. இதற்கு முன்னர் இப்படி இருக்கவில்லையே? தம்பி பிறந்தது தான் காரணமா?

மார்போடு இறுக அணைத்து அம்மா பால் தருவாளே. நான் தாகம் தீரும்வரை வயிறு முட்ட முட்டக் குடித்தேனே!

இப்போது... அம்மா ஏன் இப்படிச் செய்கிறாள். இன்னும் பாலின் ருசியை நான் பூரணமாக அனுபவிக்க வில்லை.

அவன் பால் குடிக்கும் எண்ணத்தை மறந்தான். மனதில் அதனால் ஏற்பட்ட 'கசப்பான' உணர்வை அவனால் மறக்க முடியவில்லை.

பார்வதிக்குத்தான் தெரியும் அவள் முலைக் காம்பில் பூசிய 'கசப்பான மருந்தினை' பற்றி.

காலம் ஒரே இடத்தில் நிலையாக நிற்பதில்லைத் தானே...

முரளிக்கு இப்போது பாலர் பாடசாலை போகும் வயது... அவனால் அங்கு போக முடியவில்லை. வீட்டைச் சுற்றி அவனது பருவம் ஓடியது. பாலர் பருவம் இன்பமான பருவம், சிறப்புக்கள் பல நிறைந்தவை, மற்றப் பிள்ளைகள் போல் அம்மா கூட அழைத்துக் கொண்டு போய் கூட இருந்து பாடம் படித்துப் பாடல் பாடி.....

வண்ணத்துப் பூச்சி
வண்ணத்துப் பூச்சி
பறக்குது பார்
பறக்குது பார்
அழகான செட்டை
அழகான செட்டை
அடிக்குது பார்
அடிக்குது பார்

பாடசாலை முடிய அம்மா இடுப்பில் கால்களால் சுற்றிக் கைகளால் கழுத்தினை வளைத்து... கன்னத்தைக் கொஞ்சி ....

முரளிக்கு எதுவுமே கிடைக்கவில்லை. அம்மாவினதோ, அப்பாவினதோ... ஒன்றும்...

கடைசியில் அவன் தரம் ஒன்றுக்கு அனுப்பி வைக்கப் பட்டான்.

புதிய சூழல், புதிய இடம், ஆசிரியர்கள், மாணவர்கள், அதட்டல்கள், ஆரவாரங்கள்....

அவன் பயந்தான். வகுப்பில் அவனால் இருக்க முடியவில்லை. ஏதோ ஒரு இருண்ட குகைக்குள் இருப்பது போன்ற உணர்வு. வகுப்பில் சக மாணவர்கள் வரவர அவனுக்கு என்னவோ செய்தது. நடுக்கம் ஏற்பட்டது.

போன முதல் நாளே வீட்டுக்கு ஓடி வந்து விட்டான். முதல் நாள் என்ற ரீதியில் வீட்டில் உள்ளவர்கள் அவனைப் பெரிதாக ஒன்றும் சொல்லவில்லை.

அடுத்து மீண்டும் மீண்டும் பாடசாலைக்குப் போவதைத் தவிர்த்தான்.

வீட்டிலோ பெரிய அமளி.

"உவனை என்ன செய்யிறது?"

"தரித்திரம் பிடிச்சவன் திரும்பி வந்திட்டான்."

அவர்கள் அனைவரும் வாய்க்கு வந்தபடி கொட்டித் தீர்த்தார்கள். அதனாலும் அவர்கள் திருப்தி அடைய வில்லை. நீண்ட 'தடி' எடுத்து அவனை அடித்தார்கள். கை, கால், முதுகு என அடிகள் விழுந்தது.

"குரங்கு இனிமேல் திரும்பி வந்தியென்டால் மரத்தில் கட்டி வைச்சு தோலை உரிச்சுப் போட்டு விட்டிட்டுவன், மூத்ததுகள் ரண்டும் ஊர் சுத்துதுகள் உவனையாவது படிக்க வைக்க வேணும்.

முரளி பெரும் குரலெடுத்துக் கத்தினான். உடல் விண் விண் என வலித்தது.

ஏன் அடிக்கின்றார்கள்?

'எனக்குப் பள்ளிக்குப் போகப் பயமாய்க் கிடக்கு. அங்க ஆக்களைக் காண என்னவோ செய்யுது. எனக்குப் பக்கத்தில துணைக்கு யாரேனும் வந்து நிக்கவேணும் போல இருக்கு. என்னர அம்மா என்னோட வரமாட்டியளே? அப்பாவும் வரமாட்டியளே?

அவன் பள்ளி போவதும் போகாமல் இருப்பதும் போய் இடையில் திரும்பி வருவதும்....

எல்லாமே அன்றாட வாடிக்கையாகி விட்டன. பள்ளியிலும் அவனது வகுப்பு ஆசிரியர் கண்டபடி 'திட்டித் தீர்த்தார்.'

"என்ன நீ படிக்கப் போறியோ? மாடு மேய்க்கப் போறியோ?

இங்க வாறதுக்கு ஏன் பயமெண்டு சொன்னனீ..... இஞ்சை இருக்கிற நாங்களென்ன பூதமோ, பிசாசோ?"

அவனின் வகுப்பு தரம் உயர்ந்து கொண்டு போனது. அவனைச் சுற்றி உள்ளவர்களின் செய்கை..... இவர்கள் தன்னை ஏன் இப்படி நடத்துகின்றார்களோ என வெதும்பினான்.

அம்மா, அப்பா.... இருவரும் ஏன் இப்படி? அப்பாவை நினைத்தால்... எப்போது என்னோடு அன்பாகக் கதைத்துள்ளார்? நான் விளையாடுவதற்கு, விளையாட்டுச் சாமான்கள். வாங்கித் தந்திருக்கிறாரா?

வீட்டில் நிற்கும் நேரத்தில் என்ன செய்கிறார்? என்னை வேலை 'வாங்கிக் கொண்டு' இருக்கிறார். எப்போதும் அவர் கையில் கத்தி இருக்கும்... சும்மா இல்லாமல் எதையாவது வெட்டிக் கொண்டு... சீவிக் கொண்டு.....

என்னைப் பார்த்து எப்போதும் கத்தியைக் கொண்டு வாடா; கத்தியைக் கொண்டு போடா என்று கத்திக் கொண்டு இருப்பார்.

எனக்குக் கத்தி எடுத்துக் கொடுப்பதே பெரிய வேலையாய் இருக்கும்... சே....

முரளி தரம் ஐந்திற்கு வந்து விட்டான். இப்போது அவன் பள்ளிக்குப் போகாமைக்குப் புதுக் காரணங்களைச் சொன்னான்.

"நான் இன்டைக்குப் பள்ளிக்கூடம் போகலை. வயித்துக்குள்ள நோகுது."

"நெஞ்சுக்குள்ள ஏதோ செய்யுது?"

"தலைக்குள்ள இடிக்குது"

"ஐயோ கடவுளே, நான் என்ன செய்ய? உவன் ஒன்டும் கேக்கிறானில்லை, தமையன் மாரோட சண்டை பிடிக்கிறான், காசைக்களவெடுத்து போளை வாங்கிறான், வகுப்பில பெடியளோட அடி படுகிறான். உந்தாள் போனால் வேலை, வந்தால் படுக்கை குடியும் கூடிக் கொண்டு போகுது...நான் இப்படிக் கத்திக் கத்திச் சாக வேண்டியது தான்"

பார்வதி அழுது புலம்பினாள். சுந்தரத்தின் குடிப் பழக்கம் வீட்டில் பெரிய பிரச்சினையைக் கொடுத்தது. வீட்டில் உருப்படியாக இருந்த சாமான்கள் உடைபடும் அளவிற்குப்போய் மூத்த பிள்ளைகள் பொறுக்க முடியாமல் தகப்பனுக்கு எச்சரிக்கை விடுத்தனர்.

"அப்பா, இனிமேல் குடிச்சிப் போட்டு வீட்டுக்கு வந்தியளென்டால்... நாங்கள் ரண்டுபேரும் வீட்டை விட்டு... பிறகு கண்ணில் காண மாட்டியள்."

சுந்தரம் அதோடு அடங்கிப் போனார்.

முரளி உடலில், மனதில் பல மாற்றங்கள். மனதில் இனிமேலும் அடக்கி வைக்க முடியாத நிலை. ஏதாவது செய்தாக வேண்டுமென்ற வெறி.

வீட்டில் உள்ளவர்களுடன் பேச அவனால் முடிய வில்லை. பிரயோசனமில்லை. அன்பு, ஆதரவு தருபவர்கள் எவருமில்லையென உணர்ந்தான்.

அவன் அடிக்கடி நண்பர்களை மாற்றிக் கொண்டான். நிலையாக யாரையும் வைத்துக் கொள்ள அவனால் முடியவில்லை. காலையில் நித்திரை விட்டு எழும்புவதில் சுணக்கம். சாப்பாட்டைத் தட்டில் போட்டுக் கொடுத்தால் நின்றபடிதான் சாப்பாடு... இருக்க மாட்டான். பள்ளிவிட்டு வீடுவந்தால், உடுப்பில்லை. திட்டுத் திட்டாக ஊற்றப்பட்டு அழுக்காக இருக்கும்.

அவசரமாக உடுப்புக்களைக் 'கழட்டித் தூர எறிவான். அவை ஒவ்வொரு திக்காய்ப் போய் விழும். புத்தகங்களும் அதே நிலையில் போய் விழும்.

பேச்சுவாக்கில் இடையில் சாப்பிடும் பீங்கான் கோப்பையை எறிந்து உடைப்பான்.

குழம்புக்கறி வைத்தால் சாப்பிடாமல் அப்படியே வழித்து நாய்க்குப் போடுவான், வெள்ளைக் கறியாக என்ன வைத்தாலும் நன்றாகச் சாப்பிடுவான்.

காலப்போக்கில் அவனுக்கு வீட்டில் இருக்கப் பிடிக்கவில்லை, அதிக நேரம் வீட்டில் இருப்பதைத் தவிர்க்க நினைத்தான்.

அடுத்து அவன் வெளி உலகத்தைப் பார்த்தான். அவனது கிராமத்தில் சுற்றியிருந்த காட்டை, மரம், செடி, கொடிகளை, பறவைகளை, மிருகங்களைக் கண்டான்.

அவனுக்கு மனதில் உற்சாகம் கரைபுரண்டு ஓடியது. தொலைக்காட்சி பார்த்தான். வெளி உலகோடு இணைந்தான்.

தொலைக்காட்சியில் சினிமாப் படங்களை விரும்பிப் பார்த்தான். குறிப்பாகச் சண்டைப் படங்களை பொழுது பட்டாலும் தொடர்ந்து பார்த்தான், சண்டை வரும்போது, எழும்பித்துள்ளுவான், கூப்பாடு போடுவான். கைகளைச் சேர்த்துத் தட்டுவான்.

“டேய், நான் உப்பிடித்தான், உந்தச் சண்டையில வாற மாதிரித்தான் நான் அப்பாவைக் கொல்லுவன்... கத்தியால வெட்டிக் கொல்லுவன்”

சத்தம் போட்டுச் சொன்னான். கூட இருந்த நண்பர்கள் மிரண்டபடி அவனைப் பார்த்தார்கள்.

ஏதோ ஒன்றை மனது விரும்பியது, தங்கு தடையின்றி யாரும் உருட்டாமல் அதட்டாமல் தன் மனதளவில் சந்தோஷமாக இருக்க விரும்பினான்.

மறுபடி, மறுபடி காட்டுக்குள் ஓடினான். காலைக் கடனுக்கும் காட்டுக்கு ஓடினான். குடிசையில் பின் அமைக்கப்பட்டிருந்த கக்கூசை அவன் பாவிக்க வில்லை... காட்டுக்குள் அவனோடு சேர்ந்து சில நண்பர்கள் போனார்கள். பற்றைக் காடுகளைச் சுற்றினான். குளத்தில்

விழுந்து குளித்தான். தும்பியைத் துரத்திப் பிடித்தான். கவன் எடுத்துப் பறவைகளை வேட்டையாடினான். கொக்கு, குருவி, மைனா எல்லாம் அவன் குறியில் தப்பவில்லை. செத்த பறவைகளைப் பிய்த்துப் பிய்த்துப் போட்டான். பூ, பிஞ்சுகளை உருவி எறிந்தான். அவன் மனம் ஏதோ வகையில் சாந்தமும் அமைதியும் அடைந்தது. வீடு வருவதற்கு நேரமோ இரவு எட்டு மணியாகியது. எல்லோரும் அவனை நிறுத்தி வைத்துக் கேள்வி கேட்டார்கள்.

அவன் காதில் ஒன்றும் ஏறவில்லை. விறைப்பாக இருந்தான்.

தந்தை சுந்தரத்திற்கு ஆத்திரம், சினம் தலைக் கேறியது. தடியொன்றை எடுத்து அடிக்க வெளிக்கிட அவன் ஓட மற்றவர்கள் துரத்த, கடைசியில் அவனை எட்டிப் பிடித்து இழுத்துக் கொண்டு வந்து மரத்தில் கட்டி வைத்து அடி.... பயங்கர அடி. கடைசியில் சூடு போட்டார்கள்.

எல்லோரும் நின்று வேடிக்கைப் பார்த்தார்கள். அம்மம்மா, அப்பப்பா, மாமா, மாமி என யாரும் அதனைத் தடுக்க முன்வரவில்லை.

"டேய், இனி ராவில வெளியில திரிஞ்சியென்டால் உன்னைப் பேய் பிடிச்சுக் கொண்டு போய் விடும்."

"சத்தியமாய் சொல்லுதன் உன்னை பேய் பிடிக்கத் தான் போகுது."

பலமுறை அவனை மிரட்டினார்கள், பய முறுத்தினார்கள்.

பேய் பிடிக்கும்........

மோகினிப் பிசாசு பிடிக்கும்..........

முரளி பயப்பட்டான். இரவில் தனியாக வெளியில் போக அஞ்சினான்.

"நான் தனியப் போனால் பேய் பிடிக்குமாம்."

"மோகினிப் பிசாசு தலையை விரிச்சுப் போட்டு பல்லைக் காட்டிக் கொண்டு வருமாம்."

இரவில் அவனால் நித்திரை கொள்ள முடியவில்லை. பயங்கரமான கனவு கண்டான். கறுத்த உருவமொன்று அவனை அப்படியே முழுப்படியாக....

அவன் அலறிக் கொண்டு எழுந்தான்.

இரவில் வெளியே போகப் பயப்பட்டான். துணைக்கு யாரும் வர முன்வரவில்லை... அவனைச் சீண்டி விட்டார்கள். ஆத்திரம் ஊட்டினார்கள். அவனால் தாங்க முடியவில்லை. தாங்க முடியாத வேதனை, ஆத்திரம்.

ஏதோ ஒன்று செய்தாக வேண்டும். வீட்டில் இருந்த பொருட்களைத் தூக்கி எறிந்தான். போட்டு உடைத்தான். கத்தி ஆர்ப்பாட்டம் போட்டான்.

வீடு யுத்தகளமாகியது.

வீடு நடு இரவில் அமைதியாக இருந்தது.

"உவனை இனி இஞ்சை வைச்சிருக்கிலாது, எங்கேயோ கொண்டு போய் விட்டிட்டிங்கோ, நாளைக்கு வேலைக்குப்

போக வேண்டாம், பள்ளிக் கூடத்துக்குப் போய் அவன்ரை சேர்ட்டிபிக்கேற்றை எடுத்துக் கொண்டு போய் அவனைக் கொஸ்ரலில சேர்த்து விடுங்கோ. உடன செய்துபோடுங்கோ... இல்லாட்டி இனி இஞ்சை என்ன நடக்குமென்று எனக்குத் தெரியாது."

பார்வதி சுந்தரத்தைப் பார்த்துப் பெருங்குரலில் கத்தினாள்.

◆ ◆ ◆

அங்கே கொஸ்ரலில் அவனது அறையில்... முரளி ஆனந்தமான கனவொன்றைக் கண்டபடி தூங்கிக் கொண்டிருந்தான்... தனது கதையினைக் கேட்ட, செவி மடுத்த அன்பான ஆசிரியர் அந்தப் புதிய சூழலும், புதிய மாணவர்களும்... எல்லோரும் தன்னை அவனது பழைய உலகத்திலிருந்து புதிய உலகத்துக்குக் கொண்டு செல்கின்றார்கள் அதில் வன்முறை இல்லை, அன்பு வைத்தலையும் ஏற்றுக் கொள்ளுதலையும் அவன் பிரதான மாகக் கண்டான்....

எனவே அவன் தன்னை மறந்து தூங்குகின்றான்.

# பிரிவு

காலையில் பாடம் தொடங்கிற மணி அடிச்சதும் எங்கட வகுப்பு ரீச்சர் வந்தா. நாங்க எல்லாரும் எழும்பி குட்மோர்னிங் சொல்லிட்டு இருந்திட்டம். வழக்கம் போலத் தமிழ்ப்பாடம், கணிதப் பாடம் எண்டு ரீச்சர் படிப்பிச்சிக் கொண்டு போனா. இடையில் சேர் ஒருவர் வகுப்புக்குள்ள வந்தார். அவருக்கு நாங்க குட்மோர்னிங் சொன்னம். பிறகு ரீச்சர் சேரோட ஏதோ கதைச்சிக் கொண்டிருந்தா. இடைக்கிடை என்னையும் பாத்துப் பாத்து கதைச்சா. சேரும் என்னை ஒரு தடவை பார்த்தார். இவங்க என்னப் பத்தித்தான் ஏதோ கதைக்கிறாங்க எண்டு எனக்கு விளங்கித்து. நான் தலையைக் குனிஞ்சித்து இருந்திட்டன்.

நான் அரைகுறை மனத்தோடதான் பள்ளிக்கு வாறனான். வகுப்புக்க வந்தா எனக்கு ஒரே அப்பாவப் பத்தியும் அம்மாவப் பத்தியும் எண்ணத்தான் வாற. அதால தான் ரீச்சர் படிப்பிக்கிறத என்னால கவனமாக் கேட்டுப்

**புவிராஜா**

படிக்க ஏறுதில்ல. ரீச்சருட்ட அடியும் வாங்கிற நான்தான். அவவும் எனக்கு ஏசி ஏசிக் களைச்சிப் போனாவு. நானுந்தான் என்ன செய்யிறது. என்னால முடியாம இருக்குதே.

நான் வகுப்பில இருக்கிற பிள்ளைகளோடயும் கதைக்கிறல்ல. என்கே ஆக்களோட கதைக்கயே விருப்ப மில்ல. நான் இடைவேள நேரத்திலயும் வெளியில போகாம வகுப்புக்குள்ளதான் இருக்கிற. விளையாடக் கூட விருப்பமில்ல. படிக்கிறது ஏறுறல்ல. எனக்குத் தனிய இருக்கத்தான் விருப்பம். இதுகளத்தான் ரீச்சர் சேருட்ட சொல்லிருப்பா எண்டு நினைக்கிறன். சேர் போகக்குள்ள என்னைப் பாத்து சிரிச்சித்து என்ர தலையத் தடவித்துப் போனவர். எனக்கு அந்த நேரம் அப்பாட எண்ணந்தான் வந்தது.

பிறகு இடைவேளை மணி அடிக்க எல்லாரும் வெளியில போயித்தாங்க. வழக்கம் போல நான் மட்டுந் தான் வகுப்பில தனியா இருந்தனான். சேர் வந்து என்னக் கூப்பிட்டவர். “வாங்க, நாம மேல்மாடிக்கு ஒருக்கா போயிற்று வருவம் எண்டு சொல்லித்து என்ர தலையைத் தடவினவர். அவர் மேல் மாடியில இருக்கிற வகுப்பறை ஒண்டுக்குள்ள கூட்டித்துப் போனவர். அங்க ரெண்டு கதிர இருந்தது. அதில என்ன இருக்கச் சொல்லித்து அவரும் ஒரு கதிரையில் இருந்தார். படிப்பு சம்பந்தமாகக் கேட்டவர். பிறகு சித்திரம் கீற விருப்பமா எண்டு கேட்டவர்; நான் ஓம் எண்டு சொல்ல வெள்ளப் பேப்பரும் கலர் சோக் பெட்டியும் தந்தவர். தந்தித்து நீங்க விரும்பின என்னவாவது ஒண்டக் கீறுங்க எண்டு சொன்னவர். நான்

வீடு ஒண்டக் கீறி கலர் அடிச்சனான். சேர் அதப் பாத்திட்டு வடிவாக் கீறியிருக்கிறீங்க எண்டு சொன்னவர்.

அதுக்குப் பிறகு வீட்டப் பத்திக் கேட்டவர். நானும் அம்மாவுந்தான் எண்டு சொல்ல, அப்பாவப் பத்தி சொல்லுங்க எண்டு கேட்டவர். அந்தநேரம் எனக்கு குளற வந்தது. பிறகு அப்பாவப் பத்திச் சொல்லத் தொடங்கினன்.

எனக்கு எங்கட அப்பாவோடதான் கூட விருப்பம். ஒவ்வொரு நாளும் என்னக் குளிக்கவாத்து துடைச்சி உடுப்புகள போட்டு விடுறது அப்பாதான். என்ர தலைய இழுத்து பவுடர்போட்டு பொட்டும் வைப்பாரு. எனக்குச் சாப்பாடு தீத்திறதும் அப்பாதான். அப்பாக்குக் கிட்டத்தான் எந்தநாளும் படுக்கிற நான்... அப்பா வெளியில எங்கயும் போக வெளிக்கிட்டா நானும் அப்பாட சைக்கிள்ள ஏறியிருந்திருவன். எந்தநேரமும் அப்பாவோட இருக்கத் தான் எனக்கு விருப்பம். பிறகு என்ன நேசறியில சேத்தவங்க. நேசறிக்கு அப்பாதான் கூட்டித்துப் போய் பிறகு கூட்டித்து வருவாரு. நான் என்ன கேட்டாலும் வாங்கித் தருவாரு. அப்பாவுக்கும் என்னோட சரியான விருப்பம்.

இப்பிடி நாங்க சந்தோசமா இருக்கக்குள்ளதான் ஒரு நாள் எங்கட வீட்ட ரெண்டு பேர் வந்தாங்க. அப்பா என்ன எண்டு கேட்க உங்கள விசாரிக்க வேணும் ஒருக்கா கேம்புக்கு வாங்க எண்டு சொன்னாங்க. என்ன விசியம் எண்டு அப்பா கேட்க, அது எங்களுக்குத் தெரியா நீங்க உடனே எங்களோட வரவேணும் எண்டு சொல்லிக்

கூட்டித்து போனவங்க. பிறகு பொழுதுபட்டும் அப்பா வீட்ட வரல்ல.

அடுத்த நாள் அம்மா அப்பாவத் தேடி கேம்புக்கு போனவ. அவங்க அப்பாவ பாக்க விடல்ல. பிறகு நானும் அம்மாவோட போன. இப்பிடி ஒரே ஒரே நானும் அம்மாவும் கேம்புக்கு போனனாங்க. அப்பாவ ஒரு நாளும் காட்டவேயில்ல. அம்மா ஒரே குளறிட்டுத்தான் இருப்பா. நானும் குளறுவன் அப்பா இல்லாம எனக்குச் சாப்பிடவும் விருப்பமில்லை. நித்திரையும் வாறல்ல. ஒரே ஒரே அப்பாட நெனப்புத்தான். இப்படி ஒரு மாசமாப் போயித்து.

ஒரு நாள் மாமா வந்து சொன்னார். அப்பாவ சுட்டுப் போட்டாங்க எண்டு. நானும் அம்மாவும் கத்தினனாங்க பிறகு அப்பாவ வீட்ட கொண்டு வந்தவங்க அப்பாவக் கொண்டு வந்து மண்டபத்துக்குள்ள வைச்சவங்க. இப்பவும் எனக்கு நல்ல நெனப்பா இருக்கு.

அப்பாக்கு நெஞ்சில சுட்டு அப்படியே சேட்டெல்லாம் ஒரே ரெத்தமா இருந்திது. நான் அப்பா அப்பா எண்டு கத்தினனான். நான் உரமாக்கத்த பெரியம்மா என்னத் தூக்கித்து. அங்கால கொண்டு போயித்தாவு. அப்பாவப் பாக்கப் போறன் எண்டு நான் கத்த அவ விடல்ல. 'நீ கத்தாத ராசா, அப்பாக்கு ஒண்டு மில்ல எண்டு சொன்னவ. நான் நெடுக கத்தித்தே இருந்தனான். பிறகு அப்பாவ சவக்காலைக்குக் கொண்டு போக இருக்கக்குள்ளதான் அப்பாவ பாக்க விட்டவங்க. அதுக்குப் பிறகு நான் குளறல்ல. எனக்குக் குளறுவவரல்ல. அப்பாக்குக் காயம். அப்பாவ ஆஸ்பத்திரிக்குக் கொண்டு

போங்க. எண்டுதான் சொல்லிச் சொல்லி இருந்தனான். பிறகு அப்பாவக் கொண்டு போய்த் தாட்டுப் போட்டாங்க அதுக்குப் பிறகு நானும் அம்மாவும் அம்மம்மாவோட இருந்தனாங்க.

அப்பா செத்த பிறகு ஒரே எனக்கு அப்பாட யோசனைதான். நித்திர கொண்டா கனவில அப்பா வருவாரு. என்னத் தூக்கியெல்லாம் கொஞ்சுவாரு. சில வேளையில கனவு கண்டு கத்திறனான். அப்பாவ ஆக்கள் கொல்ற மாதிரியெல்லாம் எனக்குக் கனவு வரும். இரவையில் படுக்கக்குள்ள பாயில மூத்திரம் போயிருவன். விடிஞ்ச பிறகு பாத்தா எல்லாம் நனைஞ்சிருக்கும். அம்மாதான் அதெல்லாம் கழுவிப்போடுவாவு. முந்தி தான் பாயில மூத்திரம் போறல்ல. குழந்தப்புள்ளயா இருக்க குள்ளதான் போனனான் எண்டு அம்மா சொன்னவ.

எனக்கு ஆறு வயதாப் போன பிறகு படிக்கிறதுக் கெண்டு அம்மா என்னப் பெரியம்மா வீட்ட கொண்டு போய் விட்டுத்தாவு. நான் பெரியம்மா வீட்ட இருந்துதான் பள்ளிக்குப் போய் வந்த நான். எனக்கு அம்மாவோட இருக்கத்தான் விருப்பம். நான் நல்லாப் படிச்சி பெரிய ஆளா வரவேணும் எண்டுதான் என்னப் பெரியம்மா வீட்ட அம்மா இருக்க விட்டவ. அவ வாடியில தோட்டம் போட்டுத்து அங்கதான் இருந்தவ. இருந்திட்டு ஒருக்கா என்னப் பாக்க வருவாவு.

பெரியம்மா வீட்டிலயும் பெரியப்பா, பெரியம்மா, அண்ணா, தம்பி, தங்கச்சி எல்லாரும் இருக்காங்க. எனக்கு தம்பியோடதான் விருப்பம். இரவயில பெரியம்மாவங்க எல்லாரும் மண்டபத்துக்குள்ள படுப்பாங்க. நான் மட்டும்

தனியா அறைக்குள்ள படுக்கிறனான். இதெல்லாம் நான் சேருட்ட சொன்னான். சேர் என்ன அடிக்கடி தளர்வுப் பயிற்சி செய்ய வைப்பாரு. மூச்சுப் பயிற்சியும் செய்யிறனான். கிழமைக்கு ஒருக்கா நான் சேரோட கதைக்கிறனான். நான் சொல்றதெல்லாம் கவனமாக் கேட்பாரு.

அண்ணா (பெரியம்மாவின் மகன்) எங்கட பள்ளில தான் படிக்கிறவர். அண்ணாவக் கூப்பிட்டுக் கதைச்சவர். பெரியம்மாவையும் கூப்பிட்டுக் கதைச்சவர். அதுக்குப் பிறகு பெரியம்மா இரவயில படுக்கக்குள்ள என்னையும் கூப்பிடுவாவு. இப்ப நான் பெரியம்மாவங்களோட தான் படுக்கிற. நாங்க எல்லாரும் கதைச்சிக் கதைச்சி படுப்பம். அம்மாவோடயும் கதைக்கவேணும் எண்டு சேர் முந்திச் சொன்னவர். அம்மா வாறன் வாறன் எண்டு சொல்லுவா. பிறகு வரமாட்டாவு. பெரியம்மா சொல்லிப் பிறகு அம்மா வந்து சேரோட கதைச்சவ. என்னோட இருக்கட்டாம் எண்டு சேர் சொன்னவராம் எண்டு அம்மா சொன்னவ. இப்ப அம்மாவும் என்னோட வந்து இருக்கிறா.

அப்பாட போட்டோவ சாமி அறைக்குள்ள வச்சி அவருக்கு ஒவ்வொரு நாளும் பூ வச்சி கும்பிடுறனான். நான் இப்ப வகுப்புப் பிள்ளைகளோட எல்லாம் சேந்து விளையாடுறன். இப்ப நான் நல்லாப் படிக்கிறன் எண்டு ரீச்சர் சேருட்ட சொன்னவ. இப்ப எனக்கு நல்ல சந்தோசம். அம்மாவும் வந்தித்தாவுதானே. இனி நான் நல்லாப் படிச்சி பெரிய ஆளா வருவன்.

# கண்கள் விரியட்டும்

'கழுதை; பிறந்து காசு காசென்று பிராணனை வேண்றதை விட பிறக்காமலே இருந்து தொலைச்சி இருக்கலாம்!'' இரவிலிருந்து இப்பவரை இதயத்தில் இருந்து லப்டப் பிற்குப் பதிலாக இந்த வார்த்தைகள் தான் வந்து கொண்டிருப்பது போல இருந்தது கௌசிக்கு!

ஒரு பெத்த தாய்க்கு இப்படிச் சொல்ல எப்படி மனம் வந்திச்சு? அப்ப, "ஐஞ்சு வருஷமாய் தவமிருந்து தான் உன்னை பெத்தவ உன்ர கொம்மா" என்று பாட்டி சொல்வது ஒரு வேளை பொய்யோ?

எல்லாம் கிடைக்காமத் தூர இருக்கும் போது தான் பெறுமதியானதாய்த் தெரியுது, கிட்ட வந்து கிடைச்சிட்டா தூசிக்கும் அதுக்கும் வித்தியாசம் தெரியிறேல்ல. அப்ப இனியென்டாலும் அடிச்சுச் செத்துப்போன கமலா

**மயூரன்**

ரீச்சருக்கும் அவன்ர மகளுக்கும் இடையில எவ்வளவு தூரம் இருக்கும் என்று எண்ணிக் கொண்டு நடந்தவள் காலில் கல்லடிக்க நினைவுக்கு வந்தாள்.

ம் ம் ம்! கல்லுக்குக் கூட என்னைப் பிடிக்கலியோ?

◆ ◆ ◆

"டேய் கரன் எழம்பு! என்னடா இன்டைக்குச் சீமாட்டி வேளைக்கே போட்டா?" குசினிக்குள் இருந்து கத்திய தாயின் குரல் கேட்காதது போலப் போர்வையால் மூடிக்கொண்டு படுத்த கரனின் காதுகளுக்கு அம்மா புறுபுறுப்பது தெளிவாகவே கேட்டது.

"மோகன் சேரின்ட ஆறுமணி வகுப்பிற்கு அடிச்சு எழுப்பி போடி என்றாலும் ஆடி ஆடி ஆறுதலாப் போறவள் இன்டைக்கு அஞ்சரைக்கே போட்டாள்."

எல்லாம் நேற்றுக் குடுத்த பேச்சுச் செய்த வேலை! கழுதைக்கு அடி போட்டிருக்க வேணும். பிறகு அழுது குழறி ஊரைக் கூட்டி விடும் என்றுபோட்டு விட்டது!

அடிச்சுப் பேசி வளர்த்தாத்தான் பிள்ளையள் அடக்க ஒடுக்கமாய் இருக்குங்கள். அந்தக் காலம் எங்களுக்கு எங்கட ஐயா அம்மா அடிக்கிற அடியென்டா? அதத் தெரியாமா ஏதோ பேப்பருகளில எழுதிக் கிழிக்கிறாங்கள் சிறுவர் உரிமையும் மண்ணங்கட்டியு மெண்டு"

கௌசியின் தாய் கண்ணகிக்குக் கோபம் கோபமாய் வந்தது.

"தனிய ஓராளாய் நான் படுற பாடு கனடாவில இருந்து மாசம் மாசம் காசை அனுப்பி விடுறதோட அவற்ற வேலை சரி, மற்ற வேலை எல்லாம் கவனிச்சு உந்த மாட்டையும் மேக்கிறதெண்டா??

முன்வீட்டு ராசாத்தின்ர பெட்டையிலும் விட குறைய மாக்ஸ் எடுத்து என்ரமானத்த வாங்குது என்டு எல்லாப் பாடத்துக்கும் 'பேர்சனல் கிளாஸ்' போட்டும் உருப்பட்ட மாதிரி தெரியேல்ல, அந்த விசித்திரத்தில பள்ளிக் கூடத்தால 'ரூர்' என்டு போய் கூத்தடிக்கிறதுக்கு காசு தரட்டாம் காசு!"

அம்மா முணுமுணுத்ததைக் கேட்ட வண்ணம் பூனை போலக் கண்களை மூடிக்கொண்டு படுத்திருந்தான் கரன்.

நேற்றுப் பாடசாலையால் வந்து தமக்கை 'ரூர்' பற்றித் தாயிடம் சொல்லிக் காசு கேட்டதும் அதற்குத் தாய் "12 வயதில் என்னடி கண்டறியாத 'ரூர்' உன்ர வயதில நான் ரூர் போயே வளர்ந்தனான்? பள்ளிக்குடத்துக்குப் படிக்கிறதுக்கு மட்டும் தான் உன்ன விடுறன். உந்த விளையாட்டுக் கூத்து எண்டு கண்ட கண்ட பெட்டையளோடா திரியாத எண்டு திருப்பித் திருப்பி சொல்ல உனக்குச் செவியில ஏறுதில்லை என்று சொல்லி அடிக்கிறதுக்கு திரத்த அக்கா வீட்ட சுத்தி ஓடியது ஞாபகமாய் ஓடியது.

தனக்கு 'ரூர்' போக அம்மா காசும் தந்து உடுப்பும் வேண்டித் தருவதாகச் சொல்லிவிட்டு அக்காவை மறித்தது பாவம் போலக் கிடந்தாலும் "நக்கலடித்துப் பழித்துப் பேசி

அக்காக்கு கோபமேற்படுத்தலாம் என்று நினைக்கக் கரனுக்குச் சந்தோசமாகக் கிடந்தது.

♦ ♦ ♦

கால்கள் நடந்து கொண்டிருக்கக் கௌசியின் கண்கள் மட்டும் மறைந்து கொண்டிருந்த நிலவை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தது.

"ஏன் இது மங்கிக் கொண்டே போகிறது? என்னைப் போல இதற்கும் அம்மா அப்பாவின் அன்பு பாசம் கிடைக்கவில்லையோ?"

அப்பா எப்படி இருப்பார்?

தம்பி பிறந்த உடன தனக்கு 3 வயதிலேயே அப்பா வெளிநாடு போய் விட்டார். அதற்குப் பிறகு கொஞ்சக் காலம் கொழும்புக்குப் போய் ரெலிபோன் கதைக்கிறது. அப்பா என்னோடை எல்லாம் கதைப்பார். சந்தோசமா இருக்கிறியா? நேசரி போறியா? என்றெல்லாம் கேட்பார். சந்தோசமா இருக்கும். இப்ப நான் படிக்க மாட்டான், மொக்கு, மோடு என்று சும்மா சொல்லிச் சொல்லி அப்பா என்னைக் கதைக்கச் சொல்லியே கேட்டதில்லை. அம்மாட்ட கஸ்டப்பட்டு காசு வேண்டிக் கொண்டு போய் 'இன்டர்நெட் போனில்' எடுத்தாலும்...

"அம்மாக்கு கரைச்சல் கொடுக்கிறியாம், தம்பியோட போட்டிக்கு நிக்கிறியாம் படிக்கிறதில்லையாம்... என்று பிரச்சனைகளைச் சொல்லிப் போட்டு வைச்சிடுவர்!"

தம்பியோட வேணுமெண்டே போட்டி போடிறன்? தம்பியோட கதைக்கிற மாதிரி, பிடிச்ச சாப்பாடு செய்து கொடுக்கிற மாதிரி, விரும்பியதை வேண்டிக் கொடுக்கிற மாதிரி, எனக்கும் செய்யுங்கோ என்டால் அதப் போட்டி போடிறன் என்று அப்பாக்கு கோள் மூட்டுறது!

நேற்றும் தம்பிக்குக் காசு கேட்க முன்னம் கொடுத்து ரூர் போகச் சாமானுகளும் வேண்டிக் கொடுத்தாச்சு. நான் கேட்டதற்கு "நீ பெட்டை, உன்னால் பின்னுக்கு எவ்வளவு செலவு எங்களுக்கு. இப்ப வீட்டுக்க இருந்து பழகினாத்தான் பிறகு நல்லா வளர்த்திருக்கிறன் என்டு ஊர்ச் சனம் சொல்லும். பேசாம வாயைப் பொத்திக் கொண்டு இரு. இல்லாட்டிக் கொப்பருக்கு தான் ரெலி போன் எடுத்துச் சொல்ல வேண்டி வரும்" என்றா. பள்ளிக் கூடத்தில "எல்லாப்பிள்ளையளும் கட்டாயம் ரூர் வந்திடணும். முக்கியமான பிக்னிக். நிறைய விஷயங்கள் அறியலாம். காசு தரக்கஸ்ரம் எண்டால் வகுப்பாசிரியரிட்டச் சொல்லலாம். பள்ளிக்குடம் கொடுக்கும்" என்றார்கள். நான் போய்க் காசு கஸ்றம் என்று எப்டி சொல்றது? அப்பா கனடா என்று சொல்லிச் சிரிப்பினம்?!

உணர்ச்சிகளுள் சிக்கித் தவித்துக் கொண்டிருந்த கௌசியின் உடம்பு இந்த மாசிப் பனியிலும் வேர்த்துக் கொட்டியது. கண்கள் கண்ணீருள் மிதக்க 'நான் நினைச்ச மாதிரியே செய்திடுவம் அது தான் சரி' என்று எண்ணியவளாய் வானத்தைப் பார்க்க... நிலவு மறைந்தும் மறையாமலும் இருக்கச் சூரியனின் கதிர்கள் உதிரியாக வானத்தில் கோடுகள் போட்டிருந்தது.

தோளை வெட்டிய புத்தகப் பையை இடம்மாற்றி மற்றப்பக்கம் போட்டுக் கொண்டாள்.

நீண்ட குச்சொழுங்கையில் இருந்து. தார்றோட்டில் ஏறியவள் பெருமூச்சொன்றுடன் திரும்பிப் பார்த்தாள்.

நடந்து வந்த பாதை வெளிச்சமேதுமற்று இருண்டு போய்க் கிடந்தது. அவளது வாழ்க்கையைப் போல. இருட்டைப் பார்த்துக்கொண்டு நிண்டவளுக்கு அதிசயமாக இருந்தது. வழமையாய் இருட்டென்றால் பயம். இன்று அதைப்பற்றிய சிந்தனையே இல்லாமல் மனசில் எழுந்த உணர்ச்சியின் உந்தலில் இப்படி அதிகாலையி லேயே வெளிக்கிட்டு விட்டேனே. நினைத்துப் பார்க்க அதிசயமாக இருந்தது.

வீடிருந்த திசையையே பார்த்துக் கொண்டிருந்த கௌசிக்கு இரவிரவாகப் படுக்கையில் கிடந்து அழுதது நினைத்ததெல்லாம் தாமரை இலையில் மிதக்கும் தண்ணீர்த் துளிகளாக இப்பவும் மனசுக்குள் உருண்டு கொண்டு இருந்தது.

ஏன் எனக்கு மட்டும் இப்படி ஒரு அம்மா அப்பா? எதைச் செய்தாலும் குற்றம் குறை சொல்லிக் கொண்டு... ஏதாவது விருப்பமாய்க் கேட்டால் "இந்த வயதிலேயே மினுக்கத் தொடங்கிட்டாய் யாரோட ஓடிப்போய் என்ர மானத்தை கெடுக்கிறியோ தெரியா" என்று நச்சரிப்பதால் கேட்பதையே விட்டு விட்டேன். இந்தப் புத்தகப் பையில் இருந்து காலில் கிடக்கும் செருப்பு வரை எல்லாமே அம்மாவின் தெரிவுதான். என் விருப்பு

வெறுப்புக்கு இடமே இல்லை. காகம் கூடத் தன் குஞ்சைப் பொன் குஞ்சென்று தான் பார்க்குமாம். அம்மா என்னைக் 'கௌசிக்குட்டி' என்று செல்லமாகக் கூப்பிட்டால் எவ்வளவு நல்லாயிருக்கும் என்று கற்பனை செய்து பார்ப்பன்.. மனசு முற்றத்தில் பூத்திருக்கும் செம்பரத்தம் பூவாக விரிஞ்சு போய் இருக்கும். அடுத்த கணமே 'கழுதை, மாடு, சனியன், என்ன கோட்டை கட்டிற யோசினையிலா இருக்கிறாய்? எடுக்கிற மாக்ஸ் மட்டும் முட்டை, என்ற அம்மாவின் குரலால் மனசு வாடிச் செத்தே போய் விடும்.

எனக்கு ஏன் படிக்க முடியுதில்லை. முன்பு போல நிறைய்ய மாக்ஸ் எடுக்க முடியுதில்லை என்று ஒருக்கா என்டாலும் அன்பாகக் கேட்டிருந்தால் சொல்லி இருப்பன்.

பக்கத்து வீட்டில ஏ.எல் படிக்கிற சங்கரண்ண கடிதம் தந்து கரைச்சல் படுத்திறதை நினைச்சாலே தலை எல்லாம் இறுகிப் போய் விடும். எனக்குப் படிக்கத்தான் விருப்பம். ஆனால் இப்பிடியான பிரச்சினையளை எப்பிடிச் சமாளிக்கிறதென்று தெரியல்ல. யாரிடமாவது கேட்பமென்டாலும் பயம். அதால பேசாம இருக்க இருக்க அவரின் தொல்லையளும் கூடிக் கொண்டே போகுது.

அம்மாவும் என்னைப் போல இருந்து வந்தவ தானே. அவக்கு ஏன் இப்படியான பிரச்சினைகள் வருமென்டு தெரியுதில்ல? அதோட போதாதென்டு இந்த மோகன் சேரின் சேட்டையள் நினைச்சாலே அருவருப்பாக

இருக்கும். அதால தான் உந்த ரியுசன் வேண்டாமம்மா என்று சொல்ல அம்மா என்ன பேச்சு பேசினா? “உனக்கு படிப்பில ஒருவித ஆர்வமும் இல்லை. காசச் செலவளிச்சு பேர்சனல் கிளாசுக்கு விட உனக்குப் போய்ப் படிக்கிற பஞ்சி. எத்தினை பிள்ளையள் கொப்பி பேனைக்கு வழியில்லாமல் இருக்குது தெரியுமோ” என்று கும்மாளம் போட்டா. வேறு வழியில்லாம மனதைக் கையில பிடிச்சுக்கொண்டு போக வேண்டிக்கிடக்கு. அது தான் அவற்ற கிளாஸ் நாளென்டாலே விடிய எழும்ப மனம் வராது. அம்மான்ர ஆக்கின தாங்காம எழும்பிப் போறது. இந்தச் சூழலிலை எப்பிடிப் படிக்கிறதுக்கு மனசு வரும்?

எங்கட வகுப்பில படிக்கிற சாருவை அவன்ர அப்பா எப்படி எல்லாம் கவனிக்கிறார்? ஒவ்வொரு நாளும் பள்ளிக்குடம் கொண்டந்து இறக்கிட்டு கைகாட்டிட்டு போறதை ஒளிச்சு நீண்டு பார்ப்பதில் எனக்கு ஒருவித திருப்தி. அவளின்ட வீட்டில காசு கஸ்ரமென்டாலும் எப்பிடிப் படிக்கக் கூடியதா இருக்கு. எல்லாம் அவளின்ர அப்பா அம்மா கொடுக்கிற ஆதரவில தான்.

இரவில படிப்பம் என்டு புத்தகத்த விரிச்சா... நாலஞ்சு வரி வாசிப்பன், பிறகு உப்டி ஏதாவது கற்பனையில் இருந்திடுவன். ‘ரீவில விளம்பரத்தில் வாற அம்மாக்களை ஏக்கத்துடன் பார்ப்பன். அம்மா உதுகளைப் பார்த்து என்டாலும் என்னட்ட அன்பா இருக்க மாட்டாவோ என்று யோசிப்பன். அவ பாக்கிறது “நதி எங்கே போகிறதும்”

"சித்தியும்" மட்டும் தான். விளம்பர நேரத்தில குசினிக்குள்ள போடுவா. அந்த நேரத்தில படிக்கவும் முடியாது. செய்தி நேரத்தில மட்டும் தான் ரீவி நிப்பாட்டுப் படும்.

கௌசிக்கு நெஞ்செல்லாம் விம்மிக் கொண்டு வருவது போல இருந்தது. எச்சிலை விழுங்கிய வண்ணம் கண்களைக் கசக்கினாள்.

விடிந்தும் விடியாததுமான இந்தப் பொழுதில் மெல்லிய காற்று வீச எதிரே சத்தமேதுமற்று உறங்கிக் கொண்டிருக்கும் பரந்த வயல் வெளியைப் பார்த்துக் கொண்டு நின்றாள் கௌசி.

வீதி ஓரத்தில் சீமெந்தால் கட்டிய வயல் வரப்பில் அப்பாவுடன் வந்து உட்கார்ந்த நாட்கள் நினைவுக்கு வந்தன. அப்பெல்லாம் அருவி வெட்டிய பின் வயலில் சணல் விதைத்திருப்பார்கள். மண் மஞ்சள் புடவை கட்டிக் கொண்டு படுத்திருப்பது போல எவ்வளவு நல்லா இருக்கும். சணல் பூக்களை புடுங்குவதும் அப்பாவின் தலையில் கொட்டி விளையாடுவதும் பிடித்தமான விளையாட்டு. அயலில் இருந்த என் வயதொத்த பிள்ளையள் எல்லாரும் வருவினம். சணல் வயலுக்குள் ஒளித்து பிடித்து விளையாடுவதென்றால் சாப்பாடே தேவை இல்லை. நிலாவரைக் கிணத்தில் உள்ள நீரைப் போல மனசு 'எப்போதும்' மகிழ்ச்சியால் நிறைஞ்சிருக்கும்.

அப்பெல்லாம் அப்பாவை விட்டிட்டிருக்கிறது சரியான கஸ்ரம். ஆனால் அப்பா வெளிநாட்டுக்குப் போன போது நான் எந்தவித தொல்லையும் கொடுக்கல்ல. சத்தம் போடல்ல, அழவில்லை. எல்லாரும் ஆச்சரியமா யோசிப்பிங்கள். அப்பா "உதில கடைக்குப் போறார் இருளிறதுக்குள்ள வந்திடுவர்" என்று சொல்லிட்டுத் தான் போனவர். அப்பேன் அழுகை வருது? நானும் பார்த்துப் பார்த்து நாட்கள் கிழமைகளாகி, கிழமைகள் மாதங்களான போது தான் சொல்லிச்சினம் அப்பா இப்போதைக்கு வர மாட்டார் எண்டு. அந்த நாட்களில் நான் அழுத அழுகை 'அப்பாட்ட கொண்டு போய் விடுங்கோ' எண்டு.

பிறகும் நேசறிக்கு போற நாட்களில் ஏன் நான்காம் ஐந்தாம் வகுப்பு வரை உந்த வயலில் தான் எங்கள் வாழ்க்கை. வீட்டில் அடியும் விழும். இருந்தாலும் கள்ளமாய் என்டாலும் சுழிச்சிட்டு ஓடிவந்துடுவேன். மழைக் காலங்களில் பக்கத்து வீட்டு அருணின்ர வீட்டில குரும்பட்டித் தேர்கட்டி விளையாடிறது.

பிறகு "தம்பியைப் பார், வீட்டு வேலையளைப் பார்" என்று அம்மா மறிச்சிட்டா! யாராவது என்னோட ஒத்த பிள்ளையள் வந்தாலும் அம்மா ஏசிக் கலைச்சிடுவா. பிறகு அந்தப் பிள்ளையளின்ர முகத்தில முளிக்கிறதுக்கே வெட்கமா இருக்கும். 'எல்லாரும்' என்னைப் பரிதாபமான ஜந்து ஒன்றைப் போலத்தான் பாப்பினம். எனக்கு அந்தரமாய்க் கிடக்கும். வீட்டை விட்டு எங்காவது ஓடிப் போய் விடலாமா என்று கூட அடிக்கடி யோசிப்பன்.

ஒருமுறை பள்ளிக்கூடத்தில பரிசளிப்பு விழா நடந்த போது எல்லாரும் அம்மா அப்பாவைக் கூட்டி வரச்

சொல்லி பள்ளிக்கூடத்தில சொல்லிச்சினம். அம்மாட்ட வந்து கேட்க "எனக்கு வேற வேலை இல்லையோ - நீயோ நானோ படிக்கிறது" என்று மாட்டன் என்றிட்டா எனக்குக் கன பரிசு தருவினம். வாங்கோவன் என்றாலும் வரேல்லை. மற்றப் பிள்ளையள் எல்லாரும் பெற்றாரோட தான் வந்தவை. தங்கட பிள்ளையளோட வேண்டிய பரிசுகளோட நிண்டு படம் எடுத்திச்சினம். ரீச்சர்மாரெல்லாம் பெற்றாரோட போய்க் கதைச்சுச் சிரிக்கிறதைப் பார்க்கப் பார்க்க அழுகை அழுகையா வந்திச்சு. அந்தன்று பள்ளிக் கூடத்தால வீட்ட போக மனமே இல்லை. இந்த வயலடியில் நான் இருந்து வானத்தப் பார்த்துக் கொண்டிருந்தன். இருளத் தொடங்கிட்டு. எதோ ஒரு மன உந்தலில் அப்படியே இருந்தன். பிறகு அம்மா தேடி வந்து இதில இருக்கிறதைக் கண்டிட்டு நல்ல அடி விழுந்தது. இரவு நான் சாப்பிடவும் இல்லை. அடுத்த நாள் நல்ல காச்சல், இப்படியே செத்துடலாமோ என்று கூட நினைச்சன். அதுக்கு அப்ப நேரம் வரேல்லப் போல.....

யோசித்துக் கொண்டு வயலின் ஓரத்தில் நின்ற ஆலமரத்தைப் பார்த்தாள் கௌசி. மரத்தில் இருந்த பறவைகளில் ஒன்று மட்டும் ஓலமாய் சத்தமெழுப்பிக் கொண்டு பறந்து சென்றது.

கௌசி நின்ற வீதியில் வலது பக்கமாய் நான்காவது வீட்டில்தான் மோகன்சேர் குடியிருக்கிறார். சின்னனில் இருந்தே அவரை ஒரு "அரியண்டமாகவே' பார்ப்பவள் கௌசி. சின்னனில் வயலில் மற்றப் பிள்ளைகளுடன் சேர்ந்து விளையாடிக் கொண்டிருக்கும் போது வயல் காட்டில் நிண்டு கொண்டு அவர் சொல்லும் அரியண்ட

மான கதைகள், வார்த்தைகள் எதுவுமே அவளுக்குப் பிடிப்பதில்லை. சின்ன ஆண்பிள்ளைகளுடன் சோடி சேர்த்துக் கதைப்பது அவரின் பகடிகளில் பிரதானமான தாக இருக்கும். பிறகு வளர்ந்த பின் அவரிடமே படிக்க வேண்டிய நிர்ப்பந்தத்தை எண்ணி மனம் குமிறி இருக்கின்றாள். இருந்தபோதும் இதை யாரிடம் தான் சொல்ல முடியும்.

மோகன் சேர் வீட்டுப் பக்கமாய் ஒரு ஏளனப் பார்வை பார்த்துவிட்டு நினைத்துக் கொண்டாள் "இந்தக் கௌசிக்கு இன்றிலிருந்து உந்த நரக வீட்டிலிருந்து விடுதலை" மறுபடியும் ஒருமுறை தன் வீட்டுப் பக்கமாய்த் திரும்பிப் பார்த்த கௌசிக்குத் 'திக்' என்றிருந்தது. "நான் இனி இந்த வீட்டிற்கு வர மாட்டேனா? தம்பியைப் பார்க்க முடியாதா? இதுவரை நான் தண்ணி ஊற்றி வளர்த்த மல்லிகைக் கொடியின் முதலாவது பூவை பார்க்கவே முடியாதா? ஆசையாய் வளர்த்த நாய்க்குட்டி ஐந்து அல்பங்கள் நிறைய சேகரித்து வைத்துள்ள முத்திரைகள் எல்லாவற்றையும் விட்டுவிட்டு எப்படிப் போவது? வீட்டிற்குத் திரும்பிப் போகட்டோ? என எண்ணிய வளுக்கு "சீ... அம்மாக்கு ஒரு பாடம் படிப்பிக்கத்தான் வேண்டும்" என முணுமுணுத்துக் கொண்டு வீதியைக் கடந்து இடதுபுறமாக நடக்கத் தொடங்கினாள்....

இப்படியே போனால் அந்தக் கிணறு வரும்! இந்தச் "சோலை ஊர்" கிராமத்தில் யாருக்கு என்ன தீர்க்க முடியாத பிரச்சினை வந்தாலும் தீர்வெடுக்கும் இடமாக இந்தக் கிணறு தான் உள்ளது! போன மாதம் வயசுபோன

அப்பு ஒருநாள் நோயின் கடுமை தாங்கேலாமல் இந்தக் கிணத்துக்கு வந்து விழுந்து இரண்டு நாட்களின் பின் தான் கண்டுபிடிச்சவை. எனக்கெப்படி இப்படி ஒரு உறுதியான முடிவு வந்தது? இந்த உலகை விட்டே போய் விட வேண்டும். என்னை வேண்டா வெறுப்பாக வளர்க்கும் பெற்றாருக்குச் செய்துகாட்ட வேண்டும் என்று முடிவெடுத்த தன் துணிவை எண்ணி ஆச்சரியப் பட்டாள்.

வீதியில் இருந்து இறங்கிக் கடகடவென வரம்புகளில் நடந்தவள், புத்தகப் பையைக் கீழே போட்டு விட்டு வீதியைப் பார்த்தாள். யாருமே இல்லை. அருவி வெட்டிய படியில் எல்லாமே தெளிவாகத் தெரிந்தன. தூர்ந்துபோன மண் மேட்டால் ஏறிக் கிணற்றின் படிக்கட்டு மேல் ஏறி நின்று கிணற்றுள் பார்த்த கௌசிக்கு கண்கள் எல்லாம் இருண்டு கொண்டு வருவது போல் கிடந்தது. கிணற்றைப் பார்க்க ஒரே பயமாகக் கிடந்தது. இதற்குள் விழுவதென்டால் நோகுமே... என நடுங்கிக் கொண்டு என்ன செய்வதெனத் தெரியாது வீதியைப் பார்த்தவளுக்கு 'திக்'கென்றது. வெளிச்சம் ஒன்று விரைவாக வந்தவண்ணம் இருந்தது. உற்றுப்பார்க்க வாகனம் ஒன்று வந்து கொண்டிருப்பதை உறுதிப் படுத்தியவள் கிட்டவந்தால் கண்டு விடுவார்களோ என எண்ணிக் கொண்டு கண்களை மூடிய வண்ணம் பாய்ந்தே விட்டாள்.

◆ ◆ ◆

"டேய் கரன், எங்கயடா கழுதையைக் காணேல்ல? ஏழுமணிக்கு ரியசன் முடிஞ்சுடும் எட்டுமணியாகியும் இன்னும் காணேல்ல. போய் பாத்துக் கொண்டோடியாடா?" என்று மகனைக் கலைத்து விட்டு ரீவியை போட்டு விட்டுக் கதிரையில் இருந்தாள் கண்ணகி.

"அம்மா, அக்கா ரியுசனுக்கு வரவில்லை என்று சேர் சொல்றாரம்மா" என்றான் கரன்.

"ரீயுசனுக்கு வரேல்லையா? நாற்பத்தைந்து பாகையில் தலையைச் சரித்து யோசித்த கண்ணகி, "அப்ப எங்க போட்டுது? ஒருவேளை யாராவது படிக்கிற பெட்டையளிட்டப் போட்டாளோ? தெரியும் அவளுக்குச் சொல்லாம போனாத் தோல உரிப்பன் என்டு.... அப்ப அங்கயும் போக மாட்டாள். எங்க போயிருப்பாள்... முதன் முதலாய் கண்ணகிக்கு மகள் பற்றிய யோசனை வந்தது!

மகனையும் அழைத்துக் கொண்டு பக்கத்தில் உள்ள கௌசியுடன் படிக்கும் பிள்ளைகளின் வீடுகளுக்குச் சென்றும் ஏமாற்றமே மிஞ்சியது.

கரனுக்குத் தாயைப் பார்க்கச் சிரிப்பு வந்தது. அக்காவுடன் சண்டை பிடிக்கும் அம்மா, பல்லை நெருமிக்கொண்டு அடிக்கக் கலைக்கும் அம்மா... உப்பிடி பயப்பிடிறாவே! தாயின் கேள்விக்குப் பதிலேதும் சொல்லாது எங்கோ பார்த்தான்!

கண்ணகிக்கு என்ன செய்வதென்றே புரிய வில்லை.

தனக்கு எல்லோரும் கட்டுப்பட்டு நடக்கும் போது தன்னால் எதையும் சாதித்து விடலாம் என நம்பும் மனது, சில விடயங்கள் தனது கட்டுப்பாட்டையும் மீறி நடந்து விட்டது எனத் தெரியவரும் போது ஏற்றுக் கொள்ள முடியாது உடைந்து போய் விடுவது இயற்கை தானே! கண்ணகிக்கும் அப்படித்தான்.

தன்னை மீறி எதுவும் நடந்துவிடாது என எண்ணிக் கொண்டிருந்த கண்ணகிக்கு கௌசி எங்கே போனாளெனத் தெரியாத ஒரு நிகழ்வே ரொம்பவும் குழப்பிவிட்டது.

'யாருடனாவது ஓடி.......... சீ! என்ர மகள் அப்பிடி நடப்பாளா? எல்லாத் தாய்மாரையும் போலவே கண்ணகியும் அதனை எண்ணிப் பார்ப்பதைத் தவிர்த்தாலும்.. வேறு காரணங்களைத்தேட அவளால் முடியவில்லை.

பிள்ளைகளின் மனம் மிக ஆழமானதும் வினோத மானதும் கூட. பெரியவர்கள் எதிர்பார்ப்பதைப் போலவே பிள்ளைகளும் நடந்தால் பெரியவர்கள் - பிள்ளைகள் என்ற வேறுபாட்டிற்கு அர்த்தமில்லையே. அதனால் தான் கௌசி செய்ததை கண்ணகியால் கற்பனை பண்ணிக் கூடப் பார்க்க முடியவில்லை.

மணிக்கூட்டிற்குள் இருந்த குருவி பத்து முறை வந்து கூவி விட்டுப் போனது.

கண்ணகிக்கு என்ன செய்வது, ஏது செய்வதென்று தெரியாது குழம்பிப் போய் வாசல் தூணைப் பிடித்த வண்ணம் வாசலையே பார்த்துக் கொண்டு கற்பனையில் இருந்தாள்.

திடீரென்று வாசலில் வாகனம் ஒன்றின் சத்தம் கேட்க எட்டிப்பார்த்தாள்.... வெள்ளை நிற வான் ஒன்றுக்குள் இருந்து யாரோ ஒருவர் இறங்கிவருவது தெரிந்தது.

கரன் ஓடிப்போய் கேற்றைத் திறக்க... வந்தவர் "கௌசி... கண்ணகி... வீடு... என இழுக்க....

"இதுதான் இதுதான்" என படபடத்துக் கொண்டு விரைந்து சென்ற கண்ணகி, "சொல்லுங்கோ! கௌசி எங்க?" என்றாள். வந்தவரின் முகம் இறுகிப் போயிருந்தது.

ஏதோ நடக்கக் கூடாதவொன்று நடந்து விட்ட தென்று மட்டும் கண்ணகிக்குப் புரிந்து விட்டது.

வந்தவர் பொக்கற்றுக்குள் மடித்து வைத்திருந்த கடிதம் ஒன்றை எடுத்துக் கண்ணகியிடம் நீட்டப் பதட்டத்துடன் வாங்கிய கண்ணகிக்குக் கை எல்லாம் படபடத்தது.

அவசர அவசரமாகக் கடிதத்தைப் பிரிக்கும்போதே அது கௌசியின் கையெழுத்தில் எழுதப்பட்ட கடிதம் எனப் புரிந்து விட்டது.

அம்மா,

எனக்கு 'அன்புள்ள அம்மா' என்று தொடங்கத் தான் விருப்பம். உங்களுக்குத் தான் அப்படி ஒன்று இல்லையே என் மீது!

கண்ணகிக்குத் தொடக்கத்தைப் பார்க்கவே அதிர்ச்சியாக இருந்தது. தொடர்ந்து வாசித்தாள்.

இன்று இரவு நீங்கள் என்னை ஒரு வேண்டாத பொருளாக நினைத்துப் பேசி, அடித்ததெல்லாம் என்னை நிறையப் பாதித்து விட்டது. எனக்குப் பணம், பொருட்களை விட உங்கள் அன்பையும் அரவணைப்பையும் பெற வேண்டுமென்பதில் தான் அவா அதிகம். என்னை ஒரு பெறுமதியான பிள்ளையாக நீங்கள் உணரவே யில்லை. எனக்கும் இந்த உலகத்தில் மற்றப் பிள்ளை களைப் போல ஓடி ஆடி உற்சாகமா இருந்து படிக்க வேணுமென்று ஆசை. மொக்கு, மோடென்று திட்டுவியள். பிறக்கும் போதும் ஆண்டு ஐந்து புலமைப் பரிசிலில் பாஸ் பண்ணும் போதும் நான் மொக்காகவா இருந்தேன்? அப்ப எத்தனை பரிசுகளை எடுத்திருப்பன் அப்போது என்ர கெட்டித்தனத்தைப் பற்றி பேசாத உங்கள் வாய் இப்போது 'மொக்குத் தனத்தைப் பற்றி மட்டும் தான் பேசுகிறது. நான் ஏன் படிக்க முடியாதுள்ளதென எப்போதாவது கேட்டு உள்ளீர்களா? உங்களிடம் என் பிரச்சனைகளைச் சொல்வதற்குக் கூடப் பயமாக உள்ளது. நான் வெளியில் சென்று மற்றவர்களுடன் கதைக்கவும் அனுமதி

இல்லை. என்னால் ஒன்றுக்குமே ஏலாதுள்ளது, எதையுமே செய்ய முடியாதுள்ளது. இப்படியே இருந்து உங்கள் மானத்தைக் கெடுக்க எனக்கு விருப்பம் இல்லை. என்னால் பின்னுக்குக் கஸ்ரம் என்று கூடச் சொன்னீர்கள். பிறக்காமலே இருந்திருக்கலாம் என்று பேசினீர்கள். ஏனம்மா என்னை வளர்த்தீர்கள்? உங்களிடம் போதிய பணம் உள்ளது. எனக்காய் செலவளிக்கக் கொஞ்ச நேரமும் மனசில் அன்பும் இருந்தா எவ்வளவு நல்லாய் இருக்கும். அப்படி ஒரு அம்மாவை என் அடுத்த பிறப்பிலாவது தா என்று ஆண்டவனை வேண்டிக் கொண்டு இதை முடிக்கிறேன்.

எனக்கு என்ன செய்வதென்றே தெரியேல்ல. தற்செயலா 'நான் இப்ப நினைச்சுக் கொண்டிருக்கிறது போல விடியவும் நினைச்சுத் தற்கொலை செய்திட்டா..."

அதற்குமேல் கண்ணகியால் வாசிக்க முடியவில்லை.

"ஐயோ......... கௌசி" என்று கத்தத் தொடங்கி விட்டாள். கௌசி நினைத்தது போல் பொருள் தூரத்திற்குப் போட்டுது என உணர்ந்தபோதுதான் அதன் முக்கியத்துவமும் பிரயோசனமும் விளங்குது.

கண்ணகியால் ஒரு நிலையில் நிற்க முடியாது சாய்ந்து உட்கார்ந்து, "எ....ன்...ன நடந்திட்டுது என் கௌ...சிக்கு? சொல்லுங்கோ" எனக் கத்தினாள்.

வான் கண்ணாடிக்குள் இருந்து பார்த்துக் கொண்டிருந்த கௌசிக்குத் தாயைப்பார்க்கப் பாவமாகவும் ஒருவித திருப்தியாகவும் இருந்தது.

வந்தவர் கண்ணகியை அழவேண்டாமெனச் சைகை காட்டினார். ஏக்கத்துடன் பார்த்த கண்ணகியை நோக்கி,

"உங்கள் மகள் உயிருடன் தான் இருக்கிறாள். செத்துப் பிழைத்திருக்கிறாள்" என்றார்.

கண்ணகியின் புருவங்கள் கேள்விக்கோடு போட வந்தவர் தொடர்ந்தார்......

"நான் சுந்தரராஜ். சிறுவர் நல நிறுவனம் ஒன்றில் பணியாற்றிறன். இன்று விடிய வேலை நிமித்தம் வடமாட்சி போய்க் கொண்டிருக்க உந்த வயலடிக் கிணற்றடியில் ஒரு பிள்ளை நின்டது போல இருந்தது. திடீரென ஆளைக்காணேல்ல. வானை நிப்பாட்டிட்டு பார்க்க கிணற்றுக்கட்டில் ஒரு புத்தகப்பையும் கிடந்தது. சந்தேகம் வர கிணற்றடிக்குப் போக உள்ளே உங்கள் மகள்...

பிறகு உடனடியாக இறங்கிப் பிள்ளையை மேலே கொண்டு வந்து பக்கத்தில் இருந்த பிறைவேற் ஆஸ்பத்திரியில் விட்டிட்டு புத்தகப்பையைப் பார்த்தன் இந்தக் கடிதம் கிடந்துது. வாசிக்க எனக்கு எல்லாமே விளங்கிட்டுது" சுந்தரராஜ் சொல்லச் சொல்ல கண்ணகி கண்கள் விரியக் கேட்டுக் கொண்டிருந்தாள்.

# வலி

உடம்பு முழுவதும் பயங்கரமாய் வலிக்குது. விண் விண் என்று கொதிக்கிறமாதிரி இருக்குது. கையைக் காலை அங்கால இங்கால புரட்ட முடியேல்ல. எனக்கு மேலே பெரீய்ய லொறியொன்டு ஏறி நசிச்சுப் போட்டமாதிரி. காலேல வைரவர் கோயில் மணி கேக்கமுந்தி நான் கண் முழிச்சிருவன். இனக்கு இப்ப இப்பிடி எழும்பிறது பழக்கமாப் போச்சு. யாரும் என்னை எழுப்பத் தேவேல்ல. நானே எழும்பிடுவன். நீங்கள் நினைக்கலாம் ஏன் இவ்வளவு வெள்ளன எழும்ப வேண்டுமென்று, கொஞ்சம் சுணங்கி எழும்பலாந்தானே. நீங்கள் மனுசப்பிறவியள். நல்ல சனங்கள் அப்படித்தான் நினைப்பியள்.

ஆனால்... என்ர நிலைமையோ அப்படியில்ல. நானும் மற்றும் அப்பா அம்மான்ர பிள்ளை மாதிரி, நல்லா விடிஞ்சாப்பிறகும் நித்திரை கொண்டு, அம்மா வந்து, "எழும்பு பிள்ள எழும்பு பிள்ளை" என்று என்னைக்

சி.கதிர்காமநாதன்

கரைச்சல் படுத்தி எழுப்பி என்னைத் தள்ளிக் கொண்டு போய் கிணத்தடியில தண்ணியைத் தொட்டிக்க ஊத்தி, பற்பொடி தந்து பல்லுத்தீட்டி முகத்தைக் கழுவி... எல்லாம் முடிஞ்சு நான் வரச் சுடச்சுட கோப்பி தந்து, அந்தக் கோப்பியக் குடிக்க எவ்வளவு ருசியாய் இருக்கும் தெரியுமோ!

அந்த ருசியான வாழ்க்கை சந்தோஷமான வாழ்க்கை சகோதரர்களோடு கதைத்துப் பேசி, பள்ளிக்கூடம் போய், வைரவர் கோயிலுக்கு முன்னால விளையாடி, காணி வெளியில பட்டம் விட்டு, விளாத்தி மரத்துக்குக் கல்லெறிஞ்சு அம்மா மடியில நித்திரை கொண்டு.....

எல்லாம் நடந்தது கொஞ்சக் காலம். அம்மா உயிரோடை இருக்கும்வரை. அம்மா செத்துப் போனாப் பிறகு வாழிற எனது வாழ்க்கை வால் அறுந்த பட்டம் மாதிரித்தான் எங்கேயோ போட்டுது. என்ர நிலை இப்பிடியாகிப் போய்ச்சு. என்ர நிலையை உங்களுக்குச் சொல்லுறன்.

எங்கட குடும்பம் பெரிய குடும்பந்தான். நான் அப்பா, அம்மா, அக்கா, அண்ணா, தம்பி, தங்கச்சி இவ்வளவு பேரும்தான். அப்பாவைத்தவிர நாங்கள் கஸ்ரமென்டாலும் வாறதக் கொண்டு சந்தோசமாத் தான் இருந்த நாங்கள். அம்மா சரியான கெட்டிக்காரி, பொறுமைசாலி. எங்கட குடும்பத்த நல்லாய் ஆளாக்க வேண்டுமென்டு சரியாக் கஸ்ரப்பட்டா. அம்மாக்கு நாங்கள் நல்ல ஒத்துழைப்புக் கொடுத்தம்.

அப்பா என்றா.......

அப்பாவைப் பற்றி என்னத்தைச் சொல்லுறது. வேலைக்குப் போறது ஒழுங்கில்லை. உழைச்சுக் கஸ்ரப் பட்டுச் சாப்பிடறதெண்டால் ஆளுக்கு விருப்பமில்ல. சும்மா ஆக்களோட ஊர்சுத்திறது. இருந்தாப்போல ராவில ஆள் காணாமப் போயிருவார். வந்த கையோட வாய்க்கு வந்தபடி பேசத் தொடங்கிவிடுவார்.

"எங்கையடி அம்மா போட்டாள்? ராத்திரி வீட்டில இருந்தவளர்? இஞ்ச ஆரும் வந்தவையோ?"

வாயில இருந்து கெட்டதாப் பேச்சு வரும். எனக்கு உடம்பெல்லாம் நடுங்கும். கடைசித் தங்கச்சி சின்னன், அவள் பயத்தில என்னைக் கட்டிப்பிடிச்சுக் கொண்டு நிப்பா. அண்ணை அக்கா தம்பி எல்லாம் அப்பாவைப் பார்த்து முறைச்சுக் கொண்டு நிப்பின.

இது ஒரு நாள் மாத்திரம் நடக்கிற கூத்தில்ல. எனக்கு 'விளக்கம்' தெரிஞ்ச நாளில இருந்து அப்பான்ர பிறவிக் குணம் இதுதான்.

அம்மாவைக் கண்டதும் அப்பாவைப் பார்க்க வேணுமே அடி... கையில கிடைக்கிறதத் தூக்கிக் கொண்டு ஓடுவார். அம்மா கிட்ட நெருங்கேக்க அடியும் விழும். அம்மா 'ஐயோ' என்று கத்துவா. அக்கா அண்ணாவை, துரத்திப் போய் அப்பாவை இழுத்து அம்மாவைக் காப்பாத்துவினம். அம்மா கத்திக் குளறுவா. "ஐயோ உந்த மனுசனுக்கு என்ன பிடிச்சிட்டுது? ஏன் உப்பிடிச் சந்தேகப்பட்டுக் கொண்டு திரியுது. ஒருத்தரும் வெளியில போகக் கூடாது. வேற ஆக்களும் வீட்டை வரக் கூடாது. உந்தாளைக் கட்டின நாள் தொடக்கம் நான் செத்துச் செத்துப் பிழைக்கிறன்."

நாங்களும் வீட்டு மூலைக்கு மூலை இருந்து அழுவம். அண்டைக்கும் வழமை மாதிரி ராவில வெளிக்கிட்டுப் போய் திரும்ப வந்து பிரச்சனை. துரத்தி அம்மாக்கு அடிக்க வெளிக்கிட அம்மா ஓடினா. இவர் துரத்திக் கொண்டு போனார். அம்மாவும் ஓடினா. இவரும் விடேல.

நானும் தங்கச்சியும் அம்மாக்கு ஏதேனும் நடத்திடுமோ என்ற பயத்தில பின்னாலை ஓடினம். அம்மா ஓடிக் களைச்சுக் கிணத்தடியில தடக்கிக் கீழ விழுந்து தலை அடி பட்ட சத்தம் கேட்டது.

"என்ர ஐயோ"

எங்கட அம்மா தலை அடிபட்டதோட செத்துப் போனா. ஒரு மூச்சுப் பேச்சில்ல. அண்டைக்கெண்டு மற்ற ஆக்கள் வீட்டில இல்ல. அயலாக்கள் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போக, அண்ணை அக்கா வந்திட்டார்கள். ஒரே கத்தினார்கள். இனி என்ன செய்யிறது. ஆஸ்பத்திரியில விளக்கத்தில அம்மா மருந்து குடிச்சுச் செத்தது என்று சொல்ல, அவையள் நம்பேல்ல. அப்பாவைக் கொண்டு போய் ஜெயில்ல போட்டிட்டார்கள்.

எங்களுக்கு என்ன செய்யிறதெண்டு தெரியேல்ல. அம்மான்ரை அக்கா - பெரியம்மா தான் எங்களுக்கு உதவியா இருந்தா. அம்மா போனதோட எங்கட பள்ளிக் கூட வாழ்க்கையும் முடிஞ்சு போய்ச்சு.

வீட்டில உழைச்சுப் போட ஒருத்தருமில்ல. அப்பான்ர அக்கா - எங்கட மாமி இடையில ஒரு நாள்

வந்தா. எங்கட நிலையைப் பார்த்து சரியாப் பரிதாபப்பட்டா. அப்பாவைப் பேசினா. எங்களுக்கு ஆறுதல் சொன்னா. எனக்கு என்னமோ அவவில சரியான நம்பிக்கை வரேல்ல. என்னைப் பார்த்துப் பார்த்துத்தான் கதைச்சா.

கடைசியில எங்கட குடும்பம் யாரும் எங்களப் பார்க்க இல்லாத இடத்தில, ஒவ்வொருத்தரையும் ஒவ்வொரு பக்கமாய் தள்ளிவிட்டினம். பெரியம்மாவோட அக்காவும் தம்பியும் போச்சினம், மாமியோட என்னை அனுப்பிச்சினம். (மாமி என்னைக் கூட்டிக் கொண்டு போகவிடாப் பிடியா நிண்டா) அண்ணைய இன்னொரு மாமியிற்ற அனுப்பிவிட்டா. எங்கட குடும்பம் இப்ப துண்டு துண்டாப் போச்சு.

இங்க மாமி வீட்ட நான் நினைச்ச மாதிரி இல்லை. மாமி சரியாப் பொல்லாதவ. இங்க இப்ப நான் தான் வீட்டு வேலை செய்யிறது. இப்ப பாருங்கோ முழிச்சிற்றன். ராத்திரில சாப்பிட்ட தட்டெல்லாம் சட்டி பானையெல்லாம் நான் தான் கழுவவேணும். வீடு முத்தம் எல்லாம் கூட்டி முடிச்சு நான் பள்ளிக்கூடம் எப்படிப் போறது.

இதெல்லாம் மாமி, மாமா, மூன்று பிள்ளைகள் எழும்ப முன் நான் எழும்பிச் செய்யத் தொடங்கீருவன். வேலை செய்து கொண்டு இருக்கேக்க அம்மாவை நினைப்பன். அழுகை வரும். ராவில படுக்கேக்க கனவில அம்மா அடிக்கடி வருவா, இப்ப குறைஞ்சிட்டுது.

நான் ராவில அழுதுகொண்டு தான் படுப்பன். 'அம்மா பாத்தியளே என்ர நிலைமையை, நீங்கள் இருந்தால் இப்பிடி நடக்குமே. நான் இப்படிக் கஸ்ரப்

பட்டுக் கொண்டு இருக்க, அண்ணையும் அக்காவும் இயக்கத்துக்குப் போட்டினம். நான் கொஞ்ச நாளைக்குப் பிறகுதான் கேள்விப்பட்டனான். எனக்குக் கஸ்டமாப் போட்டுது. இந்த மாமியோட என்னால இருக்க ஏலாமல் இருந்தது. நான் பள்ளிக்கூடம் போகாமல் இருக்கிறது பெரியம்மா தெரிஞ்சு வந்து மாமியோட சண்டைபிடிச்சு பள்ளிக்கூடம் போக மாமி சம்மதிச்சது.

அவ நான் பள்ளிக்கூடத்தால வந்த பிறகும் என்னைச் சும்மா இருக்க விடேல்ல. வீட்டில வளர்க்கிற ஆடுகள் எல்லாத்தையும் கொண்டு போய் பக்கத்துக் காணியில மேய்க்கச் சொல்லுவா. நான் களைச்சுப் போய் வருவன். தேத்தண்ணி ஒன்டும் கிடையாது. வந்த கையோட மேய்க்கப் போயிருவன். மேய்க்கேக்க கவனமா மேய்க்க வேணும். பக்கத்து வளவுக்குள்ள ஆடுகள் போனால் மாமி அடிப்பா. கையில கிடைச்சதால அடிப்பா. என்ர கதையை யார் கேப்பினம், நான் என்ன செய்யிறது. எனக்கு மாமி வீட்டை இருந்து போகவேணுமென்ட வெறியாக இருந்தது.

இந்த நேரத்தில இயக்கத்துக்குப் போன அண்ணன் சண்டையில செத்துப் போனான் என்று சொல்லிச்சினம். பொடியும் வரேல்லயெண்டு சொல்லிச்சினம். நான் அழுது குழறினனான். 'அண்ணை நீயும் அம்மா மாதிரி எங்கள விட்டிட்டுப் போய்ற்றியே. ராவில அழுகிறதே எனக்கு வேலையாப் போய்ச்சு.

மாமியும் என்னை வேலை வாங்கிறதால பள்ளிக்குப் போக முடியாம இருந்தது. நான் பெரியம்மா வீட்டை போக

விரும்பினன். மாமியும் விட்டபாடில்லை. நானும் உங்களுக்குக் கதை சொல்லிச் சொல்லிக் கன நேரம் போட்டுது.

இந்த அமளிக்க அப்பா ஜெயிலில் இருந்து திரும்பி வந்திட்டார். நான் இருக்கிற மாமி வீட்ட வந்தவர். நான் மனம் தாங்காமல் அப்பாட்ட மாமி செய்யிற கொடுமையெல்லாம் அழுது கொண்டு சொன்னன். எனக்குக் கொஞ்சம் ஆறுதல் கிடைக்கமென்டு. அவர் என்னை ஒரு பார்வை பார்த்து விட்டுப் போனார். சீ..... இது ஒரு அப்பாவா? எனக்கு நாளும் பொழுதும் மாமாயிடமிருந்து போயிட வேணுமென்டு யோசித்துக் கொண்டு இருக்கேக்க அண்ணை போய் இருந்த இன்னொரு மாமி வந்து எனது கதையைக் கேட்டு "வாழ்வகத்தில்" என்னைச் சேர்த்து விடுவதாகக் கூறினார்.

எனக்கு அது ஒத்துவரவில்லை. அந்தச் சூழல் எப்பிடி இருக்குமோ? மனது பெரிதும் கஸ்ரப்பட்டது. கடவுளே என்னைப் பெரியம்மாவிடம் சேர்த்துவிடு. மனது ஓலமிட்டது.

பள்ளியில் எனக்குப் படிக்க முடியவில்லை. பள்ளி வருகையும் குறைவாக இருந்தது. எனது வகுப்பாசிரியர் அன்பானவர். ஒரு நாள் தனிமையில் என்னிடம் கதைத்தார். நான் அவருக்கு மனம்விட்டு, எனது கதையினைச் சொன்னேன். வாழ்வகத்தில் என்னைச் சேர்ப்பதற்கு மாமி திட்டமிடுவதகாவும், ஆனால் நான் பெரியம்மாவிடம் போய் இருக்க விரும்புவதாகவும் சொன்னேன்.

கரைச்சல் படுத்தி எழுப்பி என்னைத் தள்ளிக் கொண்டு போய் கிணத்தடியில தண்ணியைத் தொட்டிக்க ஊத்தி, பற்பொடி தந்து பல்லுத்தீட்டி முகத்தைக் கழுவி... எல்லாம் முடிஞ்சு நான் வரச் சுடச்சுட கோப்பி தந்து, அந்தக் கோப்பியக் குடிக்க எவ்வளவு ருசியாய் இருக்கும் தெரியுமோ!

அந்த ருசியான வாழ்க்கை சந்தோஷமான வாழ்க்கை சகோதரர்களோடு கதைத்துப் பேசி, பள்ளிக்கூடம் போய், வைரவர் கோயிலுக்கு முன்னால விளையாடி, காணி வெளியில பட்டம் விட்டு, விளாத்தி மரத்துக்குக் கல்லெறிஞ்சு அம்மா மடியில நித்திரை கொண்டு.....

எல்லாம் நடந்தது கொஞ்சக் காலம். அம்மா உயிரோடை இருக்கும்வரை. அம்மா செத்துப் போனாப் பிறகு வாழிற எனது வாழ்க்கை வால் அறுந்த பட்டம் மாதிரித்தான் எங்கேயோ போட்டுது. என்ர நிலை இப்பிடியாகிப் போய்ச்சு. என்ர நிலையை உங்களுக்குச் சொல்லுறன்.

எங்கட குடும்பம் பெரிய குடும்பந்தான். நான் அப்பா, அம்மா, அக்கா, அண்ணா, தம்பி, தங்கச்சி இவ்வளவு பேரும்தான். அப்பாவைத்தவிர நாங்கள் கஸ்ரமென்டாலும் வாறதக் கொண்டு சந்தோசமாத் தான் இருந்த நாங்கள். அம்மா சரியான கெட்டிக்காரி, பொறுமைசாலி. எங்கட குடும்பத்த நல்லாய் ஆளாக்க வேண்டுமென்டு சரியாக் கஸ்ரப்பட்டா. அம்மாக்கு நாங்கள் நல்ல ஒத்துழைப்புக் கொடுத்தம்.

அப்பா என்றா.......

அப்பாவைப் பற்றி என்னத்தைச் சொல்லுறது. வேலைக்குப் போறது ஒழுங்கில்லை. உழைச்சுக் கஸ்ரப் பட்டுச் சாப்பிடறதெண்டால் ஆளுக்கு விருப்பமில்ல. சும்மா ஆக்களோட ஊர்சுத்திறது. இருந்தாப்போல ராவில ஆள் காணாமப் போயிருவார். வந்த கையோட வாய்க்கு வந்தபடி பேசத் தொடங்கிவிடுவார்.

“எங்கையடி அம்மா போட்டாள்? ராத்திரி வீட்டில இருந்தவளர்? இஞ்ச ஆரும் வந்தவையோ?”

வாயில இருந்து கெட்டதாப் பேச்சு வரும். எனக்கு உடம்பெல்லாம் நடுங்கும். கடைசித் தங்கச்சி சின்னன், அவள் பயத்தில என்னைக் கட்டிப்பிடிச்சுக் கொண்டு நிப்பா. அண்ணை அக்கா தம்பி எல்லாம் அப்பாவைப் பார்த்து முறைச்சுக் கொண்டு நிப்பின.

இது ஒரு நாள் மாத்திரம் நடக்கிற கூத்தில்ல. எனக்கு ‘விளக்கம்’ தெரிஞ்ச நாளில இருந்து அப்பான்ர பிறவிக் குணம் இதுதான்.

அம்மாவைக் கண்டதும் அப்பாவைப் பார்க்க வேணுமே அடி... கையில கிடைக்கிறதத் தூக்கிக் கொண்டு ஓடுவார். அம்மா கிட்ட நெருங்கேக்க அடியும் விழும். அம்மா ‘ஐயோ’ என்று கத்துவா. அக்கா அண்ணாவை, துரத்திப் போய் அப்பாவை இழுத்து அம்மாவைக் காப்பாத்துவினம். அம்மா கத்திக் குளறுவா. “ஐயோ உந்த மனுசனுக்கு என்ன பிடிச்சிட்டுது? ஏன் உப்பிடிச் சந்தேகப்பட்டுக் கொண்டு திரியுது. ஒருத்தரும் வெளியில போகக் கூடாது. வேற ஆக்களும் வீட்டை வரக் கூடாது. உந்தாளைக் கட்டின நாள் தொடக்கம் நான் செத்துச் செத்துப் பிழைக்கிறன்.”

நாங்களும் வீட்டு மூலைக்கு மூலை இருந்து அழுவம். அண்டைக்கும் வழமை மாதிரி ராவில வெளிக்கிட்டுப் போய் திரும்ப வந்து பிரச்சனை. துரத்தி அம்மாக்கு அடிக்க வெளிக்கிட அம்மா ஓடினா. இவர் துரத்திக் கொண்டு போனார். அம்மாவும் ஓடினா. இவரும் விடேல.

நானும் தங்கச்சியும் அம்மாக்கு ஏதேனும் நடத்திடுமோ என்ற பயத்தில பின்னாலை ஓடினம். அம்மா ஓடிக் களைச்சுக் கிணத்தடியில தடக்கிக் கீழ விழுந்து தலை அடி பட்ட சத்தம் கேட்டது.

"என்ர ஐயோ"

எங்கட அம்மா தலை அடிபட்டதோட செத்துப் போனா. ஒரு மூச்சுப் பேச்சில்ல. அண்டைக்கெண்டு மற்ற ஆக்கள் வீட்டில இல்ல. அயலாக்கள் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போக, அண்ணை அக்கா வந்திட்டார்கள். ஒரே கத்தினார்கள். இனி என்ன செய்யிறது. ஆஸ்பத்திரியில விளக்கத்தில அம்மா மருந்து குடிச்சுச் செத்தது என்று சொல்ல, அவையள் நம்பேல்ல. அப்பாவைக் கொண்டு போய் ஜெயில்ல போட்டிட்டார்கள்.

எங்களுக்கு என்ன செய்யிறதெண்டு தெரியேல்ல. அம்மான்ரை அக்கா - பெரியம்மா தான் எங்களுக்கு உதவியா இருந்தா. அம்மா போனதோட எங்கட பள்ளிக் கூட வாழ்க்கையும் முடிஞ்சு போய்ச்சு.

வீட்டில உழைச்சுப் போட ஒருத்தருமில்ல. அப்பான்ர அக்கா - எங்கட மாமி இடையில ஒரு நாள்

வந்தா. எங்கட நிலையைப் பார்த்து சரியாப் பரிதாபப்பட்டா. அப்பாவைப் பேசினா. எங்களுக்கு ஆறுதல் சொன்னா. எனக்கு என்னமோ அவவில சரியான நம்பிக்கை வரேல்ல. என்னைப் பார்த்துப் பார்த்துத்தான் கதைச்சா.

கடைசியில எங்கட குடும்பம் யாரும் எங்களப் பார்க்க இல்லாத இடத்தில, ஒவ்வொருத்தரையும் ஒவ்வொரு பக்கமாய் தள்ளிவிட்டினம். பேரியம்மாவோட அக்காவும் தம்பியும் போச்சினம், மாமியோட என்னை அனுப்பிச்சினம். (மாமி என்னைக் கூட்டிக் கொண்டு போகவிடாப் பிடியா நிண்டா) அண்ணைய இன்னொரு மாமியிற்ற அனுப்பிவிட்டா. எங்கட குடும்பம் இப்ப துண்டு துண்டாப் போச்சு.

இங்க மாமி வீட்ட நான் நினைச்ச மாதிரி இல்லை. மாமி சரியாப் பொல்லாதவ. இங்க இப்ப நான் தான் வீட்டு வேலை செய்யிறது. இப்ப பாருங்கோ முழிச்சிற்றன். ராத்திரில சாப்பிட்ட தட்டெல்லாம் சட்டி பானையெல்லாம் நான் தான் கழுவவேணும். வீடு முத்தம் எல்லாம் கூட்டி முடிச்சு நான் பள்ளிக்கூடம் எப்படிப் போறது.

இதெல்லாம் மாமி, மாமா, மூன்று பிள்ளைகள் எழும்ப முன் நான் எழும்பிச் செய்யத் தொடங்கீருவன். வேலை செய்து கொண்டு இருக்கேக்க அம்மாவை நினைப்பன். அழுகை வரும். ராவில படுக்கேக்க கனவில அம்மா அடிக்கடி வருவா, இப்ப குறைஞ்சிட்டுது.

நான் ராவில அழுதுகொண்டு தான் படுப்பன். 'அம்மா பாத்தியளே என்ர நிலைமையை, நீங்கள் இருந்தால் இப்பிடி நடக்குமே. நான் இப்படிக் கஸ்ரப்

பட்டுக் கொண்டு இருக்க, அண்ணையும் அக்காவும் இயக்கத்துக்குப் போட்டினம். நான் கொஞ்ச நாளைக்குப் பிறகுதான் கேள்விப்பட்டனான். எனக்குக் கஸ்டமாப் போட்டுது. இந்த மாமியோட என்னால இருக்க ஏலாமல் இருந்தது. நான் பள்ளிக்கூடம் போகாமல் இருக்கிறது பெரியம்மா தெரிஞ்சு வந்து மாமியோட சண்டைபிடிச்சு பள்ளிக்கூடம் போக மாமி சம்மதிச்சது.

அவ நான் பள்ளிக்கூடத்தால வந்த பிறகும் என்னைச் சும்மா இருக்க விடேல்ல. வீட்டில வளர்க்கிற ஆடுகள் எல்லாத்தையும் கொண்டு போய் பக்கத்துக் காணியில மேய்க்கச் சொல்லுவா. நான் களைச்சுப் போய் வருவன். தேத்தண்ணி ஒன்டும் கிடையாது. வந்த கையோட மேய்க்கப் போயிருவன். மேய்க்கேக்க கவனமா மேய்க்க வேணும். பக்கத்து வளவுக்குள்ள ஆடுகள் போனால் மாமி அடிப்பா. கையில கிடைச்சதால அடிப்பா. என்ர கதையை யார் கேப்பினம், நான் என்ன செய்யிறது. எனக்கு மாமி வீட்டை இருந்து போகவேணுமென்ட வெறியாக இருந்தது.

இந்த நேரத்தில இயக்கத்துக்குப் போன அண்ணன் சண்டையில செத்துப் போனான் என்று சொல்லிச்சினம். பொடியும் வரேல்லயெண்டு சொல்லிச்சினம். நான் அழுது குழறினனான். 'அண்ணை நீயும் அம்மா மாதிரி எங்கள விட்டிட்டுப் போய்ற்றியே. ராவில அழுகிறதே எனக்கு வேலையாப் போய்ச்சு.

மாமியும் என்னை வேலை வாங்கிறதால பள்ளிக்குப் போக முடியாம இருந்தது. நான் பெரியம்மா வீட்டை போக

விரும்பினன். மாமியும் விட்டபாடில்லை. நானும் உங்களுக்குக் கதை சொல்லிச் சொல்லிக் கன நேரம் போட்டுது.

இந்த அமளிக்க அப்பா ஜெயிலில் இருந்து திரும்பி வந்திட்டார். நான் இருக்கிற மாமி வீட்ட வந்தவர். நான் மனம் தாங்காமல் அப்பாட்ட மாமி செய்யிற கொடுமையெல்லாம் அழுது கொண்டு சொன்னன். எனக்குக் கொஞ்சம் ஆறுதல் கிடைக்கமென்டு. அவர் என்னை ஒரு பார்வை பார்த்து விட்டுப் போனார். சீ..... இது ஒரு அப்பாவா? எனக்கு நாளும் பொழுதும் மாமாயிடமிருந்து போயிட வேணுமென்டு யோசித்துக் கொண்டு இருக்கேக்க அண்ணை போய் இருந்த இன்னொரு மாமி வந்து எனது கதையைக் கேட்டு "வாழ்வகத்தில்" என்னைச் சேர்த்து விடுவதாகக் கூறினார்.

எனக்கு அது ஒத்துவரவில்லை. அந்தச் சூழல் எப்பிடி இருக்குமோ? மனது பெரிதும் கஸ்ரப்பட்டது. கடவுளே என்னைப் பெரியம்மாவிடம் சேர்த்துவிடு. மனது ஓலமிட்டது.

பள்ளியில் எனக்குப் படிக்க முடியவில்லை. பள்ளி வருகையும் குறைவாக இருந்தது. எனது வகுப்பாசிரியர் அன்பானவர். ஒரு நாள் தனிமையில் என்னிடம் கதைத்தார். நான் அவருக்கு மனம்விட்டு, எனது கதையினைச் சொன்னேன். வாழ்வகத்தில் என்னைச் சேர்ப்பதற்கு மாமி திட்டமிடுவதகாவும், ஆனால் நான் பெரியம்மாவிடம் போய் இருக்க விரும்புவதாகவும் சொன்னேன்.

அவர் என்னை ஆறுதல்படுத்தினார். எனக்கு அவர் உதவுவதாகச் சொன்னார். நான் மீண்டும் படிக்க விரும்புவதாகச் சொன்னேன். நான் ஒழுங்காகப் பள்ளிக் கூடம் போயிருந்தால் இப்ப 6ம் ஆண்டு படிப்பன். இப்ப இடையில நிக்கிறன். அவர் என்னை அமைதிப் படுத்தினார். பல தடவைகள் ஆறுதல் சொன்னார். இந்த நேரம் இயக்கத்துக்குப் போன அக்கா இயக்கத்தை விட்டு வீட்டுக்கு வந்திருப்பதாகக் கேள்விப்பட்டேன்.

மனதில் மகிழ்ச்சி. ஆசிரியரிடம் சொன்னேன். அக்கா என்னைப் பார்க்க வந்தா. நான் அக்காவைக் கட்டிப் பிடிச்சுக் கொண்டு அழுதேன்.

"அக்கா என்னை உன்னோட கொண்டுபோ. நான் இனியும் இங்க இருக்க மாட்டன்" எனது ஆசிரியரும் என்னுடைய நிலைமையை அக்காவுக்குச் சொன்னார்.

"ரீச்சர் இனி பிரச்சனை இல்லை. நாங்கள் சகோதரர்கள் இனி ஒன்டா இருப்பம். நான் இவையளை வைச்சுப் பார்த்துக் கொள்ளுவன். இனி என்ர சகோதரர் களைக் கஸ்ரப்பட விடமாட்டன். நான் ஏதேனும் உதவி தேவைப்பட்டா உங்களோட வந்து கதைப்பன்.

எங்க அப்பான்ர பொறுப்பில்லாத நடத்தையால தான் இவ்வளவும் நடந்தது இனி கஸ்ரப்பட்டு நான் குடும்பத்தப் பார்ப்பன். இவையும் படிக்க ஒழுங்காப் பள்ளிக் கூடத்திற்கு அனுப்புவன். பெரியம்மாவும் இதைத்தான் விரும்பிறா". நான் அக்காவை அணைத்தபடி நின்றேன்.

# எனக்குள் ஒருவன்

இரவு நேரம் பெரியம்மா கொடுத்த ஏதோ ஒன்றைச் சாப்பிட்டு விட்டு படுக்கைக்குச் செல்கின்றேன். நீண்ட நேரமாக நித்திரை வராததால் கொட்டக் கொட்ட விழித்த படி சிந்திக்கின்றேன். அவன் வருகின்றான். அன்று மாலை நான் பெரியம்மா மாவிடிக்கும் போது மண்ணை அள்ளி வீசுகின்றேன். அதற்கு அவள் அடிக்கின்றாள். என் கோபத்தை என்னால் கட்டுப்படுத்த முடியவில்லை. தேடுகின்றேன். அவளுக்கு மிகவும் முக்கியமான அது என் கண்களில் தெரிகின்றது. உடனே அதை எடுத்துக் கிணற்றினுள் போடுகின்றேன். அப்போது என் மனம் நிம்மதி பெறுகின்றது. இப்போது அவன் மறைகின்றான்.

இந்த வயதில் எல்லோராலும் பாராட்டப்படும் வகையில் அல்லவா நான் நடந்து கொள்ள வேண்டும். பெரியம்மா என் கண்முன்னே வருகின்றாள். வெற்றிலை குதப்பியவாயும், சிறிய குடுமியும் மெலிந்த தோற்றமும்,

**தமயந்தி**

என்னேரமும் அழுக்குப் படிந்த உடையும். இந்தத் தோற்றம் தான் எனக்குச் சகிக்க முடியவில்லை. எனது அப்பாவும் அம்மாவும் அனுப்பும் பணத்தை வட்டிக்குக் கொடுப்பது, சாமான்களை எல்லோருக்கும் பங்கிட்டு முடிப்பது என்னையும் என் தங்கையையும் சதா நேரமும் கரிச்சிக் கொட்டுவது மட்டும் தான் தெரியும். தீபன் மட்டும் அவவுக்கு நன்றாய்ப் பிடிக்கும்.

இப்போது என் மனம் சற்று ஆறுதலடைகின்றது. அருகில் தூங்கிக் கொண்டிருக்கும் என் தங்கையை ஒரு தடவை தடவிப் பார்க்கின்றேன். அவள் எந்தச் சலனமும் இல்லாமல் அமைதியாகத் தூங்குகின்றான். பாவம் நாளை தீபனால் அவளுக்கு என்ன பிரச்சினைகள் ஏற்படப் போகின்றனவோ? என் கண்களை மூடிக் கொள்கின்றேன்.

மறுநாள் காலை பொழுது புலருகின்றது. பறவை களின் ஒலிகளைக் கேட்டு இரசிப்பதற்குக் கூட முடிய வில்லை. பெரியம்மாவின் வானொலிப் பெட்டியின் அலறல் தான் பெரிதாகக் கேட்கும். என் உள்ளிருந்து அவன் மீண்டும் வருகின்றான். கண்டறியாத பாட்டு என்ன வேண்டிக்கிடக்கு. சாகப் போற வயதில் சக்தி F.M. என்னுடைய அப்பாவையும் அம்மாவையும் எவ்வளவு கரைச்சல் படுத்தி இந்தப் பெரிய வானொலிப் பெட்டியை வாங்கினா. ஆனால் நானும் தங்கையும் அதைத் தொடக் கூடாதாம். தீபன் மட்டும் எந்நேரமும் கிறுக்குவான். இப்போது அதைப் போட்டு உடைக்க வேண்டும் போல் படுகிறது.

மீண்டும் அவன் மறைகிறான். எனது வழமையான நடவடிக்கைகளைச் செய்து விட்டுப் பாடசாலை செல்லப் புறப்படுகின்றேன். எனது சப்பாத்தினை எடுப்பதற்காகக் கட்டிலின் கீழ்க் குனிந்து பார்க்கின்றேன். அந்த இடம் வெறுமையாகக் காணப்படுகின்றது. எனது வெளிநாட்டுச் சப்பாத்துச் சோடியைக் காணவில்லை. சென்ற மாதம் தான் எனக்கும் தங்கச்சிக்கும் அம்மாவும் அப்பாவும் சாப்பாத்துக்கள் அனுப்பினார்கள். அதில் தீபனுக்கு ஒரு கண். நான் அதை மறைத்து வைத்தும் பலனில்லை. என்னுள் கோபம் வருகின்றது. பெரியம்மாவிடம் கேட்கின்றேன். ஏன்டா உனக்கு அந்தச் சப்பாத்துத்தான் தேவையா? பழசைப் போட்டுக் கொண்டு போனால் என்ன தேய்ந்தா போய்விடுவாய்? ஒழுங்காகப் படிக்கத் தெரியாது; பள்ளிக் கூடத்திலும் இதே அடாவடித்தனம்; வீட்டிலும் இதே குணம் தான். அம்மையும் அப்பனும் வெளிநாட்டில் என்ற கொழுப்பு உனக்கு. நான் பெரியம்மாவை முறைத்துப் பார்க்கின்றேன். அவவுக்கு என்னைப் பிடிக்கவில்லைப் போலும். என் காதைப் பிடித்து ஆட்டுகிறாள். டேய்! நீதானே என் பாக்கு வெட்டியை நேற்று எடுத்தாய்? இன்று என்கைக்கு அது வராவிட்டால் மதியம் உனக்குச் சாப்பாடு போட மாட்டேன். உன்னைக் கொன்று போடுவேன். நீயும் அவளும் சேர்ந்து என்ன பாடு படுத்துகின்றீர்கள். நிம்மதியே போயிற்று. என்னதான் உனக்கு ரீச்சர் படிப்பிக்கின்றாவோ?

ரீச்சரைப் பேசியதைக் கேட்டதும் அவன் மீண்டும் எட்டிப் பார்க்கின்றான். ஏய் கிழவி என் ரீச்சரைப் பற்றி பேசாதே. அதற்கு உனக்கு உரிமையோ, யோக்கியதையோ கிடையாது. நான் எவ்வளவு குழப்படி செய்தாலும்

அவ என்னுடன் அன்பாகவும், ஆதரவாகவும் நடந்து கொள்வா. ஆனால் நான் தான் என் முரட்டுத்தனத்தைக் காட்டுகின்றேன். சென்றவாரம் கூட என்னைத் தனியாக அழைத்துக் கொஞ்சம் கதைத்தா, சித்திரம் வரைய விட்டா. அப்போது என் மனம் எவ்வளவு சந்தோஷம் அடைந்தது தெரியுமா? இன்னம் என்னுடன் கதைக்கப் போவதாகவும், ஏதோ தூண்டிலும் மீனும் விளையாட்டு விளையாடுவம் என்றும் கூறினா. இன்றைக்காவது நான் நல்லபடியாக வகுப்பறையில் நடந்து கொள்ள வேண்டும். அப்போது தான் அவவுக்கு என்மீது விருப்பம் வரும்.

மீண்டும் நான் பெரியம்மா வழமையாகக் கொடுக்கும் இரண்டு உப்பு வடைகளுடன் பாடசாலையை நோக்கிச் செல்கின்றேன்.

பாடசாலையை அடைந்ததும் ரீச்சர் இன்முகத்துடன் "குட் மோனிங் கௌஜன்" என எனக்குக் காலை வணக்கம் கூறுகின்றார். நான் கொஞ்சம் சிரிக்கின்றேன். மீண்டும் அவன் நினைக்கின்றான் இந்த ரீச்சருக்கும், சக மாணவர் களுக்கும் எவ்வளவு துன்பத்தைக் கொடுக்கின்றேன். ஆனால் ஒரு நாள் கூட அவ எனக்கு அடித்ததில்லையே! தொல்லை தாங்க முடியாமல் தானோ? என்னுடன் தனியாகக் கதைக்க வந்தவ!

வழமையான அடாவடித்தனங்களுடன் அன்றைய பாடசாலைப் பொழுது கழிகின்றது. நான் என்றால் வகுப்பிலை எல்லோருக்கும் சரியான பயம். எவரும் என்னுடன் சண்டைக்குப் போட்டி போட முடியாது.

எங்கள் வகுப்புக் கலைகிறது. ரீச்சர் என்னை நிற்கும் படி கூறுகின்றா. மீன்பிடி விளையாட்டு எப்படி இருக்கும் என்ற சிந்தனையில் வழமையாக நாங்கள் உரையாடும்

அந்த மாமர நிழலினைத் தேடிச் செல்கின்றேன். ரீச்சர் தூண்டில் ஒன்றுடனும் பெட்டி ஒன்றுடனும் வருகின்றா. இருவரும் அமருகின்றோம். வழமையாக ரீச்சர் என்னுடன் உரையாடுவது போல் உரையாடுகின்றார். என் மனதில் ஒரு அமைதியும், தெளிவும் வருவது போல் உணர்கின்றேன்.

பின்னர் மீன் பிடி விளையாட்டுப் பற்றி எடுத்துக் கூறுகின்றார். எனக்குள் இருப்பவன் மிகவும் குதூகலத்துடன் வருகின்றான். நல்ல சந்தர்ப்பம் பெரியம்மா மீனையும், தம்பி தீபன் மீனையும் கட்டாயம் அழுக்கு நீரில் தான் போடுவேன். அம்மா மீனையும், அப்பா மீனையும் தங்கச்சி மீனையும் நல்ல தண்ணிக்குள்ள போட வேண்டும். ரீச்சர் மீனும் இருந்தால் அவவையும் நல்ல தண்ணிக்குள் போட வேண்டும். ஒவ்வொன்றாக நான் நினைத்தபடி போட்டு விட்டு நிம்மதியாக மூச்சை விடுகின்றேன் இப்போது என்னுள் ஒரு திருப்தி ஏற்படுகின்றது.

ரீச்சர் : - தீபனுக்கு ரீச்சரிலையும் நல்ல விருப்பம் போல!

ஓம் ரீச்சர்

ரீச்சர் : - அப்போ பெரியம்மா? ரீச்சர் முடிக்க வில்லை. மீண்டும் அவன் பற்களைக் கடித்தபடி வருகின்றான். ரீச்சர் எனக்கு அவவிலை விருப்பம் இல்லை. தீபனிலையும் விருப்பமில்லை. எங்கடை அம்மாவும் அப்பாவும் இவவை நம்பித்தானே எங்களை ஒப்படைத்தவை. எந்த நேரமும் எங்களைப் பேசுகிறா, அடிக்கிறா, எங்களுக்கு வரும் சாமான்களையும்,

உடுப்புகளையும், காசுகளையும் சித்தி வீட்டிற்குக் கொடுக்கின்றா. ஏன் தீபனின் அப்பா அம்மாவும் வேலைக்குப் போகின்றார்கள் தானே! பெரியம்மாவிற்கு தீபனிலை மட்டும் தான் விருப்பம். அவன் தங்கச்சியையும் ஒரே அடிப்பான். இதை நான் எப்படிப் பார்த்துக் கொண்டிருக்க முடியும்? அதுதான் பெரியம்மாவின் பாக்கு வெட்டியை நேற்றுக் கிணற்றிற்குள் போட்டு விட்டேன். அதைத்தேடி எடுக்க முடியாது தானே.

எனக்குச் சரியான சிரிப்பு ரீச்சர். போன கிழமை பெரியம்மாவின் முடிமயிரையும் தீபனின் செருப்பு ஒன்றையும் குப்பையில் வீசி விட்டேன். மூன்று நாட்களுக்குப் பின்னர் தான் "இந்தப் பாழாய்ப் போன நாய் (ஜிம்மி) ஒன்றையும் விட்டு வைக்காது" என்று சொல்லி எடுத்தவ. நான் ஒவ்வொரு விடயத்தையும் கூறி முடிக்கின்றேன். ரீச்சரும் ஏதோ எல்லாம் அன்பாய்க் கூறிக்கொண்டிருந்தார். என் மனம் இப்போது வீட்டிற்குச் சென்று பெரியம்மாவினால் ஏற்படும் நெருக்கீட்டைப் பற்றி யோசிக்கின்றது.

இருவரும் அடுத்தவாரமும் சந்திப்பதாகக் கூறி விடைபெறுகின்றோம்.

நான் எனது வீட்டை நோக்கி நடக்கின்றேன். ரீச்சர் கூறிய வார்த்தைகள் எனக்கு ஆறுதலாக இருந்தாலும் அவன் நினைக்கின்றான். அம்மா வரும்வரைக்கும் பெரியம்மாவிற்கும் தம்பிக்கும் இனிமேலும் என்னென்ன செய்யலாம்... என்று....?

# கருகிக் (கருக்கப்பட்டுக்) கொண்டிருக்கும் பூக்களில் ஒன்று

வண்ண வண்ணப் பூக்களால் நிறைந்த அந்தப் பூஞ்சோலையில் சுருதி ஒவ்வொரு பூவாய்ப் பார்த்துப் பார்த்து இரசித்துக் கொண்டு வருகிறாள். "ஆ... எவ்வளவு வடிவு? எத்தனை நிறங்கள்? எவ்வளவு மென்மை? நான் நினைச்சு வைத்திருந்தது போலவே இருக்கே. ஒரு பூவைப் பிடுங்கிப் பார்க்கலாம் தான் வேண்டாம், பாவம்; பார்த்துக் கொண்டு போவம்" என மனதுள் எண்ணிக் கொண்டாள். அங்கே வீசும் தென்றலையும், அழகிய பூக்களையும் இரசித்துக்கொண்டு வந்த சுருதி பாதையைப் பார்க்காமல் வந்ததால் பூக்கன்று நடுவதற்கு வெட்டப்பட்ட குழியினுள் விழுந்து விட்டாள். "ஆ..... ஐயோ..... அம்மா..... என்ர..... கால் ஐயோ.... அம்மா......?

"ஏய்... சுருதி.... சுருதி.... எழும்பு என்னடி? ஏன் கத்துறாய்....? கண்ணை முழிச்சுப்பார். இங்கை கண்ணைத்

**சுதர்சினி**

திற. முழிச்சுப்பாரனடி ஒருக்கா. கால் கால் எண்டு கத்தினா எனக்கு என்ன தெரியப் போகுது?" என்ற சித்தியின் அதட்டலில் கண்ணை விழித்து அங்கும் இங்கும் பார்த்து மலங்க மலங்க விழிக்கிறாள். தங்கள் வீட்டுக்குள் தான் இருப்பதை அறிந்து சித்தியின் முகத்தைப் பார்க்கிறாள். அவவின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிப்பதை உணர்ந்த சுருதி மெல்லக் கண்களை மூடினாள்.

"என்னடி? கனவு கண்டனியோ? முழுசி முழுசிப் பார்த்திட்டுக் கண்ணை மூடினா எனக்கெங்கை தெரியப் போகுது. வாயைத் திறந்து சொல்லன். நடுச் சாமத்தில நித்திரைக் குறையில கத்தி எழுப்பிப் போட்டு வாயை மூடிக் கொண்டு பேசாமற் கிடந்தால்?" என்ற சித்தியின் அதட்டலுக்கு என்ன பதில் சொல்வது என்று புரியாத சுருதி ம்.....ம்..... என்று முனகியவாறு திரும்பிப் படுக்கிறாள்.

அவளுக்கு என்ன செய்வது என்று புரியவில்லை. நடந்தவையும் விளங்கவில்லை. ஒரே பயமாக இருந்தது. தலையணையை இறுக்கிப் பிடித்துக் கொண்டு கண்ணை இறுக்கி மூடினாள். கண்ணுக்குள் அவள் தந்தை தாயுடன் வாழ்ந்த அந்த இனிமையான வாழ்க்கை வீடியோப் படமாக ஓடுகிறது. அவர்கள் தான் விரும்பியவற்றை வாங்கிக் கொடுப்பதும் சைக்கிளில் ஏற்றிக் கொண்டு செல்வதும், அம்மாவுடன் பாடசாலைக்குச் செல்வதும், இரவில் அம்மாவை அணைத்தவாறு தூங்குவதும், பிறந்த நாளிற்குச் சித்தப்பா வாங்கித் தந்த புதுக்குடையும்

அப்பாவுடன் கோவிலுக்குப் போனபோது தண்ணீர்த் துவக்கு வாங்கி எல்லோருக்கும் அடித்ததும்.... ம்.... இனி என்ன செய்வது. ஏன் ஏன்ர அப்பா அம்மாவுக்குத்தான் இப்படி விபத்து நடந்தது. எல்லோரும் மோட்டார் சைக்கிளில் போயினம் தானே. என்ர அப்பா, அம்மா மட்டும் ஏன் இறந்தவர்கள்..." என எண்ணியவாறே அழுதழுது உறங்கிப் போனாள்.

ஏதோ சத்தம் கேட்டுத் திடுக்கிட்டுக் கண்ணை விழிக்கிறாள். சித்தி முத்தம் கூட்டிக் கொண்டு நிற்கிறா. இவள் எழும்பியதை உணர்ந்த சித்தி "சுருதி கெதியாய் வீட்டைக் கூட்டிப் போட்டு ஆடுகளைக் கொண்டு போய்க் காணிக்கை கட்டு. தம்பிக்கும் இன்டைக்கு நீதான் குளிக்க வார்க்கவேணும். என்னடி மசுந்திக் கொண்டு நிற்கிறா. திண்டு திண்டு ஆள் வளந்தது தான் மிச்சம். ஒரு பிரயோசனமும் இல்லை" என்ற சித்தியின் பாராட்டுக் களைக் கேட்டபடி இயந்திர கதியில் இயங்குகிறாள். இடையில் விழித்ததால் கண்கள் இரண்டும் நெருப்பாக எரிந்தது. சித்தி சொன்ன திண்டு திண்டு வளர்த்தது அவள் நெஞ்சைப் பிசைந்தது. அவளுக்கல்லவா தெரியும் அவளுக்குக் கொடுக்கும் உணவின் தரம். ம்... நேரம் போட்டுது. நிற்க நேரமில்லை. ஓடி ஓடி எல்லா வேலைகளையும் செய்து முடித்துத் தம்பிக்கும் குளிப்பாட்டி, தானும் குளித்துவிட்டு வந்து பார்த்தபோது நேரம் 8.20. இன்னும் பத்து நிமிடத்தில் சாப்பிட்டுப் போக

வேணும் என எண்ணிய வாறு சாப்பிடச் செல்கிறாள். சித்தி கொடுத்த பாதி ரொட்டியையும் அவசர அவசரமாகச் சாப்பிட்டு விட்டு புத்தகப்பையையும் தூக்கிக் கொண்டு வேகமாக ஓடுகிறாள். பாடசாலையில் ஆரம்ப மணி அடித்துக் கேட்கிறது. "சரி... கேற் பூட்டப் போகிறார்கள். நேற்றும் நல்ல அடி இண்டைக்கும் அடிதான்" என எண்ணிக் கொண்டு பாடசாலையுள் நுழைகிறாள். அங்கு தாமதமாக வந்தோர் வரிசையில் அவள் இன்றும்.....

# பிறழும் நெறிகள்

அவர்கள் அவனைப் பார்த்த பார்வைகள் இன்னும் அவனது உடம்பில் ஈக்களாயும் எறும்புகளாயும் மொய்த்துக் கிடந்தன.

அப்படி என்னதான் விசித்திரமாய்ப் பார்க்கிறார்கள்? அவனது வகுப்பிலே ஸ்ரீதரனைப் 'பிரின்சிப்பலு'க்குத் தெரியும். அவன் ஒவ்வொரு தவணையும் எப்படியோ முதலாம் பிள்ளையாக வந்து விடுகிறான். இவ்வளவு பாடங்களையும் வரி தவறாமல் நினைவில் வைத்துக் கொள்கிறான். தவணை முடிவில் நடக்கும் 'அசெம்பிளியில்' மேடையில் ஏறிப் 'பிரின்சிப்பலி'டம் 'றிப்போர்ட்' வாங்குகிறான். எல்லோரும் கை தட்டுவார்கள். இவன் மட்டும் தட்ட மாட்டான்.

## கோகிலா மகேந்திரன்

"சரியான சப்பல் கட்டை! அவனை என்ன பாராட்டுறது?"

சிலவேளைகளில் இவனும் அவனும் ஒன்றாக நடந்து செல்லும் போது, 'பிரின்சிப்பல்' ஸ்ரீதரனைப் பார்த்துச் சிரிக்கிறார். அவனது முதுகிலே தட்டி,

"இப்ப என்ன பாடம் தம்பி?" என்று கேட்கிறார். மற்றவன் கோபி! அவனையும் 'பிரின்சிப்பலுக்கு' நல்ல நினைவு. அவன் அதிகமாக விளையாட்டுப் போட்டிகளில், அவர்களது பிரிவில் 'சாம்பியனாக' வந்து விடுகிறானே!

வெளியே துருத்திக் கொண்டிருக்கும் பற்களுடன், அவன் எவ்வளவு வேகமாக ஓடுகிறான்?

சிறுத்தை ஓட்டம்!

இவன் பல தடவை கோபியுடன் ஓடிப் பார்த்திருக்கிறான். அவனைப் பிடிக்க முடிவதென்ன? கிட்டவே போக முடியவில்லை!

சும்மா பாய்ந்து பாய்ந்து ஓடுவான்!

சென்ற வருடம் உயரம் பாய்தலில் ஒரு புதிய சாதனையை நிலைநாட்டினானாம். அடுத்த நாள்... அதற்கடுத்த நாள்... எல்லாரும் வகுப்பில் அவனது புகழையே பாடிக் கொண்டிருந்தார்கள்.

"கோபி என்ன மாதிரிப் பாய்ந்தான்... என்ன மச்சான்?"

"டேய்... அவன் கடைசியா இரண்டு தரம் தட்டிப் போட்டான். பிறகு, குளுக்கோசையும் போட்டிட்டுப் போய்.... அப்பிடியே சர்க்கஸ்காரன் மாதிரியெல்லோ பாய்ந்தான்?"

"நீ ஐஞ்சு மணி வரையும் நிண்டு பாத்தனியோ?"

"ஓமடா... 'றெக்கோட்' எண்ட உடனை நாங்கள் உவனைத் தூக்கிக்கொண்டு திரிஞ்சு... பெரிய முகப்பாத்தியடா..."

"டேய்.... இவன் 'றெக்கோட்' உடைச்சிட்டான் எண்ட உடனை பாரதி இல்லத்தாக்களுக்குச் சரியான எரிச்சல் வந்திட்டுதடா...."

இவனுக்கு ஏற்பட்ட உணர்வுகளுக்கு உதாரணிக்க ஒன்றுமில்லை.

"பெரிய கெட்டித்தனம் மதில் பாயிற மாதிரிப் பாயிறது..." இவனை ஒருவருக்கும் தெரியவில்லை. 'பிரின்சிப்பல்' ஒரு நாளும் இவனோடு கதைக்கவில்லை. இவனது கண்களில் தீவிரம் எரிந்தது!

கண்ணன் கூடப் படிப்பிலே 'மொக்கு'த் தான். சரியான தூங்காளி! வகுப்பில் என்ன பாடம் நடந்தாலும் நித்திரையாகிப் போவான். ஆனால் அவனையும் எல்லாருக்கும் தெரிந்திருக்கிறது. அன்றொரு நாள், இவனும் கண்ணனும் விளையாடிக் கொண்டிருக்கும் போது, 'வைஸ் பிரின்சிப்பல்' கண்ணனைக் கூப்பிட்டு,

"கண்ணன் இஞ்சை வாரும், கன்ரீனுக்குப் போய் ஒரு ரீ வாங்கிக் கொண்டு வாறீரா?" என்று கேட்டு இரண்டு ரூபாத்தாளைக் கொடுக்கிறார்.

இவனை அப்படி ஒரு வேளை செய்விப்பதற்குக் கூட ஒரு ஆசிரியர்களும் கூப்பிடுகிறார்களில்லை.

ஏன்...?

கண்ணன் அதிகமாகக் காலையில் தேவாரம் படிப்பான். வெள்ளிக்கிழமைகளில் சிவபுராணம் சொல்லிக் கொடுப்பான். ஆனால் இவனுக்குப் பாடவராது

"வாய் திறந்தால் கழுதை கத்தினது போல் இருக்கும்..." என்று சமயபாட ஆசிரியர் ஒரு நாள் கூற, எல்லாரும் விழுந்து விழுந்து சிரிக்கிறார்கள்.

"சிரிச்சால் எல்லாருக்கும் என்ன பெரிய குயில் போலை குரலே?"

நுணுக்கங்கள் நிறைந்த மனம், நுணுக்கங்கள் நிறைந்த துன்பத்தை இவனுக்கு நீண்ட காலமாகவே கொடுத்துக் கொண்டிருந்தது.

சரி பரவாயில்லை. இப்போது மீனா 'பிரின்சிப்பலிடம்' போயிருக்கிறாள். இன்னும் சிறிது நேரத்தில் 'பிரின்சிப்பல்' இவனைக் கூப்பிடுவார்.

இனிமேல் அவனை எல்லோருக்கும் நிச்சயமாயும் நிஜமாயும் தெரிந்துவிடும். பிரின்சிப்பலுக்கும், ஆசிரியர்கள் எல்லாருக்கும், ஏனைய வகுப்பு மாணவர்களுக்குந் தான்.

ஆனால்....!

இவர்கள் எல்லாம் என்ன அப்படி விசித்திரமாய்ப் பார்க்கிறார்கள்?

அவனது அடி வயிற்றில் இருந்து, வேகமாக ஏதோ ஒன்று உச்சியை நோக்கி எழுந்து செல்கிறது.

மீனா ஏன் கிளாஸ் ரீச்சரிட்டைப் போய்ச் சொல்லேல்லை? அது புது ரீச்சர் ஒருத்தருக்கும் அடிக்க மாட்டா. எல்லாரோடையும் அன்பாத்தான் கதைப்பா. அவட்டைச் சொன்னா... எனக்கு அடி விழுறது ஐமிச்சம் எண்டுதான் பிரின்சிப்பலிட்டைப் போய் இருக்கிறாள்.... போகட்டும்! பிரின்சிப்பலின்ரை அடிக்கு நான் என்ன பயமே?

அவன் தனக்குள் கறுவிக் கொண்டான்! ஒருத்தியால் இவ்வளவுதான் இளைக்க முடியும். இவ்வளவுதான் கறுக்க முடியும் என்பது போல் இருப்பாள் மீனா. வீட்டிலே வறுமை, ஆனாலும் படிப்பிலே... சூரி.....!

அவன் எதிர்பார்த்தபடியே, 'பியோன்' வகுப்புக்கு வந்து அவனை அழைத்தான்.

"வசந்தனைப் 'பிரின்சிப்பல்' வரட்டாம்!"

"அப்பாடி! இண்டைக்காவது பிரின்சிப்பல் என்ரை பேரைச் சொல்லிப் போட்டார்!"

அவனது மனதின் மூலையொன்றில், லேசான பயம் தோன்றியிருந்தாலும் பெருமளவு திருப்தியே உள்ளூர வியாபித்திருந்தது.

'இனி யெண்டாலும்... வசந்தன் எண்டால் ஆரெண்டு பிரின்சிப்பலுக்குத் தெரியும்...'

அவன் தயங்காமல்.... ஒரு மகாவீரன் போலப் 'பியோனாக்குப்' பின்னால் நடந்தான். என்ன பயம்?

வாழ்க்கையின் துயரங்கள் அவனது முகத்திற்கும் வந்திருந்ததைப் 'பிரின்சிப்பல்' கவனித்ததாகத் தெரிய வில்லை.

இந்த விசாரணையை மிக விரைவாக நடத்தி முடித்துத் தண்டனையையும் வழங்கி விட்டால், தான் அடுத்த அலுவலைப் பார்க்கலாம் என்பதிலேயே அதிபர் குறியாக இருந்தார்.

"வசந்தன்... கெதியா வாடா உன்னை....!" குரலில் கசப்பும், அவசரமும், அலட்சியமும் ததும்பி நின்றன. உதட்டோரம் ஏளனம் சுழித்து நின்றது.

அவன் போய் அவருக்கு முன்னால் நின்றான். மறுப்பக்கத்தில் மீனா நிற்பதை, இரத்தம் ஒழுக நிற்பதை அவன் கடைக்கண்ணால் பார்த்து விட்டுப் பின்னர் கீழே நிலத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

பிடிவாதத்தை உணர்த்தும் அவனது மெல்லிய உதடுகளைக் கவனிக்காமலே அவர் கேட்டார் :

"யார் இந்தப் பிள்ளைக்குப் பிளேட்டாலை வெட்டினது?"

"எனக்குத் தெரியா சேர். நான் காணேல்லை" ஏன் உடனே உண்மை சொல்ல வேண்டும்? இவர் கொஞ்ச நேரம் செலவழித்து விசாரிக்கட்டுமே!

"என்ன...? உனக்குத் தெரியாதோ? நீ தான் வெட்டினது எண்டு அந்தப் பிள்ளை சொல்லுது..."

"அவ சொல்லுறது கட்டாயம் உண்மை எண்டால்... பிறகு ஏன் என்னைக் கேட்டனீங்கள்?"

அவர் திரும்பி மீனாவைப் பார்த்தார்.

"இவன் தான் சேர்! பரிமளா, கலா, பானு... எல்லாரும் கண்டவை. நீங்கள் வேணுமெண்டால் அவையையும் கூப்பிட்டுக் கேளுங்கோ சேர்..."

பரிமளா வந்தாள். கோணலான உதடுகளுடன்! "இவன் எப்பவும் பின்னாலை இருந்து மீனாவோடை சேட்டை விடுறவன் சேர். பின்னலைப் பிடிச்சு இழுப்பான். பட்டம் சொல்லுவான். யூனிஃபோமுக்கு மை தெளிப்பான். இண்டைக்கும் முதல் யூனிஃபோமிலை வால் கட்டித் தொங்க விட்டவன்... இவள் திரும்பி 'என்ன...? நீ விட விட ஆகலும் சேட்டை விடுறாய், தெரியுமோ என்னைப் பற்றி...' என்று வெருட்டினாள். இவன் உடனை தன்ரை கொம்பாஸ்க்குள்ளை கிடந்த பிளேட்டை எடுத்து அவளின்ரை கையைச் 'சதக்' எண்டு வெட்டிப் போட்டான்."

பானு வந்து சொன்னாள்,

"நானும் கண்டனான் சேர். நான்தான் பிறகு என்ரை லேஞ்சியாலை இவளின்ரை கையைக் கட்டி விட்டனான்..."

அதிபர் இதன் பின் தாமதிக்கவில்லை!

"பத்தாம் வகுப்புக்கு வந்திட்டாய்! பொம்பிளைப் பிள்ளையளோடை என்ன சேட்டையடா உனக்கு? ம்... இதை விட்டா நீ நாளைக்கு வாளும் கொணந்து வெட்டுவாய்... என்ன...?"

தனது 'ஸ்பெஷல்' பிரம்பால் காலிலும், கையிலும், முதுகிலும் மாறி.... மாறி.....

இவன் நெளிந்தான். வளைந்தான். ஆனால் அழவில்லை. வாயிலிருந்து ஒரு சத்தமுமே வரவில்லை. ஒவ்வொரு முறையும் அவர் பிரம்பை ஓங்கும் போது, அதைத் தடுக்கும் முயற்சியாய்க் கையால் மறித்தவன் நாலு அடிகள் விழுந்தவுடன் எட்டித் தொங்கிப் பிரம்பைப் பறித்துக் கொண்டான்.

அதிபர் விக்கித்துத் தான் போனார்! இப்படி ஒரு மாணவனை அவர் தமது இருபத்தைந்து வருட ஆசிரிய வாழ்வில் சந்தித்தாரில்லை.

"நான் இவனைக் கவனிக்கிறன். நீர் ஒரு 'பிறிவ்வேக்ற்' ஓடை போய்க் காயத்திற்கு டிஸ்பென்சரியிலை மருந்து கட்டிக் கொண்டு வாரும்..." என்று கூறி மீனாவையும் அவளது சிநேகிதிகளையும் வெளியே அனுப்பிய அதிபர் வசந்தனின் வகுப்பாசிரியை திருமதி கேதீஸ்வரனைக் கூப்பிட்டனுப்பினார்.

அவர்கள் இருவரும் ஆங்கிலத்தில் உரையாடியதில் அவனுக்கு அதிகமாய் ஒன்றும் புரியவில்லை.

'ஜுவினைல் டெலிங்குவன்ட்...' என்னொரு சொல் அடிக்கடி கேட்டது.

அவன் பறித்துக் கொண்ட பிரம்புடன் வெளியேறித் தைரியமாய் நடந்து வகுப்பறைக்கு வந்தான்.

"லெஃப்ற்... றைற்... லெஃப்ற்... ஜுவினைல் டெலிங்குவன்ற்... லெஃப்ற்.... லெஃப்ற்..."

அதிபரின் பிரம்புடன் கம்பீரமாய் நடந்து அவன் வகுப்பறைக்குள் வருவதைப் பார்த்து... அவனை ஒரு 'ஹீரோ....' போல நினைத்து... அந்தப் பார்வையின் அர்த்தங்கள் பற்றி அவனுக்குத் துப்பரவாக அக்கறையில்லை.

"ஸ்ரீதரனைப் பாக்கிறியள்... கோபியைப் பற்றிக் கதைக்கிறியள்... கண்ணனை ரசிக்கிறியள்... இண்டைக்கு ஒருக்கா என்னையும் எல்லாரும்..."

ஆங்கில ஆசிரியர் வகுப்பறைக்கு வந்தார்.

"சேர்... ஜுவினைல் டெலிங்குவன்ற் எண்டால் என்ன கருத்து?" அவன் திடீரென எழுந்து நின்று கேட்ட போது, அவருக்குத் தலையும் புரியவில்லை. காலும் புரியவில்லை.

"ஏன் கேக்கிறீர்? 'ஜீவினைல் டெலிங்குவன்ற்' எண்டால் பால்யக் குற்றவாளி எண்டு கருத்து..."

"ஓ......சும்மா கேட்டனான்...."

அச்சுவேலிக்குப் போகும் வழியில் வருகிற பால்யக் குற்றவாளிகள் பாடசாலை அவன் நினைவுக்கு வந்தது. அங்கே தான் இவனையும் அனுப்பப் போகிறார்களோ?

அனுப்பட்டும்.

மாலையில் கல்லூரி விட்டதும், பிரம்பை நாலு துண்டாக முறித்து எறிந்து விட்டு வீடு நோக்கி நடந்தான். வழியில் வாசிகசாலையில் நின்று 'பந்தடி' பார்க்கலாம். ஆனால் அப்பா மணிக்கூட்டை முன்னால் வைத்துக் கொண்டு உட்கார்ந்திருப்பார். மூன்று நாற்பதுக்கு அவன் வீடு போய்ச் சேராவிடில், "எங்கை நிண்டிட்டு வாறாயடா?" என்ற அவரது குறுக்குவிசாரணையில் இருந்து தப்பவே முடியாது.

அவனைப் பொறுத்தவரை வீடு ஒரு சிறைக் கூடம். அங்கிருந்து எங்கேயும் போக முடியாது. அவன் அங்கு வாழும் ஒரு மரக் கட்டை!

அந்த நாலு சுவர்களுக்குள்ளிருந்து அவன் எப்போதும் படிக்க வேண்டும். எதைத்தான் படித்துத் தொலைப்பது? மரக்கட்டை எப்படிப் படிக்கும்?

ஒரு நாள் ராணிமுத்து வாசித்ததை அப்பா கண்டு விட்டார். மரக்கட்டைக்கும் கூட வலிக்கக் கூடிய தண்டனை கிடைத்தது. அவனது உலர்ந்த மனம் அன்றிலிருந்து மேலும் உலர்ந்து போனது. அதன்பின் அவனது அறைக்கு ஒவ்வொரு நாளும் 'செக்கிங்' நடக்கும். பாடப் புத்தகம் தவிர, வேறெதுவும் வைத்திருந்தால்.... கழுகுக் கண்கள்...! அவர் எப்படியும் கண்டுபிடித்து விடுவார்.

"அவனுக்கு வயது வந்திட்டுது. இனிக் கண்டிப்பாய் இருக்க வேணும் அவனோட..."

"இந்த வயதிலை படிக்காட்டிப் பிறகு கஷ்டப்படுவான் நல்லா..."

"இந்த வயதிலை கண்ட பெடியளோடை ஊர் சுத்த விடப்பிடாது..."

"சினிமாப் பைத்தியம் இப்ப தொடங்கினா... பிறகு ஒண்டும் மிச்சமில்லை..."

"இந்த நாளையிலை, கதைப்புத்தகம் வாசிச்சு ருசி கண்டானெண்டால் பிறகு நிப்பாட்ட ஏலாது..."

"சந்திக்குச் சந்தி நிண்டு கதைக்கிற பழக்கம் இப்பத்தைப் பெடியளுக்கு... அதுக்கு இவனை விடப்பிடாது..."

இந்த வசனங்களை அடிக்கடி அப்பா சொல்லும் போது கேட்க இவனுக்கு 'விசர்' வரும். சம்மட்டியால் யாரோ ஓங்கி அடித்தது போன்ற வேதனை நெஞ்சைக் கவ்வும். ஆனாலும் ஒன்றும் எதிர்த்துக் கதைக்க முடியாது. ஒரு நாள் ஒரு வார்த்தை திரும்பிச் சொல்லிவிட்டதற்கு அப்பா 'பூட்ஸ்' காலால் போட்டு உதை உதையென்று உதைத்து விட்டது சீவியத்தில் அவனால் மறக்க முடியாது.

அப்பா 'பொலிசா'க இருந்து 'றிரையர்' பண்ணியவர் என்பதற்கு இந்த 'உதை' தவிர வேறு சாட்சி தேவையில்லை.

அம்மா ஒரு சடம்! வாழ்க்கையைப் பெரும் சுமையாகச் சுமப்பது போன்ற மௌனம். அப்பா எது செய்தாலும் அது சரியாத்தான் இருக்குமென்ற எண்ணமுந்தான். அம்மா கதைப்பது மிக அருமை! ஏன் அவனுந்தான்....!

வீட்டிற்குப் போய்ச் சேர்ந்த நீண்ட நேரமாய் அவனுக்கு மனதில் ஓர் உறுத்தல் கலந்த மகிழ்வு இருந்து கொண்டேயிருந்தது.

அவனது பிரத்தியேக உலகங்கள் யாவும் நொருங்கி விட வழக்கம் போலவே... அறையில் அடைபட்டுக் கிடந்த போது....

வெளியே பேச்சுக் குரல்!

யார் இது? கேதீஸ்வரன் ரீச்சர்!

'அம்மாடி.... இவ ஏன் இஞ்சை வந்தவ இப்ப? வேறை என்னத்துக்கு... நான் பிளேட்டாலை வெட்டினதை அப்பாவுக்குச் சொல்ல... பிரம்பு பறிச்சதை...'

அவன் இன்றுடன் தொலைந்தான்!

உறுத்தல் கலந்த மகிழ்வு இப்போது வேதனை கலந்த நடுக்கமாகி விட்டது. தரை பிளந்துவிடத் தலைக்குப்புற விழுவது போன்ற உணர்வு! வீட்டைவிட்டு ஓடி விடலாமா? அவன் விரித்திருந்த பக்கத்தை மூடிவிட்டு மெதுவாக எழுந்தான். பூனையைப் போலப் பதுங்கி வெளியே வருவதற்கும், ரீச்சர் கூப்பிடுவதற்கும் சரியாக இருந்தது.

"வசந்தன்....! வசந்தன்! எங்கை நான் உம்மடை வீட்டை வந்திருக்கிறன்... உம்மைக் காணேல்லை..."

'என்ரை குழப்படியை அப்பாட்டைச் சொல்ல வந்தவ ஏன் இவ்வளவு அன்பா என்னைக் கூப்பிட வேணும்? அப்பாட்டைச் சொல்லிப் போட்டுப் போறது தானே....!'

விலகிப் போக முடியாமல் அவன் முன்னால் வந்து நின்றான்.

"எப்பிடி... வசந்தன் பள்ளிக் கூடத்திலை குழப்படியோ? ஒழுங்காய்ப் படிக்கிறானோ...?"

அப்பா கேட்க, இவனுக்குக் குருதியெல்லாம் உறைந்து விட்ட உணர்வு!

"ஓ... அவன் படிக்கிறான். இப்ப முந்தியைவிடப் படிப்பிலை கவனம். வீட்டிலை என்ன செய்யிறானெண்டு அறியத்தான் வந்தனான்."

இதென்ன? அவன் காண்பது கனவா? அன்றி நனவா? "வீட்டில அவன் ஒரு குழப்படியும் செய்யேலாது... நான் வலு 'ஸ்ரிக்ற்' அவன் 'ஸ்கூலா'லை வந்தால் உந்த அறையை விட்டு எங்கையும் போக ஏலாது. படிக்கத்தான் வேணும்..."

"ஓ...... அப்பிடித்தான் நானும் எதிர்பார்த்தன். நான் எதிர்பார்த்தது சரி. நீங்கள் கண்டிப்பாய் இருந்தாலும் அவன்ரை அம்மா அன்பா இருப்பாவெண்டு நினைக்கிறன்."

"சீ......சீ.... அன்பெண்ட கதையே இல்லை. சும்மா செல்லம் கொட்டிப் பிள்ளையளைப் பழுதாக்கப்பிடாது பாருங்கோ. நான் அவட்டையும் சொல்லியிருக்கிறன். தேவையில்லாமல் அவனோடை கதைக்கப்பிடாதெண்டு. அவ என்ரை சொல்லை மீற மாட்டா" அப்பா பெரிதாகச் சிரித்துத் தன் வெற்றியை நிலைநாட்டிக் கொள்கிறார்.

"நான் உங்களோடை பிறகு ஒரு நாளைக்கு வந்து ஆறுதலாக் கதைக்கிறன்..."

ரீச்சர் போய்விட்டா.

போகும்போது இவனைப் பார்த்து ஒரு சிரிப்பு!

வாழ்வுக்கும் இவனுக்கும் என்ன பகைமை என்று அறியத் தான் வந்தாவோ?

இரவும் இதே சிந்தனை தான்! கனவிலும்!.... இவன் மீனாவைப் பிடித்து அவள் முகமெல்லாம் கீறிச் சட்டையைக் கிழித்துப் போடுகிறான்.

கனவு கலைந்த பின் ஓர் உணர்வு! அவளை நாளைக்கு அப்படித்தான் செய்ய வேண்டும்! அவள் ஏன் 'பிரின்சிப்பலி'டம் போய்ச் சொன்னவள்? மூச்சை அடைக்கும் ஆத்திரம் இவனுக்கு!

வக்கிர உணர்வுடனேயே அடுத்த நாள், பாடசாலைக்குச் சென்றான்.

போய்ச் சேர முதலே 'ரீச்சர்' அவனைக் கூப்பிட்டா ஏன்...? ஒருவேளை இனித்தான் அடி.... கிடி.... ஏச்சு.. பேச்சு...?

"தம்பி வசந்தன்... டிப்போவிலை போய் ஒரு பேனை வாங்கியாரும்... இந்தாரும் காசு..."

இதுவரை ஒருவரும் இவனைத் 'தம்பி' என்று கூப்பிட்டதில்லை. ஒருவரும் அவனை நம்பிக் காசு கொடுத்ததுமில்லை.

அவன் 'தறதற' வென்று முழுசிக் கொண்டே அந்த வேலையைச் செய்து முடித்தான்.

முதல் 'பீரியேட்' ரீச்சர் தான்!

"என்ன வசந்தன் விளங்கிச்சுதா.....?"

"வசந்தன் கொப்பியைக் கொண்டாரும் பாப்பம்..."

"வசந்தன் இண்டைக்கு வடிவான 'சேர்ட்' போட்டிருக்கிறார் என்ன?"

"வசந்தன் இண்டைக்கு எல்லாக் கணக்கும் சரியாச் செய்திட்டார். கெட்டிக்காரன்..."

அவனால் நம்பத்தான் முடியவில்லை! ஒருவேளை ரீச்சர் நடிக்கிறாவோ? ரீச்சர் மனம் நிறையத்தான் பேசுகிறாரென்பதை அந்தக் கண்கள் சிரித்து உணர்த்து கின்றனவே?

மீனாவுக்குச் செய்ய நினைத்ததைச் செய்யவிடாமல் ஏதோ ஒன்று அவனைத் தடுத்து விட்டது.

அவனை அவ்வாறு சாந்தமடையச் செய்த....

# பிறழ்வின் தோற்றம்

நானோ? ஓம் சாப்பிட்டனான். புட்டும் மற்றது பயித்தங்காக் கறி இரவான் இருந்தது. அம்மா தந்தவ வடிவாச் சாப்பிட்டிட்டுத் தான் பள்ளிக்கூடம் வந்தனான். ஏன் கேட்டனியள்? சும்மா கேட்டனியளோ? அதொண்டு எங்கட அம்மா காலமை, இரவு - இரண்டு நேரம் சாப்பாடு வடிவாத் தருவ. இரண்டு நேரத்துக்கு மேலை சாப்பிட்டா பேத்தை வண்டிவைக்கும் எண்டு சொல்லுவ.

எங்கட முன்னால் வீட்டுப் பெடியன் ரஞ்சன் ஆள் ஒரு ஊமல் பெடியன் தானே - ஆளைப் பாத்தனியளே என்ன மாதிரிப் பேத்தை வண்டி! அவைக்குச் சாப்பாட்டுக்கும் கஷ்டந்தான். அவன் கண்ட நேரமும் எங்கினையும் களவெடுத்தும் தின்னிறது. அதைப் பாத்துத் தான் அம்மா எங்களுக்குச் சொல்லுறவ கண்ட நேரமும் சாப்பிடப் பிடாது எண்டு.

## கோகிலா மகேந்திரன்

அப்பா என்ன தொழிலோ? ஏன் நீங்கள் அப்பாவைப் பற்றித் தேவையில்லாமல் கேக்கிறியள்? எங்கடை அப்பாவோடை நாங்கள் கதைக்கிறேல்லை. சரியோ? குடிச்சுப்போட்டு வந்து நெடுகவும் எங்கடை அம்மாவோடை சண்டை பிடிக்கிறவர் - அப்படியான ஆளோடை என்னத்தைக் கதைக்கிறது?

ஆய்க்கினை தாங்கேலாமல் அம்மா அப்பாவை ஒருக்காக்காவல் துறையிலை பிடிச்சுக் குடுத்தவ. அவங்களையும் ஏதோ கெஞ்சி மண்டாடியாக்கும் பிறகு காவல் துறை வெளியிலை விட்டிட்டுது இவரை. அவர் ஒழுங்கையிலை வந்து நிண்டு. "எடியே பாத்தியேடி.... என்னை விட்டிட்டாங்கள். நான் உன்னை என்ன செய்யிறன்பார்" எண்டு கத்தினவர்.

இல்லை... இல்லை வெருட்டில்லை. அப்ப அவரை விடேக்கை... அம்மா இஞ்சை தோட்டத்திலை பயறு, உழுந்து எல்லாம் விதைச்சிருந்தவ. சரியோ? அப்ப, இவர் அதை ஒண்டும் வெட்டவிடாமல் கரைச்சல் படுத்தி, திருப்பியும் அம்மாக்கு அடிச்சு அப்பிடிப் பெரிய பிரச்சினை அப்ப, அம்மா திரும்பியும் காவல் துறைக்குச் சொல்லி அவங்கள் பிடிச்சுப் பேந்தும் உள்ளுக்குப் போட்டிட்டாங்கள்.

என்ன? மேசையிலை ஏறிறதும் இறங்கிறதுமா நிக்கிறனோ...? ஓ..... அப்பிடித்தான் வகுப்பிலை ஒரு இடத்திலை இருக்கமாட்டன். அது தான் ரீச்சரும் என்னைக் குளப்படி எண்டு அடிக்கிறவ.

ரீச்சற்றை அடி எனக்கு நோகிறேல்லை. ஏனென்டா அப்பாட்டை வாங்கிப் பழக்கந்தானே. எது? அப்பான்ரை அடியோ? ஓ... அப்பாடி அடியெண்டா... நினைக்கேலாத அடி. அப்பிடியே முதுகைப் பிடிச்சுக் குத்துவார். சிலவேளை அழுதா... அடி இன்னும் கூட விழும். எனக்கு மட்டுமில்லை. தங்கச்சிக்கு.... மற்றது எங்கடை கடைக்குட்டித் தம்பிக்குக் கூட விழும். அப்ப, அம்மா என்ன செய்வ எண்டா... ஆள் வர.. எங்களைப் பத்தைக்குள்ளே ஒழிச்சு விட்டுட்டு அதுக்குள்ளைதான் சில வேளை சாப்பாடும் கொண்டு வந்து தருவ.

ஒரு நாள் பாருங்கோ.... அம்மாக்கு கிளி சிறியாத் தடியாலை அடிச்சு... அந்தத் தடி அப்படியே நெஞ்சைச் சுத்திப்பிடிச்ச மாதிரி காயம், அப்படியே பதிஞ்சுப் போச்சு.. இப்பிடி... ஓ... அதுக்குப் பிறகு அம்மாக்கு ஒரே நெஞ்சுக்குத்துவாறது....

ஆர்... நானோ... ஓ... கோவம் வந்தால் வகுப்பிலை பெடியளுக்கு அடிப்பன்... அவை ஒருத்தரும் என்னோடை செருக ஏலாது. சரியோ....

ஓ... நான் கதையைப் பாதியிலை விட்டிட்டன். பிறகு ஒரு நாள் அம்மாக்கு இவ்விடத்திலை குத்தி... அம்மாக்குச் சாப்பிட ஏலாது... பேந்தொருநாள் காலை அடிச்சு... கால் வெடிச்சுக் கொஞ்ச நாள் நடக்க மாட்டாமலும் இருந்தவ.

அப்ப... எனக்கு அப்பா எண்டாலே பிடிக்காது. எங்களுக்குத்தான் ஒண்டுமில்லாட்டிலும் இவன் குட்டி...

சின்னத்தம்பிக் கெண்டாலும் ஒரு விசுக்கோத்துப் பெட்டி எண்டாலும் ஒரு நாளும் வாங்கிக் குடுக்கேலை அவர்.

அது தானே... அப்ப எங்கடை தங்கச்சி ஒரு நாள் ஒரு பொல்லாங்கட்டையாலை தூக்கி அப்பாக்கு எறிஞ்சவள்; ஆத்திரத்திலை.

எனக்கோ... எனக்கு இப்ப சரியாப் பத்துவயது. நான் ஐஞ்சாம் வகுப்புப் படிக்க வேணும். இப்ப... ஆனா நான் மூண்டாம் வகுப்புத்தான் படிக்கிறன். எனக்கு இடையிடை முட்டு வருத்தமும் வாறது. பள்ளிக்கூடமும் ஒழுங்காவாறேல்லைத்தான். எந்த நாளும் சளி. மூக்காலை சளி வடியிறதெண்டு பெடியள் என்னை "மூக்குச் சளி" எண்டு பட்டம் தரிப்பங்கள். கொஞ்ச நேரம் கேட்டுக் கொண்டிருப்பன். பேந்து பட்டம் தரிக்கிற ஆக்களுக் கெல்லாம் பிடிச்சு நல்ல சாத்துப்படி கொடுத்துடுவன். அந்த நேரத்திலை தான் ரீச்சரிட்டையும் அடி வாங்கிறனான். எனக்கு 'முகுந்தன்' எண்டு நல்ல பெயர் ஒண்டு இருக்கத்தக்கனையா 'மூக்குச் சளி' எண்டு கூப்பிட்டால் என்ன ஆத்திரம் வரும் சொல்லுங்கோ பாப்பம்! நுளம்புக் கடிக்கை கிடந்து மலேரியாவும் அடிக்கடி வரும். பிறகு மலேரியா குளிசை போட மாறும். பேந்து வரும். காச்சல் வரேக்கை சும்மா குலைப்பன் அடியெண்டாத் தாங்கேலாமல் இருக்கும். இந்தப் பிரச்சினைகளுக்குள்ளை நான் ஊத்தையா வாறனாம் எண்டு ரீச்சரும் பேசிறா.

ஆ...... எங்களுக்கோ? சொந்தக்காரரோ? இருக்கினம். ஆனாநாங்க ஒரு வீட்டையும் போறேல்லை. ஆக ஒரே

ஒரு பெரியம்மா வீட்டை தான் போறனாங்கள். எங்கடை அம்மம்மா கலா அன்ரி வீட்டிலை தான் இருக்கிறா. நாங்கள் அங்கையும் போறேல்லை. அப்பாவாலை எல்லாரும் எங்களோடை கோவம். அப்பான்ரை ஆக்கள் ஒருத்தரும் கதைக்கிறேலை. ஆக மாமி மாத்திரம் இந்தியாவிலை இருந்து வந்த நேரம் கதைச்சவ ஆ.....? இல்லை. இல்லை. பிரச்சனை இல்லை. நீங்கள் இருங்கோ நான் இதிலை நிண்டு கதைக்கிறன். நிண்டு கதைக்கிற தான் சுகம்.

இவ்வளவு நேரமாக் கனகதையள உங்களுக்கு நான் சொல்லிக் கொண்டு வந்தனான். ஒரு கதை மட்டும் சொல்லேல்லை. என்னெண்டா.... சரியோ... முந்தி ஒரு நாள் அம்மாவை சரியோ அப்பா கூட்டிக் கொண்டு கொழும்புக்குப் போனவராம். சரியோ... அப்ப... அங்கை ஒரு பெரிய கோயில் மடம் மாதிரி ஒரு இடத்திலை தானாம் நிண்டவையாம் சரியோ.... நிறையச் சனங்களும் படுத்திருந்ததுகளாம். சரியோ.. அப்ப இரவு சாப்பாட்டுப் பாசல் எடுத்தரச் சொல்லி அம்மா ஐந்நூறு ரூவாத் தாள் குடுத்தவவாம். அவர் அதைக் கொண்டு போய்க் குடிகுடியென்டு குடிச்சிட்டு இரண்டு சாப்பாட்டுப் பாசலோடை மிச்சக்காசும் இல்லாமல் வந்தவராம். சரியோ.. அப்ப... மேலை வௌவால் இருக்கெண்டிட்டு அம்மா கொஞ்சம் தள்ளிப்படுத்தவாவம் சரியோ..அப்ப இவர் வந்து "எடியே... ஏன் அங்க போனனி... நான் விட்ட இடத்தை விட்டிட்டு ஏன்ரி போனனி" எண்டு அவ்ள சனத்துக்கையும் கத்த அதுகள் எல்லாம் கீயோ மாயோ

எண்டு எழும்பீற்றுதுகளாம். அண்டைக்கும் அம்மாக்குப் போட்டு அடி அடி எண்டு அச்சவராம். சரியோ....

சனங்கள் ஆரோ பொலிசுக்குச் சொல்லிப் போட்டுதாம். பொலிசு வந்து இவரைப் பிடிக்கப் பிறகு எங்கண்ட அம்மா தான் "விடுங்கையா, விடுங்கையா" எண்டு குழறினவாம். பிறகு அவங்கள் விட்டிட்டாங்களாம்.

அப்ப, நெடுக இப்படித்தான். அம்மா சொல்றவ..... கலியாணம் கட்டின காலத்திலை இருந்து இப்பிடித் தானாம்.

அப்பாவை இப்ப காவல்துறை பிடிச்சு வைச்சிருக்குத் தானே. அப்ப அவங்கள் சிலநேரம் ஏதும் சாமான் வேண்டிக்கொண்டு வரச் சொல்லிவிட்டால் அவர் அதுக் கிடையிலை ஒருக்கா இந்தப் பக்கம் வந்து தங்கச்சியைத் தேடி "எடியே ஓடாதை இந்தா" எண்டு சொல்லிப் போக்கேற்றுக் காலை காசு பத்து ரூபா எடுத்து நீட்டினவராம்.

அப்ப தங்கச்சி வேண்டுமே? அது எனக்கு வேண்டாம் எண்டுதாம். சரியோ.. 'இதைப்பிடி, ஓடினியெண்டால் அடிப்பன், எண்டவாராம். தங்கச்சி ஒழிச்சு ஒழிச்சு ஓடி வந்திட்டுது.

தங்கச்சி பாவம்... அது இப்பகன நாளா வருத்தமாக் கிடந்தது. தங்கச்சியை அம்மன் தொட்டிட்டுது எண்டு அம்மா தங்கச்சியைக் கொண்டு போய் கோயில் அம்மாட்டைக் காட்டி அவ திருநீறும் போட்டு நூலும் கட்டி விட்டவ. இப்ப அதுக்குப் பிறகுதான் தங்கச்சிக்குக்

கொஞ்சம் சுகம். பிறகு இவர் வெருட்டினால் எப்படிப் இருக்கும்.

முந்தி ஒரு நாள் தங்கச்சி சின்னப்பிள்ளையாய் இருக்கேக்கை தங்கச்சிக்கு அடிச்சுப் போட்டு, கேற்றுக் கைதூக்கிக் கொண்டு போய் வைச்சிட்டு அப்பா கடந்த வராம் ...... அது தங்கச்சிக்கு இப்ப சரியான கவலை கடந்த வாரம்... சரியே.

இப்ப நானும் பள்ளிக்கூடத்திலை எல்லாருக்கும் அடிக்கிறன் எண்டு என்னோடை கதைக்கச் சொல்லி வேறை ஒரு ரீச்சரை விட்டிருக்கு. எனக்குக் கோபம் வந்தா அடிப்பன் எண்டு நான் அந்த ரீச்சருக்கும் சொன்னனான்.

அம்மா சொன்னவ.. இந்தக் கரைச்சலுக்கை இனியும் இருக்கேலாதாம். யாழ்ப்பாணம் போய் குஞ்சியம்மா வீட்டிலை இருப்பம் எண்டவ.

ஓ.... இந்த உழுந்தை வெட்டி அடிச்சுக் கொண்டு நாங்கள் போடுவம். சரியோ... எங்கடை சித்தப்பா ஆக்களுக்கும் நாங்கள் போறதுதான் விருப்பம்... ஏன் சொல்லுங்கோ... அப்பதானே எங்கடை காணியளைப் பிடிக்கலாம். நாங்கள் ஆரையாவது இருத்திப்போட்டுத் தான் போவம். எங்கடை அம்மா நல்லாய்தைப்பா. காணி இல்லாட்டியும் அவ தைச்சு உழைப்பா. தையல் மிசினை யாழ்ப்பாணம் கொண்டு போவம். எங்கடை அம்மா தைக்கிறதுக்கு கொஞ்சக் காசுதான் எடுக்கிறவா. ஒரு பாவாடை தைக்க வேறை இடத்திலை ஐம்பது ரூபாவாம். எங்கடை அம்மா 30 ரூபா தான் எடுக்கிறவா. அதாலை

ஆட்கள் விரும்பி வருவினம். அண்டைக்கு ஒரு சட்டை தைச்சுக் கொடுக்க அந்த அன்ரி எல்லாருக்கும் காட்டினவ..... வடிவு எண்டு. அப்ப யாழ்ப்பணத்திலையும் கனபேர் தைக்க வருவினம். நாங்கள் பள்ளிக்கூடம் வந்தா அம்மா தைச்சுக் கொண்டிருப்பா.

அம்மாக்குத் தனிய இருக்கவும் பயமில்லை. சரியோ... எந்த இரவிலையும் எங்கையும் போவா. வருவா. அப்பாக்கு மட்டும் தான் பயம். வேறை முனிக்குக் கூட அம்மாக்குப் பயமில்லை.

அப்ப நான் போட்டு வரட்டே... கன நேரமாய் கதைச்சுக் கொண்டு நிண்டுட்டன். யாழ்ப்பானம் போனா அங்கையும் சிலவேளை சந்திப்பம் தானே... வாறன்... ஆ......

# இந்நூலாசிரியரைப்பற்றி



கோகிலா மகேந்திரன்

திருமதி. கோகிலா மகேந்திரன் அவர்கள் கல்வி உலகிலும், ஆக்க உலகிலும், உளவளத் துணையாளர் துறையிலும் நன்கு அறியப்பட்டவர். சிறந்த விஞ்ஞான ஆசிரியர், ஆற்றல் மிக்க அதிபர், திறமை மிக்க கல்வி நிர்வாகி. புகழ் பூத்த நாவல், சிறுகதை, நாடக எழுத்தாளர், பண்பட்ட நடிகர், நெறியாளர். உள்ங்கவரும் பேச்சாளர். ஆரோக்கியமான விமர்சகர்.

இவ்விதப் பல்துறைப் பரிமாணம் கொண்ட இவர் காலத்தின் தேவையறிந்து மக்கள் உளவள மேம்பாட்டுக்காகத் தனது பன்முக ஆற்றல்களையும் பயன்படுத்தி வருகின்றார்.

உளவளத் துணையாளர்களைப் பயிற்றுவிக்கும் இவர் 'எங்கே நிம்மதி', 'மனச்சோர்வு' ஆகிய உளவளத்துணை நூல்களையும் வெளியிட்டுள்ளார். சிறுவர் உளவள மேம்பாட்டுக்கான 'சிறுவர் உளநலம்', 'மகிழ்வுடன் வாழ்தல்', 'சின்னச்சின்னப் பிள்ளைகள்', 'உள்ளக்கமலம்', 'சுனாமியில் சிந்திய சித்திரங்கள்', 'முற்றத்தில் சிந்திய முத்துக்கள்' ஆகிய நூல்களின் இணைப்பதிப்பாசிரியராகவும் விளங்குகின்றார்.

ஆற்றுகைக் கலையினூடாக வெளிப்பாட்டுச் சிகிச்சைமுறை, நாடகச் சிகிச்சை உளமறி நாடகம் கலந்துரையாடல் அரங்கு, படிம அரங்கு, மந்திரக்கடை முதலான புதிய உத்திகளை உளவளத் துணையாளர்களுக்குப் பயிற்று வருகின்றார், வெற்றியும் கண்டுள்ளார். தனது உளவியல் அறிவையும், கலைத்துறை ஆற்றல்களையும் கொண்டு சிறந்த சீர்மியராக விளங்கும் கோகிலா அவர்கள், மக்கள்நலமேம்பாட்டுக்காக உழைக்கும் ஒரு முன்மாதிரியான சமூக முன்னோடியாவார்.

**கலாபூஷணம், சைவப்புலவர்**
**சு.செல்லத்துரை**